
கல்கி

KALKI 19.9.1971 40 காசு




she is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE
CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century —For 100% cotton textiles


மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்
OOB
BLUE
BEST ULTRAMARINE
ULTRAMARINE & PIGMENTS LTD.
ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும்
கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே
சீராக பால்போல் பளிச்சிடுகின்றன.
உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டு
கள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை
வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான
வழி இது. நீலப்புள்ளி விழாது, மஞ்சள்
திட்டு தெரியாது.
ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத்
தயாரிப்பு இந்தியாவின் மிக நவீன அல்டிராமரைன்
தொழிற்சாலையில் உருவானது
தயாரிப்பாளர்:
அல்டிராமரைன் & பிக்மென்ட்ஸ்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53
UPLJ6546



தலைவலியா?

அனாஸின்

விரைவிலே குணம் பெற மேலானது.

ஏனெனில் அது சக்தி வாய்ந்தது; நம்பகமானது.



"அனாஸின் தலைவலியை விரைவிலே அகற்றுகிறது" என்று அடித்துக் கூறுகிறார், பம்பாய் ஆபீசர் திரு. எஸ். என். எஸ். ராவ். "என்னுடைய கைப் பெட்டியில் எப்போதும் ஒரு ஸ்ட்ரிப் அனாஸின் இருக்கும்"

சக்தி வாய்ந்தது—ஏனெனில், உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது—ஏனெனில், டாக்டரின் நம்பகமான மருந்தைப் போல் பல மருந்துகளின் கலவையே அனாஸின். அதை குழந்தைகளுக்கும் கொடுக்கலாம்—எல்லா மருந்துகளுக்கும் கேட்பது போல உங்கள் குழந்தைக்கான இதன் சரியான அளவையும் டாக்டரிடம் கேளுங்கள்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகள்
மற்றும் நோவுகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி,
பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி

அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி



Regd User of TM: Geoffrey Manners & Co., Ltd.

A-57

கல்கி

பொருளடக்கம்



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

விரோதிகிருது புரட்டாசி 3 - செப்டம்பர் 19, 1971

சந்தா விவரம்:	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 45-00	ரூ. 22-50

யாவரும் விரும்புவது

அசோகா

சுகந்த பாக்குத்தூள்

No 1506 ASOKA

வேறு எந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் பெறுங்கள்

உபயோகித்துப் பாருங்கள்! லிப்டன் ரூபி டஸ்ட் வேறெந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் தருகிறது.


அது மட்டுமல்ல! ரூபி டஸ்ட் தேயிலையைக் கொண்டு நிறம், மணம், குணம் நிறைந்த ருசி மிகுந்த பானத்தை உடனடியாகப் பெறலாம்.

எனவே லிப்டன் ரூபி டஸ்ட் "தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்" என்பதில் அதிசயம் எதுவும் இல்லை.



லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்



LIPTON

லிப்டன் என்றாலே நல்ல டீ

பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே புதிதாகவும், மணத்துடனும் திகழ்கிறது

LRDC-3 TAM

கல்கி

மலர் 31
இதழ் 8

தமிழ்த் திருநாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
—பாரதியார்

சாராய சகாப்தம்



ஆகஸ்ட் பதினைந்தொரு விழாவல்ல
ஆகஸ்ட் முப்பதே தமிழ்நாட்டு விழா.
தாழ்ந்தவர் உயர்ந்தார் மதுவிலக்கு வந்ததும்;
வீழ்ந்தவர்கள் முன்போல் வாட
ஆழ்ந்த அறிஞர் அண்ணாவை மறந்துவிட்டு
வள்ளுவர் வாக்கைக் காற்றிலே பறக்கவிட்டு
வரம் பெற்றுப் பதவி யடைந்த கருணையார்
கள்ளும் சாராயமும் தந்தார்.
அரங்கேற்றினார் கடைகளை ஆயிரக் கணக்கில்,
போற்றுக முதல்வர் பணியை!
சோற்றுத் திண்டாட்டம் ஏழை மனைகளில்,
சாராயக் கடைகளில் பெரும் கொண்டாட்டம்!
போற்றுக தமிழ் நாட்டு முதல்வரை,
சாராயக் கடைகளை அரங்கேற்றினார்
வரம்பெற்ற கருணைச் செல்வர்!

ராஜாஜியின் கருத்துக்கள்

சிலந்தி வலை !

மதுக்கடைகளைத் திறந்து வைத்த உடனேயே அந்தச் சரக்குக்கு ஏக கிராக்கி ஏற்பட்டிருப்பது கண்டு திரு கருணநிதி பூரித்துப் போயிருப்பார் என்பது என் எண்ணம். இது பரம துக்கமான விஷயம். சிலந்திப் பூச்சி வலை பின்னி ஈயை எளிதில் பிடித்து விழுங்குவது போல், ஏழைகளுக்கு ஆசை வலையை விரித்தாகி விட்டது. ஏழைக் குடும்பங்களில் சம்பாதித்துப் போடுகிற தலைமகனை மதுச் சிலந்தி சிறைப் பிடித்து விழுங்கி விடும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தச் சில தினங்களிலேயே ஈடுசெய்ய முடியாத பெரிய தீங்கை ஏழை சமூகத்துக்குச் செய்தாகிவிட்டது. நாட்கள் போகப் போக, போதைப் பானங்களின் ஆறையாட்டமும் ஓங்கும். இருபதாண்டுகளாக மதுவிலக்கை அனுஷ்டித்ததின் மூலம் அந்தஸ்தில் புதிய உயர்வைப் பெற்ற சமுதாயங்கள் மீண்டும் பாதாளத்தில் விழும். பணம், ஒழுக்கம், சமூக மதிப்பு எல்லாவற்றிலுமே இவை மறுபடியும் தாழ்நிலைக்குச் செல்லும்.

நூதனமான ஒரு விஷயம் என்றால் 'அது என்ன' என்று தெரிந்து கொள்வதில் இளைஞர்களுக்கு ஒரு குதூகலம் உண்டாகும். திரு கருணநிதியின் 'தய'வால் இப்போது பல வாலிபர்கள் தங்கள் வாழ்நாளில் முதன் முறையாக மதுவைச் சுவைக்கத் தூண்டுதல் கிடைத்திருக்கிறது. நம் சமூகத்தைச் சீர் குலைக்கும் இந்தக் கொடுஞ் செயலுக்கு மன்னிப்பு என்பதே கிடையாது.

மதுப்பழக்கம் கொடிது

ஆகஸ்ட் முப்பதாம் தேதி தொடங்கப்பட்ட மது மகோத்ஸவம் இன்னும்கூடச் சிறப்பாக நடந்திருக்கும். ஆனால் போதிய சாராய 'சப்ளை' இல்லாததால் இந்தத் திருவிழா முழு வெற்றி காணவில்லை. 'வெளி ராஜ்யங்களிலிருந்து சாராயம் வரவழைக்க ஏற்பாடு செய்து விட்டோம். எனவே இனி தட்டுப்பாடு இராது' என்று சர்க்கார் அதிகாரிகள் அபயம் தந்திருக்கிறார்கள். நெல்லிக்குப்பம் ஆலையில் நாள் முழுவதும் வேலை செய்து மது உற்பத்தி செய்வதாகச் சொல்லப்படுகிறது. நம் ராஜ்யத்திலேயே நெல்லிக்குப்பத்திலோ வேறிடத்திலோ சாராயம் தயாரித்தாலும் சரி அல்லது வெளியிலிருந்து வரவழைத்தாலும் சரி — இது ஒரு தேசிய நஷ்டமேயாகும். நல்ல உணவாக வேண்டிய பண்டத்தைப் பாழாக்கிப் புளித்து நுரைக்க வைத்து அல்லவோ கள்ளும் சாராயமும் செய்யப்படுகின்றன ?

கள் சப்ளை போதவில்லை. கள் இறக்குவதை விடப் பெரிய ஆலைகளில் சாராயம் காய்ச்சுவது எளிதாக இருப்பதால், சாராய உற்பத்தி அதிவிரைவில் முடுக்கிவிடப் படுகிறது. அதாவது, நல்ல உணவுப் பொருளான கரும்பு வெகு வேகமாக விஷமாக்கப்படுகிறது. மக்களும் கள்ளிலிருந்து சாராயத்துக்குத் திரும்பியிருக்கிறார்கள். அதாவது நச்சுப் பொருளான ஆல்கஹால் ஏழே சதவிகிதம் கலந்திருக்கும் கள்ளிலிருந்து ஐம்பது சதவிகிதம் கலந்துள்ள சாராயத்துக்குத் திரும்பியிருக்கிறார்கள். சாராயத்திலிருந்து கிடைக்கிற 'கிளுகிளுப்பு' தூர்க்கந்தக் கள்ளிலிருந்து கிடைக்காததாகையால், இவர்கள் பெருஞ் சாராயக் குடியர்களாகவே ஆவார்கள்.

கள், சாராய உற்பத்தி எந்த அளவுக்குப் பெருகுகிறதோ அந்த அளவுக்கு நம் ஏழைக் குடும்பங்களுக்கு விபரீதம் விளைவதாக அர்த்தம். இது ஒரு நாளோடு முடிந்து போகிற விபரீதம் அல்ல. நிரந்தர விபரீதமாகும். மதுப் 'பழக்கம்' என்பது ஏழை மக்களை நிரந்தரமாகப் பாழாக்கப் போகிறது. குடிக்கத் தொடங்குவது எளிது. ஆனால் பிறகு குடிப் பழக்கத்திலிருந்து மீளுவது மிகக் கடினம்.

சீனத்தின் பேராசை

கிழக்கு வங்கத்துக்கு எதிராக யாஹ்யா கானுக்கு உதவி தருவதற்குச் செஞ்சீன ராஜ நீதி நிபுணர்கள் மறுத்துவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. கிழக்கு வங்கம், மேற்கு வங்கம் இரண்டையுமே தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதுதான் சீனத்தின் கொள்கை என நான் பயந்தது மேற்படி செய்தியால் ஊர்ஜிதமாகி

நவராத்திரி நற்பணி

எங்கும் நிறைந்துள்ள பராசக்தி, ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களில் தன் ஆற்றலையும் அருளையும் மக்கள் எளிதில் கிரகிக்குமாறு புலப்படுத்திக் கொள்கிறாள். இவற்றில் விக்கிரகமாக மட்டுமின்றி, சாக்ஷாத் அவளாகவே பூரண ஆற்றலுடன், பூரண அருளுடன் பராசக்தி குடிகொண்டிருக்கிறாள் காஞ்சிபுரத்திலே, ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயத்திலே. பரம பக்தர்களும், தபஸ்விகளும், மகான்களும், ஞானிகளும், பிரம்ம ஸ்வரூபமாக ஆனவர்களும் காஞ்சி காமாக்ஷிக்குத் தந்துள்ள ஏற்றம் தனிப்பட்டது. இப்பேர்ப்பட்ட ஜகன்மாதாவுக்கு நவராத்திரியில் (செப்டம்பர் 20ந் தேதியிலிருந்து 29ந் தேதி வரை) அற்புதமான லட்சார்ச்சனை நடக்கிறது. வரப் பிரஸாதினியின் இன்னருளைப் பெற அடியார்களுக்கு அரிய வாய்ப்பு. ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவஸ்தானம், காஞ்சீபுரம் என்ற முகவரிக்கு ரூ. 8ம், தங்களது விலாசமும், பெயர், கோத்திரம், நட்சத்திரம் முதலிய விவரங்களும் அனுப்பி வைத்து, அர்ச்சனை செய்ய வேண்டிய தினத்தையும் குறிப்பிட்டால் அர்ச்சனைப் பிரசாதம் பெறலாம்.

றது. கம்யூனிஸ்ட் சீனம் என்னென்ன செய்யும் என்று நாம் ஒருகாலும் நிச்சயப் படுத்திக் கொள்ள முடியாது. ஒன்றுமட்டும் நிச்சயம்: செஞ்சீனம் எப்படியாகிலும் ஆசியா முழுவதையும் தன் ஆதிக்கத்தில் கொண்டு வரப் பேராசை கொண்டுள்ளது.

எதிர்க்க வேண்டும்

மது பானம் மக்களின் பகுத்தறிவை அழித்துவிடும். பெண்களின் மானத்துக்கு அபாயம் உண்டாக்கும். பலவித அக்கிரமங்கள் வளர்வதற்கு வழியாகும். இவற்றையெல்லாம் கவனிப்பது போலீஸ் அதிகாரிகளுக்குப் பெரும் தொந்தரவாகும். அரசாங்கத்துக்குப் பெரும் செலவும் ஆகும். இவற்றையெல்லாம் கவனிக்காமல் இருபது ஆண்டுகள் இருந்த மதுவிலக்கை அவசரச் சட்டத்தின் மூலம் ரத்துச் செய்து விட்டதைத் தமிழ் மக்கள் ஒருமுகமாக எதிர்க்க வேண்டும்.

கருத்தும் காரியமும்

அறிவுக்குப் பொருந்திய முடிவுகள் காண்பது எளிது. ஆனால் அதன்படி நடப்பதுதான் கடினமாக இருக்கிறது. நல்ல முடிவுகளைக்கூடச் செயலில் காட்ட முடியாதபடி சுயநலமும் உலகப் பற்றுகளும் குறுக்கிடுகின்றன. இத்தருணத்தில்தான் ஆண்டவனை வழிகாட்டியாகக் கொண்ட தலைவர்கள் தேவைப்படுகிறார்கள்.

அந்நிய ஆட்சிக்கு வெளிப்பட ஆதரவு தெரிவிக்காவிட்டாலும், அதை எதிர்க்காமல் மக்கள் சும்மா இருந்ததால்தான் பிரிட்டிஷ் ராஜ்யம் நடந்தது என்பதை எல்லோரும் உணர்ந்தே இருந்தனர்; ஆட்சியாளருடன் மக்கள் ஒத்துழைக்கா விட்டால் சுதந்திரம் கிடைத்து விடும் என்றும் தெரிந்து கொண்டிருந்தனர். ஆயினும் இந்தக் கருத்தைக் காரியமாக்கிக் காட்டுவதற்கு ஆண்டவனை வழிகாட்டியாகக் கொண்ட காந்தி ஒருவர் வரவேண்டியிருந்தது.


சத்தியம், பகவானின் அருள் ஆகிய இரண்டும் நம் தரப்பில் இருந்தாலே வெற்றி பெற முடியும். பகவான் இன்றிச் சக்தி இல்லை. சக்தியின்றி வெற்றியும் இல்லை. இங்கு சக்தி என்னும் போது ஆட்சியதிகாரச் சக்தியைச் சொல்லவில்லை. காந்தி தம் வாழ்க்கையில் காட்டிய ஆத்மிக சக்தியையே குறிப்பிடுகிறேன்.

இதற்கெல்லாம் அடிப்படை மக்களின் ஒழுக்கத்தை வளர்ப்பதுதான். மதத்தின் உதவி கொண்டே அதைச் செய்ய முடியும். பகவானை விட்டு விட்டு வெறுமே ஒழுக்கத்தை நிலைநிறுத்தப் பார்ப்பது நீடித்து நிற்பதில்லை. ஒழுக்க நெறிக்குத் தன்னைத்தானே போஷித்துக் கொள்ளச் சக்தி இல்லை. நாஸ்திக மதங்களாலோ, வெற்று லௌகிக அபிவிருத்தியாலோ நாம் இழந்துவிட்ட ஆத்மிக இன்பத்தைத் திரும்பப் பெற முடியவில்லை. தெய்வ நம்பிக்கையை வலியுறுத்தும் சமயம், சத்தியம் என்கிற இரட்டைக் காளை பூட்டினாலே வண்டி ஓடும்.

உலகை இயக்குகிற சக்தியை நம்மால் நிர்ணயிக்க முடியவில்லை. ஆனால் உலகப் போக்கு புதிராக இருக்கிறது. அதன் ஆதார சக்தியை அளவிட முடியவில்லை என்பதால், அந்தச் சக்தியை அடியோடு அலட்சியம் செய்து விடுவதற்கில்லை. அப்படிச் செய்வதால் உலகப் புதிருக்கு விடை கிடைத்து விடப் போவதில்லை. அந்த அளவிட முடியாத சக்தியைச் சிரத்தையுடன் நம்பி வழிபடுவதாலேயே புதிரைப் புரிந்துகொள்ள முடியும். இந்தியாவில் தோன்றிய நாஸ்திக மதங்களைச் சேர்ந்தவர்கள், அந்தந்த மத ஸ்தாபகர்களையே தெய்வமாக்கிச் சிரத்தையுடன் சமய வழிபாடு செய்து நிறைவு கண்டார்கள்.



அரசினரின் திட்டங்கள்தாம் பயிர் வளரக் காரணம் என்று யாரும் நம்பவில்லை.



நினைவு ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

கொலைக் குற்றம் செய்தவர்களுக்கு, தூக்குத் தண்டனை விதிப்பது தேவைதானு என்ற பெரியதொரு பிரச்னையை அடிப்படையாக வைத்து, ''நினைவு'' நாடகம் புனையப்பட்டிருக்கிறது. நாடகத்தின் சஸ்பென்ஸூம் அதுதான். இளைஞன் மது, 'தூக்குத் தண்டனை இருந்தால்தான் கொலைக் குற்றங்கள் கட்டுக்குள் அடங்கியிருக்கும்' என்று வாதாடுகிறன். அவன் அதிபர், 'தூக்குத் தண்டனை ரத்துச் செய்யப்பட வேண்டும்; அப்பொழுது தான் சந்தர்ப்பச் சாட்சியங்களை வைத்து ஒரு நிரபராதியைக் குற்றவாளியாக்கும் கொடுமை ஒழியும்' என்று வாதாடுகிறர். அவர் தம் கருத்தை வலியுறுத்த அவனையே கொலைக் குற்றவாளியாக்கிப் பிறகு தக்க ருசு ஒன்றினுல் அவனை விடுதலை செய்யத் திட்டமிடுகிறர். ஆனுல் தெய்வம் வேறென்று நினைத்துவிடுகிறது. அவர் எதிர்பாராதவிதமாகக் கார் விபத்தில் மாண்டு விடுகிறர்.

நான் இதற்கு மேல் கதையைச் சொல்ல மாட்டேன். நாடகத்தை நேரில் பார்த்து ரசிப்பதுதான் சரி. ஊரைச் சொன்னுலும் பேரைச் சொல்லக் கூடாது என்பார்கள். அதைப் போல் நாடகத்தின் எந்தப் பகுதியைச் சொன்னுலும் சஸ்பென்ஸைச் சொல்லக்கூடாதல்லவா?

நாடக ஆரம்பத்தில், பத்திரிகைக் காரியாலயம் வருகிறது. அதில் அப்பாவி உதவி ஆசிரியர்கள் வருகிறர்கள். மீண்டும் மீண்டும் மேற்படி காட்சி வருகிறது. நகைச்சுவைக்காக மேற்படி காட்சிகளைக் காட்டியிருக்கலாம் என எண்ணுகிறேன். ஆனுல், அவற்றைக் கண்டு நகைக்கவும் முடியவில்லை; சுவைக்கவும் முடியவில்லை. உதவி ஆசிரியர்களைப் பைத்தியங்களாகக் காட்டியிருக்க வேண்டாம். ஆசிரியரைக் கண்டதும் 'தடால்' என்று அவர் காலில் விழுவதும், அசட்டுப் பிசட்டென்று (ஹாஸ்யமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு) அசம்பாவிதமாக உளறுவதும் மூதல்தரமான அறுவை!

ஆபீஸ் பியூன் மரியாதைக் குறைவாக எல்லோரிடமும் பேசி ஹாஸ்யம் பண்ண முயல்வது.... அந்தோ பரிதாபம்!

ஆனுல் இடைவேளைக்குப் பிறகு, நாடகத்தில் கனம் ஏற்படுவதால் இந்த அறுவைத் தொல்லையை அனுபவித்து விடலாம்!

ஜயசங்கர்தான் கதாநாயகன் மது. மிகவும் அநாயாசமாக, அலட்டிக் கொள்ளாமல் நடிக்கிறர். பேச்சு, நடை, பாவனை எல்லாமே இயல்பாக இருக்கின்றன. கடைசிக் காட்சியில், மது குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்பட்டு விடுதலை அடைந்தபின்பு தன் காதலி ஷீலாவிடம் அவர் பேசும் 'சஸ்பென்ஸ்' காட்சியில் அவர் நடிப்பு உச்சகட்டத்துக்குப் போய் விடுகிறது. சபாஷ், ஜயசங்கர்!

நகைச்சுவைப் பாத்திரங்களிலேயே மேடையில் பார்த்துப் பழகிவிட்ட கூத்தபிரானை முற்றிலும் புதிய 'ரோலில்' பார்க்கிறேம்; நன்றுயிருக்கிறது.

ஷீலாவாக வரும் குமாரி பானுமதியிடம் துடிப்பையும் காண முடிகிறது; நடிப்பையும் காண முடிகிறது. மதுவிடம் பல்வேறு பிரச்னைகளைப் பற்றிச் சுருக்கமாக வாதம் செய்யும் திறமை ஒன்று போதும். சுவையாயிருக்கிறது.

குமாரி புவனு, சினிமா ஸ்டார் பிரமீளாவாக வந்து சக்கைப் போடு போடுகிறர். தளுக்கும், மினுக்கும், குலுக்குமாக அவர் அழகு நடை பயிலும்போது மேடைக்கே ஒரு தனி 'மவுஸ்' ஏற்பட்டு விடுகிறது. இந் நாடகத்தின் சிறப்பு அம்சம் சுவையான 'ஃப்ளாஷ் பேக்' காட்சிகள்தான். அது சினிமாவில்தான் சாத்தியம். எனினும் மேடையில், அதை மிகத் திறமையாகச் சுவை குன்றுமல் காட்டி வெற்றி பெற்றிருக்கிறர்கள்.

நாடகத் தயாரிப்பை ஏற்று வெற்றிகரமாகச் செய்திருப்பவர் 'இருள்' பத்து.

வசனங்களை மிகத் திறமையாக எழுதியிருக்கும் தூயவன் நம் பாராட்டுக்குரியவர்.

மதுவின் மனச்சாட்சி சுழலும் போது மேடையில் காட்சிகளையே சுழலவிட்டிருப்பது அரிய உத்தி. செலவு நிறையச் செய்து அந்தக் காட்சியைத் தயாரித்திருக்கிறர்கள். சினிமாக் காட்சி மாதிரி அதியற்புதம்.

காமேஷ் — ராஜாமணியின் இசை, திகில் நாடகத்துக்கு மேலும் திகில் ஊட்டுகிறது.

— காந்தன்



ஜெய் தியேட்டர்ஸாரின் நினைவு நாடகத்தில் எம். பானுமதி என். டி. குமார் ஜெய்சங்கர்



பதிவுபெற்ற டிரேட் மார்க்குகளான "கோகா-கோலா" "கோக்" ஆகிய இரண்டும் கோகா-கோலா கம்பெனியின் தயாரிப்பான ஒரே பானத்தைக் குறிப்பவை.

CMCC-24-20125 TAM

கண்ணன் சொன்னான் கம்பனும் சொன்னான்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

'**நா**ன் எல்லாப் பொருட்களிலும் இருக்கிறேன், எல்லாப் பொருட்களும் என்னிடம் இருக்கின்றன' என்று கீதையில் ஓரிடத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகிறார். (யோமாம் பச்யதி ஸர்வத்ர, ஸர்வம் ச மயி பச்யதி). எல்லாப் பொருட்களும் இவரிடம் இருக்கின்றன என்றால் இவர்தான் அவற்றுக்கெல்லாம் ஆதாரம் என்றாகும். எல்லாப் பொருட்களிலும் இவர் இருக்கிறார் என்றால் அவைதான் இவருக்கு ஆதாரம் என்று ஆகும். இதில் எது சரி என்ற குழப்பம் ஏற்படலாம்.

ஸ்வாமி எல்லாவற்றுக்கும் ஆதாரம் என்பதுதான் சரி. அவர் எல்லாவற்றுள்ளும் இருக்கிறார் என்பதால் அவை இவரைத் தாங்குகின்றன என்று ஆகாது. இவரால்தான் அவற்றுக்கு உருவமும் உயிரும். இவர் இல்லாமல் அவை இல்லை. எனவே அவை இவருக்கு ஆதாரமல்ல. இவர்தான் சகலத்தையும் ஆட்டிப் படைப்பவர். இதை ஸ்ரீ கிருஷ்ணனே தெளிவாகச் சொல்கிறார்.

'பொம்மலாட்டப் பொம்மைமாதிரிதான் சகலப் பிராணிகளும். உள்ளேயிருந்து ஈசுவரன் அவற்றை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறான்' [ஈச்வர: ஸர்வ பூதானாம் ஹ்ருத்தேசே (அ)ர்ஜுன திஷ்டதி. ப்ராமயன் ஸர்வ பூதானி யந்த்ராரூடானி மாயயா] என்கிறார்.

இப்படிக் குழப்பத்தைத் தெளிவு செய்கிற பகவான் அதே கீதையில் மறுபடியும் குழப்பம் செய்கிறார். 'எல்லாப் பொருட்களிலும் நான் இருக்கிறேன். எல்லாப் பொருட்களும் என்னிடம் உள்ளன' என்று கூறுபவரே, 'என்னிடத்தில் ஒரு பொருளும் இல்லை. நானும் ஒரு பொருளிலும் இல்லை' என்கிறார். (நச மத் ஸ்தானி பூதானி, ந சாஹம் தேஷ்வ அவஸ்தித:).

'இது என்ன குழப்புகிறாயே' என்றால் 'நான் எல்லோருக்கும் விளங்குவதில்லை (ந அஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய); அதுதான் என் யோக மாயை (யோக மாயா ஸமாவ்ருத:)' என்று ஒரு போடு போடுகிறார்.

'இது என்ன உபதேசம் வேண்டிக் கிடக்கிறது? ஒன்றும் புரியவில்லையே!' என்று தோன்றுகிறதா?

நன்கு ஆலோசித்துப் பார்த்தால் குழப்பத்துக்குத் தெளிவு காணலாம். 'நான் **ஒருவருக்கும்** விளங்கமாட்டேன்' என்று பகவான் சொல்லியிருந்தால், 'ஆயிரம் பேர் இருந்தால் ஆயிரம் பேருக்கும் விளங்க மாட்டேன்' என்று அர்த்தமாகும். ஆனால் அப்படியின்றி, 'நான் **எல்லாருக்கும்** விளங்க மாட்டேன்' என்றால், 'ஆயிரம் பேரில் 999 பேருக்கு விளங்காமல் இருந்தாலும் இருக்கலாம். ஒருவனுக்காவது விளங்குவேன்' என்றுதான் பொருள். பகவான் 'எல்லாருக்கும் (ஸர்வஸ்ய) விளங்கமாட்டேன்' என்றாரே யன்றி, 'ஒருவருக்கும் (கஸ்யாபி) விளங்க மாட்டேன்' என்று சொல்லவில்லை. அப்படியானால் அவரும் சிலருக்கு விளங்குகிறார் என்றாகிறது.

அந்தச் சிலர் யார்? இவர் சொன்ன யோக மாயையால் பாதிக்கப்படாத ஞானிகள்.





'நான் எல்லாப் பொருளிலும் இருக்கிறேன், ஒரு பொருளும் என்னிடம் இல்லை' என்று பகவான் முரண்பாடாகப் பேசியது போலத் தோன்றுவதற்கும் இத்தகைய ஞானிகள் விளக்கம் தருவர்.

தெருவிலே ஒரு பூமாலை கிடக்கிறது. அரை இருட்டு. எவனோ அந்தப் பக்கம் வந்தவன் அதை மிதித்து விட்டு, ''ஐயோ பாம்பு, பாம்பு!'' என்று பயத்தால் கத்துகிறான்.

மாலையாக இருப்பதும் பாம்பாக இருப்பதும் ஒன்றுதான். இது மாலைதான் என்று தெரிந்தவுடன் அவனுக்குப் பாம்பு இல்லை என்று தெரிந்து விடுகிறது. ஆனால் முதலில் பாம்புக்கு ஆதாரமாக இருந்தது என்ன? மாலைதான்.

மாலையைப் பாம்பு என எண்ணுவதுபோல், அஞ்ஞானிகள் ஒன்றேயான பிரம்மத்தைப் பலவான பிரபஞ்சமாகப் பார்த்து மயங்குகிறார்கள். இந்தப் பிரபஞ்சத்துக்கு ஆதாரம் பிரம்மம்தான்.

'இந்தப் பிரபஞ்சத்துக்குள் நான் இருக்கிறேன்; பிரபஞ்சம் என்னிடத்தில் இருக்கிறது' என்று சொன்னால் என்ன அர்த்தம்? 'மாலைக்குள்தான் பாம்பு இருக்கிறது; பாம்புக்குள்தான் மாலை இருக்கிறது' என்பது எப்படியோ அப்படித்தான்.

பாம்பு என்று அலறுபவனுக்குப் பாம்புக்கு ஆதாரமாக இருப்பது மாலை. அஞ்ஞானம் நீங்கி, 'இது மாலைதான்' என்று உணர்ந்து கொண்டவனுக்கு மாலை பாம்பைத் தன்னுள் மறைத்து விடுகிறது. மாலைதான் தெரிகிறது.

மாயையினால் மூடப்பட்டுப் பிரபஞ்சத்தைச் சத்தியம் என்று பார்ப்பவனுக்கு, பிரபஞ்சத்துக்கு ஆதாரமாக இருந்து தாங்குபவன்தான் ஈசுவரன்.

பிரபஞ்ச தோற்றத்தை ஞானத்தினாலே விலக்கியவனுக்கு ஈசுவரனே எல்லாமாய்த் தானுமாய்த் தோன்றுகிறான். ஈசுவரனைத் தவிர வெறும் தோற்றமாகக்கூடப் பிரபஞ்சம் என்று எதுவுமே ஞானியின் கண்ணுக்குத் தெரியாது. பிரபஞ்சம் என்றே ஒன்று இல்லாதபோது அது ஈசுவரனிடத்தில் இருப்பதாகவோ, அல்லது ஈசுவரன் அதனுள் இருப்பதாகவோ சொல்வதும் அபத்தம்தானே? இதனால்தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் முடிந்த முடிவான ஞான நிலையில் நின்று, 'என்னிடத்திலும் பொருட்கள் இல்லை, நானும் பொருட்களிடத்தில் இல்லை' என்று கூறிவிட்டார். எவனோ ஓர் அஞ்ஞானி மாலையைப் பாம்பாக நினைத்தான் என்பதால் உண்மையிலேயே ஒரு பாம்பு மாலைக்குள் இருந்ததாகவோ, அல்லது பாம்புக்குள் மாலை இருந்ததாகவோ சொல்லலாமா?

கம்பர் சுந்தர காண்டத்தில் இதைத்தான் சொல்கிறார்:

'அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவதெவரைக் கண்டால்
அவரென்பர் கைவி லோங்கி
இலங்கையில் பொருதா ரன்றே
மறைகளுக் கிறுதி யாவார்.'

அலங்கல் என்றால் மாலை. அரவு என்றால் பாம்பு. 'அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவு' — மாலையில் தோன்றும் பாம்பு என்ற பொய்யான எண்ணம். இதுபோலப் பஞ்ச பூதங்கள் ஒன்றுசேர்ந்து விளங்குகிற பொய்யான பிரபஞ்சம் என்ற வீக்கம் இருக்கிறதே, அது யாரைக் கண்டால் விலகிப் போய் மாலையான ஈசுவரன் மட்டும் தெரியுமோ, அவர்தான் ராமச்சந்திரமூர்த்தி.

கம்பர் பரமாத்ம ஸ்வரூபத்தை இப்படி அத்வைத பாஷையில் சொல்கிறார்.




ஆண்மை—
திடவடிவம்,
தீரம், திறமை,
கம்பீரம்.
ஆண்மையின்
பன்முகப்
பண்புகளைப்
படித்தறிந்த
படைப்பு
'எஸ்டர்காட்'
எஸ்டர்காட்®
ஆண்மகன் இதோ ஆளவருகிறான்.
எங்கும் அவன் செங்கோல்.
'எஸ்டர்காட்' அவன் உடுப்பு.
'எஸ்டர்காட்' பாலியெஸ்டர் இழை
கலந்த காட்டன் ஷூட்டிங்குகள்.
தவிர, இளம் சாயல்களிலும்,
எடுப்பான வண்ணங்களிலும்,
பெருமிதப் பிரிண்டுகளிலும்
'மெ.:ப்ரின்' 100% பாலியெஸ்டர்
சேலைகள், பாலியெஸ்டர் இழை
கலந்த காட்டன் சேலைகள்,
'மெ.:ப்ரின்' பாலியெஸ்டர் இழை
கலந்த உடுப்புத் துணிகள்—
இலேசான லான்கள், கோடை
நிழல் படரும் கேம்பிரிக்குகள்,
கோலாகல நகை மிளிரும்
பாப்லின்கள்; அதிநவீனமான
அரும்பெரும் அழகு வண்ணங்
களிலும், பிரிண்டுகளிலும்
'டெரோலெக்ஸ்' பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன்
ஷர்ட்டிங்குகள்.
மபத்லால்
க்ரூப்
MAFATLAL GROUP
ரெடிமேட் ஷர்ட்டுகள்
வாங்கும்போது
தரமான மபத்லால்
உடைகளுக்கான
'ஸ்மார்ட்டி'
சின்னம்
இருக்கிறதா
பாருங்கள்!



இருபத்திநான்காம் அத்தியாயம்

“அண்ணா வந்தார்”

அன்று காலையில் செந்திரு அளவில்லாத துயரத்தில் ஆழ்ந்தவளாய் உள்ளமும் உடலும் குன்றி உட்கார்ந்திருந்தாள். ''இந்த உலகில் — ஏன் பிறந்தேன் நான்'' என்பதாக அவள் கேட்டிருந்த ஒரு பாட்டின் அடி, திரும்பத் திரும்ப அவளுடைய ஞாபகத்துக்கு வந்து கொண்டிருந்தது. நாலு வருஷங்களுக்கு முன்பு வரையில் அவளுடைய வாழ்க்கை எவ்வளவு ஆனந்தமாயிருந்தது என்பதையும், திடீரென்று எப்படித் துன்பமயமாக மாறிவிட்டதென்பதையும் நினைத்து நினைத்துப் பொருமினாள். ''கடவுள் எதற்காக எனக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்தார்? நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன்?'' என்று அடிக்கடி எண்ணினாள். இவ்வளவு சொந்தத் துயரங்களுக்கிடையே, தான் கடிதத்துடன் கட்டிப் போட்ட கல் சுவாமியாரின் தலையில் விழுந்து காயப்படுத்திய விபரீதத்தை நினைத்து நினைத்து வேதனை அடைந்தாள். சுவாமியாருக்குப் பெரிய காயம் ஏற்பட்டிருக்குமோ? ஒரு வேளை சாபம் கொடுத்து விடுவாரோ? ஐயோ! தான் ஏற்கனவே படும் கஷ்டம் எல்லாம் போதாதா? — என்ன பைத்தியக்காரத்தனம்? பைத்தியம் மாதிரி நான் நடித்ததல்லவா உண்மையில் பைத்தியக்காரத்தனமாய்ப் போய் விட்டது? — இனிமேல் இந்தப் பைத்திய வேஷம் வேண்டாம் என்று அவள் முடிவாகத் தீர்மானித்துக் கொண்டாள். அடுத்த தடவை சித்தப்பா வரும்போது அவரைக் கேட்டுப் பார்க்க வேண்டியது தனக்கு விடுதலை அளிக்கும்படி; அதற்கு அவர் சம்மதிக்கா விட்டால் உயிரை விட்டு விடுவதுதான் சரி. நல்ல வேளையாக இந்த மலைப் பிராந்தியத்தில் உயிரை விடுவது அவ்வளவு கஷ்டமான காரியமல்ல. கிராதி மேல் ஏறிக் கீழே குதித்தாலும் தீர்ந்தது! இப்படி எண்ணிய போதெல்லாம் காலஞ்சென்ற தந்தையின் நினைவும் அவளுக்கு அவ்வப்போது வந்து கொண்டிருந்தது. ''அப்பா! நீ எங்கேயாவது இருக்கிறாயா? உன் அருமை மகள் படும் கஷ்டங்களெல்லாம் உனக்குத் தெரியுமா? இந்தப் பாவிகள் செய்யும் கொடுமைகளையெல்லாம் நீ பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாயா?'' என்று அவளுடைய மனம் கதறிற்று.

ஒரு தடவை இன்னொரு எண்ணமும் அவளுக்குத் தோன்றியது: ''இந்தக்

கஷ்டங்கள் எல்லாம் நாமாக விலைக்கு வாங்கிக் கொண்டவைதானே? எத்தனையோ பெண்கள் வயதானவர்களைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லையா? கள்ளிப்பட்டிக் கவுண்டரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தால் இதே பங்களாவில் கைதியாக இருப்பதற்குப் பதிலாக எஜமானியாக இருக்கலாமல்லவா?'' என்று நினைத்தாள். அவளுக்குத் தெரிந்த குடும்பங்களுக்குள்ளே வயதானவர்களை — கள்ளிப்பட்டிக் கவுண்டரைவிடக் கிழவர்களை — கல்யாணம் செய்து கொண்டவர்களின் ஞாபகமெல்லாம் அவளுக்கு வந்தது. ஆனால், அதே சமயத்தில், மூன்று வருஷங்களுக்குமுன் ஒரு நாள் ஓடைக் கரையில் நடந்த சம்பவமும் அவளுடைய நினைவுக்கு வந்தது. மூர்ச்சையடைந்தது போல் தான் பாசாங்கு செய்ததும், காந்திக் குல்லா அணிந்த அந்த வாலிபன் ஜலம் கொண்டுவந்து தன் முகத்தில் தெளித்ததும், மூக்கின் அருகில் கையை வைத்து மூச்சு இருக்கிறதா என்று பார்த்ததும், தான் எழுந்து உட்கார்ந்து கலகலவென்றுசிரித்ததும் நேற்றுத்தான் நடந்தது போல் அவள் மனத்தில் தோன்றி, தேகம் சிலிர்க்கச் செய்தது. பின்னர், அந்தக் கோயமுத்தூர் வீட்டில் அன்றிரவு தன்னைச் சித்தப்பா பிரம்பினால் அடித்தபோது, மருடபதி கதவைத் திறந்து கொண்டு ஓடி வந்து தடுத்ததும், அவனைக் கவுண்டர்கள் கட்டிப் போட்டதும், சோபாவின் காலில் கட்டிப் போட்டிருந்தபோது அவ்வாலிபனுடைய முகத்தில் தோன்றிய தீரமும், தன்னை அடிக்கடி 'பயப்படாதே!' என்று சொல்கிறவன்போல் பார்த்ததும் — இவையெல்லாம் அவள் மனக்கண்ணின் முன் மீண்டும் தோன்றின. தான் மணம் செய்து கொள்வதாயிருந்தால் மருடபதியை மணம் செய்து கொண்டு வாழ்வது, இல்லாவிட்டால் உயிரை விட்டு விடுவது என்று உறுதி செய்து கொண்டாள்.



இப்படிப் பலவித சிந்தனைகளில் அவள் ஆழ்ந்திருந்த சமயத்தில் வாசலில் கார் வரும் சத்தம் கேட்டது. ஜன்னல் வழியாகப் பார்த்த போது, கள்ளிப்பட்டிக் கார்தான் என்று தெரிந்து கொண்டாள். உடனே, அவள் அலமாரிக்குச் சென்று, கறிகாய் நறுக்குவதற்காக உபயோகிக்கப்பட்ட ஒரு சிறு கத்தியைத் தேடி எடுத்து, இடுப்பில் செருகிக் கொண்டு, கவுண்டர்களைச் சந்திப்பதற்கு ஆயத்தமானாள். அவளுடைய அறைக்கு வெளியே காலடிச் சத்தம் கேட்ட போது, ஒரு கையை இடுப்பில் கத்திப் பிடியின் மேல் வைத்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

உள்ளே தங்கசாமிக் கவுண்டர் மட்டுந்தான் வந்தார். சாவதானமான குரலில், ''செந்திரு! உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே வந்தவர், செந்திரு ஆவேசம் கொண்டவள் போல் நிற்பதைப் பார்த்துச் சிறிது திடுக்கிட்டார்.

''எனக்கு உடம்பு ஒன்றுமில்லை'' என்றாள் செந்திரு.

''ரொம்ப நல்லது; அப்படியானால் உட்கார். ஏன் இவ்வளவு பதறப்படுகிறாய்? உன்னை யார் என்ன செய்கிறார்கள்?'' என்றார்.

கவுண்டர் நாற்காலியிலும், செந்திரு அவளுடைய கட்டிலிலும் அமர்ந்தார்கள்.



''அநாவசியமாகப் பதற்றப்பட்டுத் தானே அந்தச் சுவாமியாரின் மொட்டை மண்டையில் கல்லைப் போட்டாய்? பாவம்! அவர் சாகக் கிடக்கிறார்!''

'' ஐயோ!'' என்று அலறினாள் செந்திரு.

''பிழைத்தால் புனர் ஜன்மந்தான். செத்துப் போனால் உன் மேல் கேஸ் வந்தாலும் வரும். நீ பைத்தியம் என்று வேஷம் போட்டது போக, நிஜமாகவே உனக்குப் பைத்தியம் என்று ருசுச் செய்யும்படி வரலாம்'' என்றார்.

செந்திரு திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தாள். விஷயம் அவளுக்கு நன்றாக விளங்கக்கூட இல்லை. சுவாமியார் சாகக் கிடக்கிறார் — தான் எறிந்த கல்லினால் — என்பது மட்டுந்தான் மனத்தில் நின்றது.

'' குழந்தை! அதையெல்லாம் நீயாகவே பண்ணிக் கொண்டாய் என்பதை நினைத்தால் ரொம்ப வருத்தமாயிருக்கிறது'' என்றார் தங்கசாமிக் கவுண்டர்.

'' சித்தப்பா! சத்தியமாகச் சொல்லுங்கள். இதெல்லாம் நானாகச் செய்து கொண்டதா? இந்தக் கதிக்கு என்னைக் கொண்டு வந்தது நீங்கள் இல்லையா?'' என்று செந்திரு கதறினாள்.

'' இருக்கலாம், அம்மா! என் பேரிலும் கொஞ்சம் தப்புத்தான். ஒப்புக் கொள்கிறேன். கள்ளிப்பட்டிக் கவுண்டரின் அந்தஸ்தை உத்தேசித்து உன்னை அவருக்குக் கட்டிக் கொடுக்க எண்ணினேன். அந்த மனுஷனுக்கும் ஆண் குழந்தை இல்லையே, உன் வயிற்றில் ஓர் ஆண் குழந்தை பிறந்தால் அவ்வளவு சொத்தும் வரும் என்று ஆசைப்பட்டேன். ஆனால், உனக்கு இஷ்டமில்லை என்றால், அதைச் சொன்னால் போதாதா? சொல்லாமல், கொள்ளாமல், ஊரைவிட்டு ஓடி வரலாமா? அதுவும் நான் இல்லாத சமயத்தில்! இதனால் நம் எல்லோருக்குமே எவ்வளவு அவமானம் பார்! உன்னுடைய இஷ்டமில்லாமல் பலவந்தப்படுத்திக் கல்யாணம் செய்து கொடுத்து விடுவோமா? இதெல்லாம் இந்தக் காலத்தில் நடக்கக்கூடிய காரியமா?.... படித்த பெண்ணாகிய உனக்கு இது தெரியாமல் போய் விட்டதே!... ஆனால், உன்பேரில் தவறு இல்லை. 'கரைக்கிறவர்கள் கரைத்தால் கல்லும் கரையும்' என்பது போல், யாருடைய துர்ப்போதனையையோ கேட்டு, நீ இம்மாதிரி செய்து விட்டாய்...!''



கவுண்டர் இவ்வாறு பேசி வந்த

போது. முதலிலெல்லாம் செந்திருவுக்குத் தன் பேரிலேதான் ஒரு வேளை பிசகோ என்று தோன்றியது. ஆனால், கடைசியில் 'துர்ப்போதனை' என்றதும், அவர் மருடபதியைத்தான் குறிப்பிடுகிறார் என்று அறிந்து கொண்டாள். அடங்கியிருந்த கோபமெல்லாம் பொங்கியது. ''நான் யாருடைய துர்ப்போதனையையும் கேட்கவில்லை. அப்படிச் சொன்னால் பாவம்! நீங்கள் தான்....'' என்று ஆரம்பித்தாள்.

கவுண்டர் குறுக்கிட்டு, ''போனது போகட்டும்; அதை யெல்லாம் மறந்து விடுவோம். நேற்று இரவு கனவில் அண்ணன் வந்தார். 'உன்னை நம்பி என் குழந்தையை ஒப்புவித்தேனே! எங்கேயடா என் குழந்தை?' என்று கேட்பது போலிருந்தது. தூக்கத்தில் ஓவென்று அழுதுவிட்டேன்.....'' என்று சொல்லி வேறு பக்கம் திருப்பிக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

செந்திருவுக்கு மனம் இளகிவிட்டது. அவளும் சேலைத் தலைப்பினால் முகத்தை மூடிக் கொண்டு விம்மி அழுதாள்.

தங்கசாமிக் கவுண்டர் அவளுடைய தலை மீது தடவிக் கொடுத்து, ''வேண்டாம், அம்மா! போனதெல்லாம் போகட்டும். என் அண்ணனுக்கு நான் கொடுத்த வாக்கைக் கட்டாயம் நிறைவேற்றுவேன். நீ ஊருக்கே திரும்பி வந்துவிடு. கல்யாணத்தைப் பற்றி உன்னை இனிமேல் வற்புறுத்தமாட்டேன். நீ மேஜர் ஆவதற்கு இன்னும் ஒன்றரை வருஷம்தான் இருக்கிறது. அதுவரையில் பொறுத்திரு. அப்புறம் உன் இஷ்டம் போல் செய். இப்போது கிளம்பு, போகலாம்'' என்றார்.

மறுபடியும் ஏதாவது சூழ்ச்சி செய்கிறார்களோ என்று ஒரு நிமிஷம் செந்திருவுக்குச் சந்தேகம் தோன்றிற்று. ஆனாலும் இந்த மலைச் சிறையில் இருப்பதைக் காட்டிலும், ஊருக்குப் போனாலும், வேறு எங்கே போனாலும் பாதகமில்லை என்று கருதினாள். எனவே, சித்தப்பாவுடன் புறப்படச் சம்மதித்தாள்.

பங்களாவின் வாசலுக்கு வந்தபோது, அங்கே கள்ளிப்பட்டிக் கவுண்டரைக் கண்டதும் அவளுக்கு நெஞ்சு திடுக்கிட்டது. ஆனால், கள்ளிப்பட்டிக் கவுண்டர் அவர்களைத் தொடர்ந்து வந்து காரில் ஏறவில்லை. இது அவளுக்குத் தைரியத்தை உண்டாக்கிற்று. அவர் இல்லாமலே கார் கிளம்பிய போது அவளுக்கு உற்சாகமே உண்டாகி விட்டது. ''இவர்களுக்குள் ஏதோ சண்டை போலிருக்கிறது; ரொம்ப நல்ல காரியம். அந்தப் பாவியின் சிநேகம் இல்லாவிட்டால் சித்தப்பா நல்லவராகவே ஆகிவிடுவார்'' என்று நினைத்தாள்.


* * *

கார் போன பிறகு, கள்ளிப்பட்டிக் கவுண்டர் நடையில் வாசற்படியுள்ள முன் அறையில் போய் உட்கார்ந்து கொண்டார். அங்கிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்தார். அந்தப் பங்களாவுக்கு வரும் பாதை நன்றாகத் தெரிந்தது. வலையை விரித்துவிட்டு, பட்சி எப்போது வந்து சிக்கிக் கொள்ளும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேடனுடைய முகபாவம் கவுண்டரின் முகத்தில் அப்போது தோன்றியது. சாப்பாடு, சிற்றுண்டி முதலியவையும் அந்த அறையிலேயே நடந்தன. மேஜை டிராயரிலிருந்து அடிக்கடி கைத் துப்பாக்கியை எடுப்பதும், அதன் விசையில் விரலை வைப்பதும், மறுபடியும் மேஜைக்குள் வைத்து மூடுவதுமாக இருந்தார். தோட்டக்காரனையும் அடிக்கடி கூப்பிட்டு, பாதையைப் பார்த்துக் கொண்டிருக்கும்படியும், யாராவது தெரிந்தால் உடனே தெரிவிக்கும்படியும் கட்டளையிட்டார். நேரம் ஆக ஆக, அவருடைய பொறுமை குறைந்து வந்தது. அறையில் அங்குமிங்கும் வேகமாக உலாவினார். கடைசியில், தூரத்தில் மருடபதி வருவது தெரிந்ததும், அவருடைய முகத்திலும் கண்களிலும் பயங்கரமான குரோதத்தின் விகாரம் தோன்றியதுடன், உற்சாகத்தின் அறிகுறியும் காணப்பட்டது. வேலைக்காரனை மறுபடியும் கூப்பிட்டு, வருகிற ஆளை உள்ளே விட்டு வெளிக் கதவைச் சாத்திவிடும்படி கட்டளையிட்டார். பிறகு கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மேஜைக்கு முன்புறமாக நின்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சென்ற அத்தியாயத்தின் இறுதியில் கூறியபடி, மருடபதி உள்ளே நுழைந்தான். ''வா; அப்பா, வா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன்!'' என்று அவனை வரவேற்றார் கவுண்டர்.

மருடபதி சொல்ல முடியாத ஏமாற்றத்துடனும் பயங்கரத்துடனும் கார்க்கோடக் கவுண்டரையும் அவர் கையிலிருந்த துப்பாக்கியையும் மாறி மாறிப் பார்த்தான். இதைக் கவனித்த கவுண்டர், ''ஓகோ! இங்கே என்னை எதிர்பார்க்கவில்லையாக்கும். வேறு யாரையோ எதிர்பார்த்தாயாக்கும்! பாதகமில்லை, வா! முன் இரண்டு தடவை என்னிடமிருந்து தப்பித்துக் கொண்டாய்; இந்தத் தடவை தப்பிக்க முடியாது!'' என்றார். (தொடரும்)

அக்டோபர் 3உ ஆரம்பம்



ரா. கணபதி எழுதும்

அம்மா

பரமஹம்ஸ ராமகிருஷ்ணரின்
ஞானபத்தினியான ஸ்ரீ சாரதா
தேவியின் வரலாறு —

புதிய
தாய்மார்களுக்கு !



குழந்தைக்கு பாரெக்ஸ் கொடுக்க ஆரம்பிக்க வசதியாக ஒரு விசேஷ 100கிம். டப்பா.

3 மாதம் முதல் குழந்தைக்கு திட உணவு தேவை. குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கேற்ற சரியான புரதச் சத்தோடு, அதன் முழுமையான வளர்ச்சிக்கு வேண்டிய கார்போஹைட்ரேட்டுகள், கால்ஷியம், வைட்டமின்கள் மற்றும் இரும்புச் சத்துக்கள் யாவும் நிறைந்தது பாரெக்ஸ். இப் புதிய 100 கிம். டப்பாவை வாங்குங்கள்—குழந்தைக்கு பாரெக்ஸ் கொடுக்க ஆரம்பிக்கும் போது அது மிகவும் வசதியாக இருக்கும்

பாரெக்ஸ்®–க்ளாக்ஸோ தயாரிப்பு

சீரான உடல் வளர்ச்சிக்குக் குழந்தையின் முதலாவது திடஉணவு

CMGF-26-2072 Tam

மனம் கவர்ந்த மொரீஷஸ்

வைஜயந்திமாலா

நீண்ட காலமாக மொரீஷஸ் என் சிந்தனையில் சதா இருந்து கொண்டே இருந்ததற்குக் காரணம் உண்டு. மொரீஷஸ்ஸுக்கு வர வேண்டுமென்று பல அழைப்புக்கள் வந்த போதிலும் ஏதேதோ அலுவல்கள் குறுக்கிட்டுப் போக முடியாமலேயே இருந்து வந்தது தான் அக்காரணம். கடைசியில் இந்தியாவிலுள்ள மொரீஷஸ் ஹைகமிஷனர் திரு குர்புர்ரனும் அவரது மனைவியாரும் அழைத்ததன் பேரில் இவ்வாண்டு ஜூன் மாதம் எனது கணவரும் நானும் நடன கோஷ்டியுடன் புறப்பட்டுச் சென்றோம்.

விமான நிலையத்திலிருந்து நாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் நாற்பது மைல். மொரீஷஸ் தீவின் பசுமையான எழில் கொஞ்சும் சூழ்நிலையை அனுபவித்தபடியே அங்கு போய்ச் சேர்ந்தோம். அந்த ஹோட்டல் கடற்கரைக்குச் சமீபத்தில் அமைந்திருந்தது. ஏதோ பர்ணசாலைகள் போல் பல குடில்கள் அமைக்கப்பட்டிருந்தன. இப்படி எளிமையாகத் தோற்றமளித்தாலும் உள்ளே சகல நவீன வசதிகளும் உண்டு. இந்தக் குடில்களிலிருந்து வெளிப்பட்டுச் சில அடி தூரம் சென்றால் மென்மையான கடல் அலைகள் கால்களை நனைக்கும். மறுநாள் நடன நிகழ்ச்சி இருந்ததால் பயணக் களைப்புத் தீர அன்று நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மொரீஷஸ்ஸின் மிகச் சிறந்த கலை அரங்கம் பிளாஸா. அது பழங்காலப் பிரெஞ்சு பாணியில் அமைந்திருக்கிறது. சிறிய சிறிய பால்கனிகள் பல உண்டு. ஆசனங்கள் வெல்வெட் போர்த்தி உருவானவை.

நடன நிகழ்ச்சிக்கு கவர்னர் ஜெனரல் வில்லியம்ஸ் தம்பதியும் பிரதம மந்திரி ராம்கூலன் தம்பதியும் வந்து பெருமைப்படுத்தினர். அரங்கம் நிரம்பி வழிந்தது. ரொம்பவும் ரசித்துப் பலமாகக் கரகோஷம் செய்தார்கள்.

மொரீஷஸ் மக்களுக்கு இந்தியாவின் பரத நாட்டியம் பற்றி அதிகமாக ஏதும் தெரியாது. அவர்களுக்கு இந்தியக் கலாசாரத்துடன் தொடர்பு திரைப்படங்கள் மூலமாகத்தான். ஆனால் திரைப்படங்கள் இறைவுணர்வுடன் கூடிய சாஸ்திரீயக் கலை வடிவங்களுக்கு எங்கே முக்கியத்துவம் தருகின்றன? பதங்களின் பொருள் ஆங்கிலத்தில் மட்டுமின்றி பிரெஞ்சு மொழியிலும் முதலில் கூறப்பட்டது. அதனால் அனைவருமே நடனத்தைப் பொருள் உணர்ந்து பார்த்தார்கள்.

நடனம் முடிந்து திரையிட்ட பிறகு கவர்னர் ஜெனரல் தம்பதியும் பிரதம மந்திரி தம்பதியும் அரங்கத்துக்கு வந்து நமது தாய் நாட்டிலிருந்து ஓர் அரிய கலையை மொரீஷஸ்ஸுக்குக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தியதற்காக எங்களை வாழ்த்தினார்கள்.

மொரீஷஸ்ஸின் உள்ள தாவர இயல் பூங்கா உலகப் பிரசித்தி பெற்ற ஒன்று. ஏரியில் பெரிய பெரிய தாம்பாளங்கள் போல் தாமரை இலைகள் மிதந்தன. அவற்றில் ஒன்றை என் பக்கம் இழுக்கப் போய் நானே தட்டுத் தடுமாறி நீருக்குள் விழவிருந்தேன். தண்டு அத்தனை உறுதியாக ஊன்றிக் கொண்டிருக்கும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. இங்குள்ள ஓர் அபூர்வ மரம் நூறு வருஷங்களுக்கு ஒரு முறைதான் பூக்குமாம்.







- வரவேற்பு.
- நடன கோஷ்டி.
- கவர்னர் ஜெனரல் தம்பதி, பிரதம மந்திரி தம்பதி ஆகியோருடன் டாக்டர் பாலி தம்பதி.

நாங்கள் வந்த சமயம் அது பூத்திருந்தது ஓர் அற்புதம்தானே!

மொரீஷஸ்ஸின் தலைநகர் போர்ட் லூயி யில் எங்கள் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ராமர் கோயில் ஒன்று இங்கு நிர்மாணிக்க என்னை அடிக்கல் நாட்டச் சொன்னார்கள். ரொம்பவும் சாஸ்திரோக்தமாக நடந்தது. இங்குள்ள தமிழ்ச் சங்கங்கள் நமது பழமை யான கலாசாரத்தை விட்டுக் கொடுக்காமல் பாதுகாக்கப் பெரு முயற்சிகள் எடுத்து வரு கின்றன. எனக்காக ஒரு பெரிய வரவேற்பு அளித்துக் கௌரவித்தார்கள். இங்கு பல அழகிய கோயில்கள் உள்ளன. உற்சவங்களை விடாமல் நடத்துகிறார்கள்.

மொரீஷஸ்ஸில் மைல் கணக்கில் கரும்புத் தோட்டங்கள் இருப்பதனால்தானோ என் னவோ அந்தத் தீவு ரொம்ப இனிமையாகத் தோன்றுகிறது. உயரமான கரும்புப் பூக்கள் காற்றில் அலை அலையாக அசைவதானது



"டெலிபோன் பாக்கிக்காக லைனை கட் பண் ணிட்டாங்க; கரெண்ட் பில் பாக்கிக்காக கனெக் ஷனை வெட்டிட்டாங்க; வாடகை பாக்கிக்காக நாளை அமீனா வரப்போகிறாராம்; நீ என்ன காகிதம் நீட்டுகிறாய்? சம்பள பாக்கிக்காகவா?"

"இல்லே சார்! எங்களுக்குப் பத்து மாச போனஸ் தரக் கோருகிறோம்."

தனிமையான ஒரு நடனமாகவே எனக்குத் தோன்றியது.

மொரீஷஸ்ஸில் எங்கள் நடன நிகழ்ச்சிகள் முடிந்ததும் அதனை அடுத்துள்ள ரீயூனியன் என்ற மற்றொரு தீவுக்குப் போனோம். இது இன்னும் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழேயே இருக்கிறது. ஹோட்டலை அடைவதற்கு முன் னால் நடன நிகழ்ச்சி நடக்கவிருந்த ஜெயின்ட் கில்ஸ் தியேட்டரைப் பார்க்கச் சென்றோம்.

இது திறந்தவெளி அரங்கு. பிரும்மாண்ட மான மேடை. பின்னணியில் இயற்கையில் அமைந்த மலைகள். அரங்கில் மனிதனுடைய கைவண்ணம் மிகவும் குறைவாக இருக்கும் படியும் அரங்கம் இயற்கை எழிலுடன் இழை கிற மாதிரியும் கலை உணர்வுடன் அமைத் திருந்தார்கள். திறந்தவெளி அரங்காயிற்றே, ஒளி, ஒலி அமைப்பு எப்படி இருக்குமோ; நடன நிகழ்ச்சி எடுபடுமோ என்றெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. ஒளி, ஒலி ஏற் பாடுகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. இங்கு நடன நிகழ்ச்சியானது இதுவரை நாங்கள் உணர்ந்தறியாத ஓர் அபூர்வமான அனுபவமாகத்தான் இருந்தது. சூழ்நிலையின் அமைதியை விசேஷமாகக் குறிப்பிட வேண் டும். பின்னணி இசை தவிர வேறு ஒரு மெல் லிய ஒலியும் கேட்கவில்லை.

என்னதான் நான் நிகழ்ச்சிகளை நன்றாக ஒத்திகை பார்த்திருந்த போதிலும் அவ்வப் போது என் கணவர் அளித்த யோசனைகளும் உதவிகளும் நாடகக் குழுவுக்கு இல்லாதிருந் திருந்தால் எல்லாமே வியர்த்தமாகத்தான் போயிருக்கும். எந்த இடத்துக்குப் போனா லும் இன்னது செய்தால் நிகழ்ச்சிகளை கட்டும் என்று பளிச்சென்று ஒரு முடிவுக்கு வருவார். ஆயினும் அவருக்குக்கூட மேற்படி திறந்த வெளி அரங்கு நிகழ்ச்சி முற்றிலும் புதுமை யான ஓர் அனுபவந்தான்!

ரீயூனியனிலும் சரி, மொரீஷஸ்ஸிலும் சரி, பத்திரிகைகள் எங்கள் நடன நிகழ்ச்சிகளை வெகுவாகப் பாராட்டி எழுதியிருந்தன.

திறந்தவெளி அரங்கத்தில் வெற்றிகரமாக நடன நிகழ்ச்சியை முடித்துக்கொண்டதும் திரு ஒலிவெராவின் பெரிய ஹோட்டலுக்குப் பயணப்பட்டோம். கிட்டத்தில்தான் என்று சொன்னார்கள். ஆனால் போய்ச் சேர ஒன்றரை மணி நேரம் ஆயிற்று! காரணம், எங்கள் கார்கள் சென்ற சாலையில் மொத்தம் நூற்று இருபத்தாறு கொண்டை ஊசி வளைவுகளும் திருப்பங்களும் இருந்தன. என் வாழ்நாளில் இதுவரை இதுபோன்ற ஆபத்தான சாலையை நான் பார்த்ததேயில்லை. ஜன்னலுக்கு வெளி யில் நோக்கினால் பள்ளத்தாக்கு தலையைச் சுற்றச் செய்யும். இரவு நேரம் வேறு. அதி காலை மூன்று மணிக்கு ஹோட்டலைச் சென்று அடையும்வரையில் உயிரைக் கையிலும் விழிகளைச் சாலையிலும் வைத்துக் கொண்டு விறைப்பாக அமர்ந்திருந்தேன்.

ரீயூனியன் தீவு பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருப்பதால் இங்கு சம்பாஷிப்பதே கடின மாகத்தான் இருந்தது. எப்படியோ தட்டுத் தடுமாறிச் சில பிரெஞ்சு வார்த்தைகள் பேசி, சாம்பார் சாதமும் கறியும் தயாரிக்கத் தேவை யான பொருள்களைக் கேட்டுப் பெற்றோம். ஓய்விருந்தபோது சிறிது பிங்பாங் விளையாடி னேன். பல ஆண்டுகளுக்கு முன் சென்னை யில் நான் இந்த ஆட்டத்தில் கோப்பைகூடப் பெற்றதுண்டு. ஆனால் இப்போது மீண்டும் புதிதாக ஆடுவது போல்தான் இருந்தது. என் கணவர் டென்னிஸ் விளையாடினார் பொழுதுபோக்காக.

பிரெஞ்சு மக்களும் எங்கள் நடன நிகழ்ச்சி களை மிகுந்த ஆர்வத்துடன் பார்த்தார்கள். எங்கள் கலாசார விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு மொரீஷஸ் திரும்பினோம். அங்கிருந்து பம்பாய்க்கு ஏர்-இந்தியா விமா னம் ஏறினோம்.

மொரீஷஸ்ஸில் இருந்தபோது அனைவரும் கேட்ட கேள்வி இது: "மொரீஷஸ் உங் களுக்குப் பிடித்திருக்கிறதா?"

என் பதில்: "தேசம் என்பது அதன் மக்களே. நீங்கள் அன்புள்ளம் கொண்ட வர்கள்; நட்புறவை விரும்புகிறவர்கள்; விருந் தோம்பலில் சிறந்தவர்கள். நாங்கள் மீண்டும் மொரீஷஸ் வருவோம்!"

சென்ட்ரல்



பி.வி.ஆர்

"யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்! தி பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் பவுண்ட் ஃபார் பெங்களூர் வில் லீவ் அட் ஸெவன் தர்ட்டி ஃப்ரம் பிளாட்பாரம் நம்பர் ஸிக்ஸ்." - சென்ட்ரல் ஸ்டேஷன் ஒலிபெருக்கி.

அத்தியாயம் 7

மேல் வகுப்புப் பிரயாணிகளின் தங்கும் அறையில் முத்துவைச் சந்தித்த மணி, முப்பது ரூபாயை அவனிடம் நீட்டினான். அதை வாங்கிக் கொண்ட அவன், "இதை ஒரேயடியாய்த் திருப்பித் தர முடியும்னு எனக்குத் தோணவில்லே" என்றான்.

"நான் திருப்பித் தா என்றே சொல்லவில்லையே, முத்து? இதை வைத்துக் கொண்டு அம்மாவைப் போய்ப் பாரு.... போகும்போது ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கிக் கொண்டு போ... மூர்மார்க்கெட்டிலே வாங்கு. ரூபாய்க்கு நாலோ ஐந்தோ பழங்கள் கிடைக்கும்."

"அரை டஜன் போதும். அம்மா எங்கே சாப்பிடப் போகிறான்? அவள் பெயரைச் சொல்லி அண்ணாவும் குழந்தைகளும்தான் சாப்பிடுவார்கள்."

"அப்போ இரண்டு டஜனை வாங்கிக் கொண்டு போ!" என்றான் மணி. பிறகு, "நீ இதைத் திருப்பித் தரணும், தருவாய் என்ற எண்ணத்தோடு, காலங் கார்த்தாலே நான் இங்கே வரவில்லை" என்றான்.

முத்துவுக்குச் 'சுருக்'கென்றது. இந்த மணிக்கு அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை. என்ன வேலை செய்து எப்படிப் பிழைக்கிறான் என்று இன்னும் அவனுக்குத் தெரியாது. 'யாரோ டிராவல் ஏஜண்டிடம் கமிஷனுக்கு வேலை செய்கிறான். பம்பாய், டில்லி முதலான இடங்களுக்கு மற்றவர்களுக்குக் கிடைக்காத ரிஸர்வேஷன் இவனுக்குக் கிடைக்கிறது. அதிலிருந்து ஐந்து பத்து என்று சம்பாதிக்கிறான்' என்றெல்லாம் மட்டும் பராபரியாக, டிக்கட் பரிசோதகர் ராஸ்ஜி, ரயில்வே கார்டு ரோஸாரியோவின் பிள்ளை எட்மண்ட், ஸ்விப்பர் நீலமேகம் இவர்கள் மூலமாகத் தெரியும். இப்பேர்ப்பட்ட நாடோடிப் பயலிடம் அவன் ஓர் அவசரத்துக்கு முப்பது ரூபாய் கடன் வாங்குகிறான். ஆனால் அதைத் தானம் செய்வது மாதிரி மணி பேசுகிறான்!

நினைக்க நினைக்க முத்துவின் உடல் எரிந்தது. ரத்தம் சூடேற ஆரம்பித்தது. தன்மான உணர்ச்சி சூட்டில் வெந்தது.

"எனக்கு இரக்க சிந்தனையோ, தானமோ தேவையில்லை, மணி!"

"என்னடா, உனக்கு என்ன வந்துவிட்டது திடீர்னு? உன் அம்மாவுக்குத் தானே உடம்பு சரியில்லே!" என்றான் மணி. முத்துவின் திடீர்ப் போக்கு அவனை வியப்பில் ஆழ்த்தியது.

"டேய், இன்னிக்கு நான் ஒரு டைப்பிஸ்ட்தான். சம்பளம் நூற்று எழுபது ரூபாய்தான். வாடகையும் பஸ் சார்ஜும் கொடுக்க வக்கில்லாமல், பிளாட்பாரத்தில் ஜாதிக்காய்ப் பெட்டியில் சாமான்களை வைத்துக் கொண்டு சென்ட்ரல் ஸ்டேஷன்லே குடியிருக்கிறவன்தான். ஆனால் நான் பெரிய பரம்பரையைச் சேர்ந்தவன். என் கொள்

னுத் தாத்தா நூறு வேலி நிலத்தை— அதுவும் தஞ்சாவூரிலே காவேரிக் கரையிலே — ஆண்டவர்டா. ஒரு கல்யாணம் கார்த்தின்னு ஆயிரக்கணக்கிலே செலவு செய்து, 'ஓகோ', 'ஓகோ'ன்னு ஊரெல்லாம் சிலாகிக்கும்படியாக இருந்த குடும்பம்டா, மணி...! இதெல்லாம் உனக்குத் தெரிஞ்சிருந்தால், இந்த முப்பது ரூபாயைத் திருப்பித் தர வேண்டாம்னு நீ சொல்லியிருக்க மாட்டாய்!''

முத்துவின் திடீர் முக மாற்றத்தையும் பேச்சின் வேகத்தையும் கண்டு, மணிக்குச் சிரிப்பதா, அழுவதா என்று புரியவில்லை.

''ரொம்ப சரி ! திருப்பிக் கொடு... ஆனல் கேவலம் இந்த முப்பது ரூபாய்க்காக உன் பழைய பரம்பரைப் பெருமையை இந்த ஸ்டேஷன்லே நாற அடிக்காதே !''

''உனக்குப் பரம்பரை இல்லேயோ, என்னவோ !''

'' நான் நேத்து நடந்ததையே மனசில் வைத்துக் கொள்றதில்லே.... என்னடா பரம்பரைப் பெருமை வேண்டியிருக்கு? தஞ்சாவூரிலே பாதிப்பேர், சீட்டாடிக் கொண்டும், மற்றக் கேளிக்கைகளிலும் இறங்கிச் சொத்தையே முழுங்குகிற அளவுக்குக் கடனே வாங்கி, கடைசியில் உன்னே மாதிரி வாரிசுகளே இன்னிக்கு இந்த மாதிரி ஸ்டேஷன்களில் சந்தி சிரிக்க வைக்கிருர்கள் ! உன் பாட்டன், முப்பாட்டன் பெருமையைப் பேசுகிருயே, நாளைக்கு உன் பேரன் கொள்ளுப்பேரன் உன்னேப் பத்திப் பெருமையாப் பேச இன்னிக்கு உன்னிடம் என்னடா இருக்கு? ஆனல் யார் கண்டார்கள்...? உன்னுடைய இந்தக் கோலமே பெருமையா அவர்களுக்குத் தோன்றுமோ என்னமோ ? ஏன்னு, நீ இங்கே இருக்கே, அவர்கள் ரோடு பிளாட்பாரத்திலும் மரத்தடியிலும் இருப்பார்களோ, என்னமோ !''

''டேய், மணி! உன் பொருமை எனக்கு நன்னாத் தெரியறதுடா, நன்னாத் தெரியறது. நீ ஒரு நாடோடி. அப்பா, அம்மா சொந்தக்காரர்கள் இல்லாத அநாதை... இப்படிப்பட்ட நீ பெரிய பரம்பரையிலே பிறந்த எனக்கு இன்னிக்கு ஓர் உபகாரம் பண்ணிப் பெரியவனுகிப் போய் விட்டே. அந்தக் கர்வத்தில் தானமா வைச்சுக்கோன்னு வேறு சொல்றே!''



''டேய், முத்து, உன் பரம்பரைக் கர்வம் உன் தலையிலிருந்து இறங்கினால் தான் நீ உருப்படுவே! இல்லாட்டா, என்னன்னிக்கும் நீ டைப்பிஸ்ட்தான். அது சரி, இவ்வளவு தூரம் பேசினாயே, ஏன் சென்ட்ரல் ஸ்டேஷன்லே இத்தனை பேரை ஏமாத்திண்டு இத்தனை நாளா இருந்து கொண்டிருக்கே? ஏமாத்தறது பரம்பரைக் குணமா? ஜாதிக் காய்ப் பெட்டி வாடகை அஞ்சு ரூபாய். ஏழாம் பிளாட்பாரத்திலே தூக்கம். ரிடயரிங் ரூமிலே குளியல், டிரஸ்ஸிங். மின்சார விசிறியின் கீழே, ஒஸிப் பேப்பர். ஏண்டா, இப்படித்தான் உன் தாத்தாவும் கொள்ளுத் தாத்தாவும் பொது இடங்களிலே ஒதுங்கினார்களா?''

முத்துவுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. 'பளார்' என்று மணியின் கன்னத்தில் ஓர் அறை அறைந்து விட்டு ஓடி விடலாமா என்று யோசித்தான். ஆனால் மணி அதற்குள் அவனைப் பிடித்து விட்டால்? ஓர் அறைக்கு நாலு அறை கொடுத்து விடுவான். கொடுத்திருக்கும் முப்பது ரூபாயும் போய் விடும்! தான் ஒரு முட்டாள். தன்னுடைய பரம்பரைப் பெருமையை இவ்வளவு விஸ்தாரமாக இந்த அநுமதேயத்திடம் சொல்லியிருக்கக் கூடாது. கற்பூர வாசனையை யாரிடம் காட்ட வேண்டும் என்று தெரியாமல் காட்டி விட்டான். இப்போதைக்கு, இனிமேல் மௌனமாக இருப்பதுதான் விவேகம்.

முத்துவின் மௌனத்தை மணி தனக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளவில்லை. மேலும் மேலும், குத்திக் குத்தி, அவனுடைய மனத்தைப் புண்படுத்தும் நோக்கம் தனக்கு இல்லை என்பதைத் தன் முறுவலால் காட்டினான்.

''நான் வரட்டுமாடா, முத்து!''

''உம்.''

''நாம ரெண்டு பேரும் ஒரே பருவம்டா. நீ என்னைவிட ஒரு வயசோ இரண்டு வயசோ சின்னவன். இருந்தாலும் 'ஸாரி' சொல்றேன்.''

''ஸாரிடா, மணி! நீ எதைப் பற்றியும் கவலைப்படறதில்லே. நான் கவலைப்படாத விஷயம் ஏதுமில்லே. இந்த வித்தியாசம்தான் என்னை இப்படிப் பேச வைத்ததோ என்னவோ!''

''விட்டுத் தள்ளு. ஆனால் யார் கிட்டேயும் உன் பரம்பரையைப் பற்றிப் பேசாதே, இனிமேல். ரொம்பப் பேர், நம்ப பாரதத்தின் பண்டைய



பெருமையைப் பேசிப் பேசியே, நிகழ் காலத்தை நாற அடித்து விட்டார்கள். நாம் பேசுவதை நிறுத்தினல்தான் பெருமை நாலு பேருக்குத் தானுகத் தெரிய வரும். என்னை எடுத்துக் கொள். எனக்குப் பரம்பரையே கிடையாது என்றுதானே நீ நினைத்துக் கொண் டிருக்கிருய்?''

''ஆமாம். எனக்கு உன்னைப் பற்றிய விவரமே ஏதும் தெரியாது.''

''எப்படித் தெரிய முடியும்? நான் என்னைப் பற்றி யார்கிட்டேயுமே எப் போதுமே சொல்லிக் கொள்ளுவதில்லை. அதனுல் ஒன்றுமே கிடையாது என்ற எண்ணமா? கேளு, என் அப்பா அலகா பாத் சர்வகலாசாலையில் பேராசிரியராக இருந்தவர். எனக்கு ஏழு வயசு நடக் கிற போது அவரும் அம்மாவும் தங்கை யும் கங்கையில் ஒரு விபத்தில் உயிர் இழந்தார்கள். அன்னிக்கு எனக்கு ஜுரம். அதனுல் என் உயிர் போக வில்லை. பெரியப்பா டிப்டி கலெக்டராக இருந்தவர். என் அப்பா போன இரண்டு மூன்று வருஷங்களில் அவர் திடீரென்று மாரடைப்பில் செத்துப் போனுர். என் தாத்தா யாருன்னு மனசுக்குள்ளே கேட்டுக்கிறியா? சொல்றேன். அவர் செஷன்ஸ் ஜட்ஜ்டா. செஷன்ஸ் ஜட்ஜ். கண் முன்னுலே தாம் பெற்றெடுத்த இரண்டு மலைகள் சரிவதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. பிள்ளை இழந்த சோகமே ஒரு நோயாக அவரை அரித்து அரித்துத் தின்றது. அவர் போகும்போது எனக்கு வயசு பதி ஞெண்ணு. அதுக்கு அப்புறம் நாதிகள் நாதிகள்னு ஒன்றுவிட்ட சித்தப்பா, இரண்டுவிட்ட பெரியப்பான்னு யார் யாரோ என்னையும் பெரியப்பா குழந்தை களையும் வளர்த்தார்கள். இருந்த சொத்தையெல்லாம் சூறையாடினுர்கள். இப்போ நான் வீடு, வாசல், பெண் டாட்டி ஏதும் இல்லாமல் அலைகிறேன். இதுதாண்டா என்னுடைய பரம்பரை! போதுமா?''

''மன்னிக்கணும்டா, மணி!...!''

''அதனுலே பரவாயில்லே. நேத்து நடந்ததை மறந்துவிடு. இன்னிக்குக் கிடைக்கிறதை வைத்துக் கொண்டு சந்தோஷப்படு. நானையைப் பற்றிக் கவலைப்படாதே. நான் வர்றேன்!''

மணி பதிலுக்குக் காத்திராமல் வெளியேறிஞன்.

கடிகாரத்தில் அப்பொழுது மணி ஏழே கால்.

* * *

கேதாரத்தின் மணிபர்ஸை யாரி டம் ஒப்புவிப்பது என்ற கேள்வி அவனை அரித்துக் கொண்டேயிருந்தது. ரயில்வே போலீஸிடம் கொடுக்க மனம் வர வில்லை. முன்ஞெரு தடவை கொடுத்து விட்டு அவன் பட்டபாடு கொஞ்சநஞ்ச மல்ல. அந்தப் பர்ஸை வைத்துக் கொண்டு ஆயிரமாயிரம் கேள்விகள் கேட்டார்கள். ஒரு கட்டத்தில், கண்டெடுத்த பர்ஸிலிருந்து அவனே பணத்தைக் கையாடியிருப்பாஞே என்று சந்தேகப்பட்டார்கள்!

அதன் பிறகு நல்ல வேளை, ஒரு பர்ஸிலும் பணத்தைத் தவிர முக்கிய மான காகிதங்கள் இருக்கவில்லை. சமுத் திரமும் கூவமும் சௌகரியமாக இருந் தன, பர்ஸ்களை ஏற்றுக் கொள்ளுவ தற்கு. இப்போது கேதாரத்தின் பர்ஸில் இரண்டு கடிதங்கள் இருந்தன. சில விலாசங்கள் இருந்தன. அவற்றை அவன் படித்துப் பார்த்து முக்கியத்து வத்தைத் தெரிந்து கொள்ளவில்லை தான். ஆனுலும் கடிதங்களைச் சேர்ப் பித்துவிட வேண்டும் என்று சங்கற்பம் செய்து கொண்டான்.

என்கொயரி கவுண்டர் நினைவுக்கு வந்தது. அதே சமயத்தில் அங்கே பணி புரிகிறவள் மங்களா என்றும், அவள் தான் கேதாரத்துக்கு முன்னுல் நடந்து சென்றவள் என்றும் நினைவுக்கு வந்தன.

கவுண்டருக்குச் சென்ற போது, அங்கே யாருமே இல்லை. கொச்சி கவுண்டரில் விசாரித்தான். மங்களா எட்டு மணிக்குத்தான் வருவாள் என்ற தகவல் கிடைத்தது.

மணிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. நேரே ஹிக்கின்பாதம்சுக்கு வந்தான். பிரும்மாண்டமான புத்தகச் சாலை முன் பத்து அல்லது பன்னிரண்டு பேர் புத்தகங்களையும் பத்திரிகைகளை யும், நின்ற இடத்திலிருந்தே புரட்டியும் படித்தும் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்கள்.

மணி அலுத்துக் கொண்டே திரும்பி ஞன். கண் முன் காந்தி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு எழுப்பப்பட் டிருந்த ஞாபகச் சின்னம் கண்ணில் பட்டது. அந்தச் சின்னத்தில், காந்தி சென்னைக்கு விஜயம் செய்த விவரங்கள் சுருக்கமாகப் பொறிக்கப்பட்டிருந்தன. சின்னத்தின் கீழே, பரவலாக வாழைப் பழ, ஆரஞ்சுப் பழத் தோல்களும் சாப் பிட்டானபின் பந்தாகச் சுருட்டி வீசப் பட்ட இலைகளும் காகிதங்களும் சிதறிக் கிடந்தன. ஒரு டிபன் இலை திறந்து கிடக்க, அதன் மீது ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. காந்திஜியின் சின்னத் துக்கு நேரும் கதியை நினைத்துக் கொண்டே அவன் ஆரும் பிளாட் பாரத்தை நோக்கி நடந்தான். வழி

யெல்லாம் பெட்டிகள், கூடைகள், மூட்டைகள். இரு பெட்டிகளுக்கு நடுவே ஒரு சிறு துணியின் மேல் ஒரு குழந்தை அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. பெற்றவர்கள் பெட்டிகளின் மேல் உட்கார்ந்து கொண்டு, விரல்களில் எண்ணெய் கசியும் வடைகளை விண்டு கொண்டிருந்தார்கள்.

மணி நடந்தான். விசாலமான அந்தப் பெரிய ஹாலில் நானாவிதமான மக்கள். அவசரப்படுகிறவர்களுடன் பொறுமைசாலிகள் போட்டி இட்டார்கள். கொத்துக் கொத்தாக நின்று பேசினார்கள். குழந்தைகள் தூங்கின, ஓடின, விளையாடின.

பூட் பாலிஷ் செய்கிறவன், ஊதுபத்தி வியாபாரி, கால் ஆணி எடுக்கிற வைத்தியர், வக்கீல்களுக்குக் கட்சிக்காரர்களைத் தேடிப் பிடிக்கும் புரோக்கர்கள், ஹோட்டல் அறைகளுக்கு அழைக்கிற ஏஜெண்டுகள் என்று எத்தனையோ விதமான மனிதர்கள் அங்குமிங்குமாய் ஊர்ந்து கொண்டிருந்தார்கள். ஓரிரு நாய்கள் யாரையும் லட்சியம் செய்யாமல் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருந்தன.

மணி ஆறாவது பிளாட்பாரத்தை அடைந்தான். நீல நிற பிருந்தாவனம் நின்று கொண்டிருந்தது. ஐஸ்கிரீம், வாழைப்பழம், குளிர்பானம் டிராலிகள் என்று ஒரே சத்தம். பிளாட்பாரத்தில் நடக்க முடியாமல் சாமான்கள், மூட்டைகள். அதே பிளாட்பாரத்திலிருந்து மத்தியானம் ஒன்று ஐம்பதுக்குப் புறப்படப் போகிற பம்பாய் ஜனதா எக்ஸ்பிரஸில் ஏறப் போகும் பார்ஸல்கள் மலை போலக் குவிந்து கிடந்தன.

இரு பெண்கள் ஆங்கிலத்தில் பேசிச் சிரித்துக் கொண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டார்கள். அவர்கள் சாப்பிடும் அழகைக் கூட இருந்த இளைஞர்கள் ரசித்து மெய் மறந்து நின்றார்கள்.

ஒரு கிழவரையும் கிழவியையும் ரயிலில் ஏற்றிவிட்ட திருப்தி. பெண்டாட்டி பிரசவத்துக்காகத்தான் போகிறாள் என்ற நிறைவு இருந்தும், அவளைப் பிரிய வேண்டியிருக்கிறதே என்றஏக்கம். எச். எம்.டி.யில் இண்டர்வ்யூ எப்படி முடியும், வேலை கிடைக்குமா என்ற கவலை. மெட்ராஸ் வியர்வையிலிருந்து குளுகுளுவென்றிருக்கும் பெங்களூருக்குப் போகிறோம் என்ற மகிழ்ச்சி. பெண்ணை ஒருவழியாக ஒருவன் கையில் கொடுத்து இப்போது அவளை அவனிடம் ஒப்படைக்கப் போகிறோம் என்ற சாந்தி. முந்தின நாள் ஆஸ்பத்திரியில் இரவு திடீரென்று காலமாகிவிட்ட உறவினருடைய உடல் போய்ச் சேரும் வரை இருக்குமா என்ற கேள்வியோடே உண்டாகும் துக்கம். கணவருடன் அன்று இரவு என்னென்ன பேச வேண்டும், எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும், அவர் அவள் உடலைத் தீண்டும் போது உடலில் என்னென்ன விதமாய் எப்படி எப்படிச் சுகமாய் உணர்ச்சிகள் பிறீடும் என்றெல்லாம் முதலிரவைச் சுற்றி வட்டமிடும் கனவு. பத்து நாட்கள் கழுத்தை அறுத்து விட்டு ஒரு வழியாய்த் திரும்பிச் செல்லுகிற குடும்பத்தை வழி அனுப்பும் உற்சாகம். வந்த காரியம் இப்படித் தோல்வியில் முடிந்து விட்டதே என்ற வருத்தம். இவ்வளவு தூரம் பெண்ணை அழைத்து வந்து காட்டியும், பாடத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்துக்காக ஒதுக்கிவிட்டார்களே என்ற ஏமாற்றம். 'விட்டுத் தள்ளுங்கள் அப்பா, நான்தான் வேலை செய்து சம்பாதிக்கிறேனே' என்ற ரீதியில் பேசினவள் காதில் மட்டுமே உள்ளூறக் கேட்கும் கேவல்....

இன்னும் எத்தனை எத்தனை உணர்ச்சிகளோ, உள்ளங்களோ!

ஆறாம் பிளாட்பாரத்தில் ஓர் உலகமே இயங்கிக் கொண்டிருந்தது.

உணர்ச்சி அற்றவனாய், எதிலும் உள்ளம் ஒட்டாதவனாய் மணி இரு முறைகள் நடந்தாகிவிட்டது. மீண்டும் ரயிலின் மறு கோடிக்கு வந்தபோது, ஒலிபெருக்கியிலிருந்து அறிவிப்பு அலறியது. காதைப் பொத்திக் கொண்டே அவன் கார்ட் வான் பக்கம் வந்தான்.

''இன்னிக்கு யார் அப்பா, கார்டு?''

ஒரு காக்கிச் சட்டை சிப்பந்தியிடம் மணி கேட்டான்.

''ரொஸாரியோ!''

அவன் சொல்லி முடிப்பதற்கும் ரொஸாரியோ அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது.

''குட்மார்னிங், ஸார்!'' என்றான் மணி.

''குட்மார்னிங் மணி... ஒரே நிமிஷம் இதோ வரேன்.''—ரொஸாரியோ தம் கூட வந்த இளைஞனிடம் பேசலானார்.

அவருடைய கம்பீரமான உயரத்தையும், செதுக்கிவிட்ட தாடையையும், பழுப்பு நிற மீசையையும் பார்த்துக் கொண்டே நின்ற மணிக்கு, அவருடன் பேசும் எட்மண்டை ஓர் அறை அறையலாமா என்று எரிச்சல் வந்தது.

''எனக்கு அவசியம் டாடி....எப்படியாவது சமாளிக்கத் தரணும்!''

''ஓ, மை பாய்... தொலைச்செடுக்காதே. எங்கிட்டே மூணு ரூபாய்

இருக்குது. நாளைக்கு வேணுமானால் பாக்கலாம்!''

''நோ, இன்னிக்கே வேணும், டாடி!''

முதல் மணி அடித்து இரண்டு நிமிடங்களாகி விட்டன. ரொஸாரியோ பொறுமை இழந்தார்; பிடிவாதம் பிடிக்கும் பிள்ளையைச் சமாளிக்க வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தார். பாக்கெட்டிலிருந்து அந்த மூன்று ரூபாய்களையும் எடுத்துப் பிள்ளை முன் நீட்டினார். அவன் அதைச் சீண்டவில்லை.

''வீட்டுக்குப் போ!'' என்றார் கார்டு.

''நீங்க கொடுக்கல்லேன்னா உங்க கூடவே வருவேன்!''

மணிக்குப் பொறுக்க முடியவில்லை.

''எட்மண்ட்.''

அவனுடைய குரலைக் கேட்டு எட்மண்ட் திரும்பினான்.

''ஸார்! உங்க பிள்ளைக்கு இப்போ என்ன வேண்டுமாம்?''

''ஒண்ணுமில்லே, மணி! நீ வொர்ரி பண்ணிக்காதே.''

''சொல்லுங்கள், சார்....''

''எனக்குப் பத்து ரூபாய் வேணும்!''

''நீங்கள் போங்கள், சார். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். என்னுடன் வா, எட்மண்ட். நான் தரேன்.''

''நிச்சயமாக?''

''என்னிடம் நம்பிக்கை இல்லையா?''

ரொஸாரியோவின் வேதனை முகத்தில் படர்ந்தது. மணி பத்து ரூபாயை எட்மண்ட் கையில் கொடுப்பதையும், அதை வாங்கிக் கொண்ட அவன் பெற்றவரின் முகத்தையும் பாராமல் விரைந்து செல்லுவதையும் பார்த்தவராய் நின்றார்.

''மன நிம்மதியுடன் போங்கள், ஸார்!'' என்றான் மணி.

''இவன் பிறந்த அன்னிக்கே என் நிம்மதி செத்துவிட்டது மணி.... நான் ரொம்பத் துரதிருஷ்டசாலி! இந்தப் பத்து ரூபாயை நான் நாளன்னிக்குத் திருப்பித் தருகிறேன்.''

''பரவாயில்லே! நீங்க சந்தோஷமா போய் வாங்க!''

''தாங்க்யூ... மணி... ஒரு சின்ன உதவி பண்ணுவியா?''

''ஓ, பேஷா!''

''இந்த லோன் அப்ளிகேஷனை எஸ். எஸ்.ஸிடம் கொடுத்து அவரைக் கையெழுத்தைப் போட்டு, நாளைக்குக் காத்தாலே கோவாபரேட்டிவ் பாங்கில் கொடுக்கச் சொல்லு... லோன் வாங்குகிறேன்... எனக்கு அவர் தான் ஷ்யூரிட்டி.''

''எத்தனை ரூபாய் ஸார்?''

''இருநூறு ரூபாய். அதற்கு மேலே கிடைக்காது.''

மணி ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள் இரண்டாவது மணியடித்தது.

''மேரி எப்படி இருக்கிறாள்?''

''சௌக்கியம். தாங்க்ஸ். நாளன்னைக்கு உன்னைப் பார்க்கிறேன்! வர்றேன்!'' அவருடைய கையில் பச்சைக் கொடி, சிவப்புக் கொடியிலிருந்து பிரிந்து வந்தது. கை உயரக் கிளம்பியது. பிறகு ஆடியது. கை நடுக்கத்துடன் ஆடுவதாக மணிக்குத் தோன்றியது.


ஐந்தே நிமிடங்களில் ஆறாவது பிளாட்பாரம் ஜனக்கூட்டத்தை அள்ளி வெளியே வீசியது. மணி மெதுவாக நடந்தான். எட்டரை மணிக்கு ஏழாவது பிளாட்பாரத்திலிருந்து ஹௌரா ஜனதா புறப்படும். இனிமேல் ஐஸ்கிரீம், பிஸ்கட், சாக்கலேட், டிராலிகள் இவற்றின் சத்தம் அங்கே கேட்க ஆரம்பிக்கும். இதே ஆறாம் பிளாட்பாரத்தில் நீலகிரி எக்ஸ்பிரஸ் இன்னும் பத்து நிமிடங்களில் வந்து சேரும். வரவேற்க ஆண்களும் பெண்களும் போர்ட்டர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு ஜன மூட்டை பிருந்தாவனத்தில் வெளியேற இன்னொரு ஜனமூட்டை வந்து அவிழ்ந்து சிதறப் போகிறது. போவதும் வருவதும் புறப்படுவதும் சேருவதும்தான் பிரயாணம்! யார் யார் எதை எதை நோக்கிப் பிரயாணம் செய்கிறார்கள்! இந்தப் பிரயாணமே ஒரு மகா பிரயாணத்தின் ஒரு பின்னமா? பெரிய பிரயாணத்தினுள் அடங்கிப் போகிற பிரயாணமா? இந்த ஒரு சின்னப் பிரயாணத்துக்காக இவ்வளவு பெரிய ஸ்டேஷன், ஏற்பாடுகள், சிப்பந்திகள்...

எட்டு மணிக்கு என்கொயரி கவுண்டரில் மங்களாவைச் சந்தித்தான் மணி.

அவள் அக்கறையுடன் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, எஸ். எஸ்.ஸிடம் கேதாரத்தின் பர்ஸை ஒப்படைக்கச் சொன்னாள். அவளிடமிருந்து ஓரிரு தகவல்களைப் பெற்றுக் கொண்ட பின் எஸ். எஸ்.ஸின் அறையை அடைந்து பர்ஸை ஒப்படைத்து விட்டான்.

ரொஸாரியோ இருநூறு ரூபாய் கடன் வாங்க வேண்டியது அவசியம்தானா என்ற கேள்வி அவனை அரித்தது. அதன் பதிலை அவன் தீர்மானிக்கும் வரை, 'லோன் அப்ளிகேஷனை' எஸ். எஸ்.ஸிடம் கொடுக்க வேண்டாம் என்று அவன் முடிவு செய்தான்.

டைனமோ லைட்டோடு, குஷன் சீட்டோடு அவன் மனத்தைக் கொள்ளை கொண்ட அவனுடைய சைக்கிள் திடீரென்று கண்முன் தோன்றியது. ரொஸாரியோவுக்கும் சைக்கிளுக்கும் இடையில் நடந்து வந்த அவனது மனத்தின் பிரயாணம் முடியவில்லை. (தொடரும்)


யாருக்கு சாக்லேட், பிஸ்கட் வேண்டும்..?
எனக்கு வேண்டாம்!
வேண்டாம்!
...ண்டாம்..!
....டாம்!
ஆப்பிள், ஆரஞ்சு, அன்னாசிப் பழங் கூட வேண்டாமா?
தேவையில்லை!
...வையில்லை! ...ல்லை..!
'கல்கி'யில் வாண்டுமாமாவோட சித்திரத் தொடர்கதை வரப்போகிறதாம். இதோ பத்திரிகை. இது கூட வேண்டாமா?
நான் பார்த்து விட்டுத் தான்.
எனக்குத் தான்.
என்னிடம் தான் தரணும்.
அதை யார் வேண்டாமென்று சொன்னது?
கல்கி
இப்படி அவசரப் பட்டால்? அக்டோபர் 3ந் தேதி கல்கி இதழில் தானே கதை ஆரம்பமாகப் போகிறது. அது வரை காத்திருங்கள்!



அத்தியாயம் ஐம்பத்தேழு

விடுதலை

வந்தியத்தேவன் சிறிது நேரம் வாசற் படிக்கருகில் கவலையுடன் தயங்கி நின்றான். புலிகளைப் பார்த்தவண்ணம் மீசையில் கையை வைத்து முறுக்கிக் கொண்டு நின்ற காவலன் மீது பாய்ந்து அவனைத் தீர்த்துக் கட்டி விட்டு மேலே போகலாமா என்று ஒரு கணம் யோசித்தான். ஆனால் புலிக் கூண்டுகளுக்கு அப்பால் அடுத்த வாசற்படிக்கருகில் மற்றும் இரு காவலர்கள் நிற்பது தெரிந்தது. அவர்களில் ஒருவன் இந்தக் காவலனுக்கு ஏதோ சமிக்ஞையினால் தெரிவித்து விட்டு அப்பால் போனான். ஒரு வேளை தன்னைப் பற்றித்தான் அவர்கள் ஜாடையாகப் பேசிக் கொள்கிறார்களோ? இந்தக் காவலனைத் தாக்கி வீழ்த்திவிட்டுப் போனாலும், அப்பால் இது போன்ற பல வாசற்படிகளும் அவற்றில் காவலர்களும் இருப்பார்கள். அவர்களையெல்லாம் சமாளித்துவிட்டுத் தப்பிச் செல்ல முடியுமா? அதைக் காட்டிலும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று புலிக் கூண்டுகளைத் திறந்து விட்டால் என்ன? அப்போது ஏற்படக் கூடிய குழப்பத்தில் தப்பிச் செல்வது எளிதாக இருக்கும் அல்லவா?....

இப்படி அவன் எண்ணியபோது, காவலன், ''ஓகோ! தப்பித்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறாயோ?'' என்று கூறியதைக் கேட்டு வந்தியத்தேவன் ஒரு கணம் திடுக்கிட்டான்.

புலிகளில் ஒன்று உறுமியது.

''அட நாயே! சும்மா கிட!'' என்று அதட்டினான் காவற்காரன்.

அவன் புலியுடன் பேசுகிறான் என்று அறிந்ததும் வந்தியத்தேவன் சிரித்தான்.

காவற்காரன் திரும்பிப் பார்த்தான.

''பின்னே, பாருங்க, ஐயா! இந்தப் புலி என்னை மிரட்டப் பார்க்கிறது. இதுமாதிரி எத்தனையோ புலிகளை நான் பார்த்திருக்கிறேன்! இந்தச் சிங்கத்திடம் அதன் ஜம்பம் சாயாது!'' என்று கூறி மறுபடியும் மீசையை முறுக்கினான்.

வந்தியத்தேவன் ''கூண்டுக்குள் இருக்கும் வரையில் புலியும் எலியும் ஒன்றுதான்! அதன் ஜம்பம் எப்படிச் சாயும்?'' என்று சொல்லி விட்டுக் கையிலிருந்த பெரிய வேளாரின் இலச்சினையைக் காட்டினான்.

''போங்க, ஐயா, போங்க! முதன் மந்திரியின் ஆட்கள் வாசலிலே உங்களுக்காகக் காத்திருக்கிறார்களாம்! சிக்

சிரம் போங்க!'' என்று கூறிவிட்டு, அவர்கள் வந்த பக்கத்தை நோக்கி, ''அடே, பைத்தியக்காரா! சும்மா இருக்கமாட்டே!'' என்று கூவினான்.

அச்சமயம் வந்தியத்தேவன் பைத்தியக்காரனின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் கை நடுங்குவதைத் தெரிந்து கொண்டு, கையை இறுக்கிப் பிடித்துத் தைரியப்படுத்தினான்.

பிறகு, காவற்காரனைத் தாண்டி இருவரும் முன்னால் சென்றார்கள்.

''விடுதலை வேண்டுமாம், விடுதலை! எல்லாரையும் விடுதலை செய்துவிட்டால் பிறகு எங்கள் பிழைப்பு என்ன ஆகிறது?'' என்று அந்தக் காவலன் கூறியது அவர்கள் காதில் விழுந்தது.


வந்தியத் தேவன் எவ்வளவோ துணிவுள்ளவனாயினும், அச்சமயம் அவன் நெஞ்சம் 'பக் பக்' என்று அடித்துக் கொண்டிருந்தது. வாசலில் முதன் மந்திரியின் ஆட்கள் காத்துக் கொண்டிருப்பதாகக் காவலன் சொன்னது அவன் மனத்தில் பதிந்திருந்தது. சிறைக்குள்ளே இருட்டாயிருக்கிறது; அதனால் இங்குள்ள காவலர்களை எளிதில் ஏமாற்றி விட்டுச் செல்லலாம். வெளியில் வெளிச்சமாயிருக்குமே? முதன் மந்திரியின் மனிதர்கள் இந்த ஆள் மாறாட்டத்தைக் கண்டுபிடித்து விட்டால் என்ன செய்கிறது? ஆயினும் பார்க்கலாம், ஒரு கை! எதற்கும் தயாராயிருக்க வேண்டியதுதான்! நல்ல வேளையாக இந்தப் பைத்தியக்காரனும் கெட்டிக்காரப் பைத்தியக்காரனாயிருக்கிறான். சமயத்தில் கை கொடுப்பான்!...

பாதாளச் சிறையில் பல வாசல்களையும் கடந்த பிறகு தங்க நாணய வார்ப்படச் சாலையின் வாசல்களையும் கடந்து அவர்கள் விரைந்து சென்றார்கள். ஆங்காங்கே இருந்த காவலர்கள் அவர்களிடமிருந்த வேளாரின் இலச்சினையைப் பார்த்ததும் ஒதுங்கி வழி விட்டார்கள். இவர்களை யாரும் சந்தேகிக்கவும் இல்லை; உற்றுப் பார்க்கவும் இல்லை.

போகும்போதே வந்தியத்தேவன் பரபரப்புடன் யோசித்து ஒரு திட்டம் போட்டுக் கொண்டான். நீண்ட அறை ஒன்றில் அவர்கள் போய்க் கொண்டிருந்த போது அவனுடைய துணைவன் காதில், ''நீ முதன் மந்திரி வீட்டுக்குப் போகப் போகிறாயா? என்னுடன் வருகிறாயா?'' என்று கேட்டான்.

''முதன் மந்திரி வீட்டுக்குப் போனால் மீண்டும் பாதாளச் சிறைதான்! உன்னுடனே வருவேன்! நீ எங்கே போவதாக உத்தேசம்?'' என்றான்.

''கடவுள் அருள் இருந்தால், ஈழநாட்டுக்கே போய் விடலாம்! முதன்



மந்திரியின் ஆட்களுக்கு முன்னால் நீ என்னைப் 'பிநாகபாணி' என்று கூப்பிடு!....உன் பெயர் என்ன?''

''பைத்தியக்காரன்!''

''உண்மையான பெயர்? உன் பெற்றோர்கள் வைத்த பெயர்?''

''ஆ! அதுவா? பெற்றோர்கள் எனக்குக் 'கரிய திருமால்' என்று பெயரிட்டனர். சுற்றத்தாரும் ஊராரும் 'கருத்திருமன்' என்று அழைத்தார்கள்!''

''நல்ல பெயர்தான்! கருத்திருமா! தஞ்சை வீதிகளில் நாம் போகும்போது உன் தோளைத் தொடுவேன். உடனே நீ என்னுடன் ஓடி வரச் சித்தமாயிருக்க வேண்டும். நன்றாக ஓடுவாய் அல்லவா?''

''ஓ! ஓட்டத்தில் ஈழத்தரசன் மகிந்தன்கூட என்னுடன் போட்டியிட முடியாது!''

வந்தியத்தேவன் சிரித்தான்.

''நீ நல்ல பைத்தியக்காரன்!'' என்றான்.

பொற்காசு வார்ப்படச் சாலையைக் கடந்து அவர்கள் வெளியில் வந்தார்கள்.

வந்தியத்தேவன் பயந்தபடி அங்கே முதன் மந்திரியின் ஆட்கள் ரொம்பப் பேர் இல்லை. இரண்டே இரண்டு பேர் தான் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் நல்ல குண்டன். வந்தியத் தேவனுக்கு அவனை எங்கேயோ எப்போதோ பார்த்த மாதிரி இருந்தது. தெளிவாக நினைவுக்கு வரவில்லை.

''நீங்கள்தானே முதன் மந்திரியின் ஆட்கள்!'' என்றான் வந்தியத்தேவன்.

''என்ன தம்பி, அதற்குள்ளேயா மறந்து போய் விட்டாய்?'' என்றான் அவர்களில் ஒருவன்.

''இல்லை, இல்லை! நீங்கள்தானே எங்களை முதன் மந்திரி வீட்டுக்கு அழைத்துப் போகப் போகிறீர்கள்?'' என்றான் வந்தியத் தேவன்.

''ஆமாம்; நாங்கள்தான்! நீ முதன் மந்திரி வீட்டுக்குப் போகும் வழியைக் கூட மறந்து போனாலும் போய் விடுவாய்!''

அப்போது கருத்திருமன், வந்தியத் தேவன் கூறியதை நினைவுகூர்ந்து, ''அப்பா, பிநாகபாணி! எனக்குப் பயமாயிருக்கிறது! முதன் மந்திரி மறுபடியும் என்னைப் பாதாளச் சிறையில் தள்ளி விடுவாரோ, என்னவோ!'' என்றான்.

''அதெல்லாம் மாட்டார், அப்பனே! எங்கள் முதன் மந்திரியின் சமாசாரம் உனக்குத் தெரியாது போலிருக்கிறது. ஆனால் தப்பித்துக்கொள்ள மட்டும் பார்க்காதே! அப்படி ஏதாவது செய்தால், நாங்கள் பாதாளச் சிறையில் இருக்க நேரிடும்!''

இவ்விதம் சொல்லிவிட்டு அந்த ஆட்களில் குண்டனாயிருந்தவன் முன்னால் நடந்தான். இன்னொருவன் வந்தியத் தேவனுக்கும் கருத்திருமனுக்கும் பின்னால் காவலாக வந்தான்.

தஞ்சாவூர் வீதிகளில் கலகலப்பே இல்லை. ஜனசஞ்சாரமும் இல்லை. ஆதித்த கரிகாலரின் இறுதிச் சடங்குகளினால் ஏற்பட்ட கிளர்ச்சிகள் அடங்கிவிட்ட பிறகு கோட்டைக்குள் வசித்தவர்கள் அவரவர்களுடைய அலுவல்களில் ஈடுபட்டிருந்தார்கள். கோட்டைக்கு வெளியில் கொடும்பாளூர்ப் படைகள் கடுமையாகக் காவல் புரிந்து வந்தன. கோட்டைக்கு வெளியிலிருந்து யாரும் உள்ளே வருவதற்கு அநுமதிக்கப்படவில்லை.

வந்தியத் தேவன் இருபுறமும் உற்றுப் பார்த்துக்கொண்டு நடந்தான். அந்த இரண்டு ஆட்களிடமிருந்து தப்பிச் செல்வது மிகவும் சுலபம். ஆனால், மறுபடியும் பிடிபடாமல் இருக்க வேண்டுமே? கோட்டைக்குள்ளிருந்து வெளியேறுவதற்கும் வசதியாக இருக்க வேண்டுமே? இந்த எண்ணத்தினால் வந்தியத்தேவன் வீதியின் இரு பக்கங்களையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டு நடந்தான்.

பெரிய பழுவேட்டரையருடைய அரண்மனை வாசலைத் தாண்டிச் சென்றதும், வந்தியத் தேவனுடைய பரபரப்பு அதிகமாயிற்று. அடுத்தாற்போல், அந்தச் சந்து வரப் போகிறது. முன்னொரு தடவை சின்னப் பழுவேட்டரையரின் ஆட்களிடமிருந்து தான் தப்பி ஓடிச் சென்ற சந்துதான்! அதைத்தான் அவனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். வளைந்து வளைந்து சென்ற அந்தச் சந்தில் மூலை முடுக்குகள் அதிகம் இருந்தன. இரண்டு புறமும் தோட்டச் சுவர்கள். சுவர்களின் மேலாக வெளியில் தாழ்ந்து தொங்கின மரங்கள். அங்கேதான் இக் காவலர்களிடமிருந்து தப்பி ஓடினால் ஓடலாம். முன்போலவே பெரிய பழுவேட்டரையருடைய மாளிகைத் தோட்டத்துக்குள் குதிக்கலாம். அங்கே குதித்து விட்டால் அடர்ந்த மரங்களுக்கிடையே ஒளிந்துகொள்ள வசதியாயிருக்கும். முன்போலவே பொக்கிஷ நிலவறைப் பாதை மூலமாக வெளியேறவும் இலகுவாய் இருக்கும். வேறு வழியில் தப்புவது சாத்தியமில்லை...

இதோ அந்தச் சந்து வழி, அவன் முன் தப்பிச்சென்ற வழி வந்துவிட்டது.

வந்தியத்தேவன் கருத்திருமனுடைய தோளைத் தொடலாமா என்று எண்ணினான். ஆனால் இது என்ன? அங்கே யார் கூட்டமாக வருகிறார்கள்? சிவிகைகள்! குதிரைகள்! கையில் வேல் பிடித்த காவல் வீரர்கள்!

இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் வருகிறவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ, பெருந்தர அதிகாரிகளாகவோ இருக்க வேண்டும்.

இதை உணர்ந்து முதன் மந்திரியின் ஆட்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். வந்தியத்தேவன் கவனத்தைக் கவர்ந்த சந்தை அவர்களும் கவனித்தார்கள். உடனே அவ்விடம் சென்று ஒதுங்கி நின்றார்கள். தாங்கள் அழைத்து வந்த இருவரையும் தங்களுக்குப் பின்னால் நிறுத்திப் பிறர் அறியாவண்ணம் அவர்களை மறைத்துக் கொண்டு நின்றார்கள்.

எதிரில் கூட்டமாக வந்தவர்கள் விரைவில் அந்த இடத்தை அடைந்து அவர்களைத் தாண்டிச் சென்றார்கள்.

முன்னால் வேல் பிடித்த வீரர்கள் சிலர். பிறகு, மூன்று கம்பீரமான வெண் புரவிகளின் பேரில் மலையமானும் கொடும்பாளூர் வேளாரும் அவர்களுக்கு நடுவில் ஒருவரும் வந்தனர். நடுவில் வந்தவர் பொன்னியின் செல்வர் என்பதை வந்தியத்தேவன் கண்டான்.

ஆகா! எவ்வளவு சமீபத்தில் இருக்கிறார்? ஆனாலும், எவ்வளவு தூரமாகப் போய்விட்டார்?

ஒரு கணம் வந்தியத் தேவன் எண்ணினான்: காவலர்களை மீறி ஓடிச் சென்று அவர் முன்னால் நிற்கலாமா என்று. உடனே அந்தக் கருத்தை மாற்றிக் கொண்டான். தமையனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவனுக்குப் பொன்னியின் செல்வர்தான் எப்படிக் கருணை காட்ட முடியும்?... அல்லது சிநேக உரிமை கொண்டாட முடியும்? தன்னைப் பார்த்ததும் அவர் அருவருப்பு அடைந்தாலும் அடையலாம். பக்கத்திலுள்ள மலையமானும் வேளாரும் என்ன செய்வார்கள் என்று சொல்ல முடியாது.

இதற்குள், அவர்களுக்குப் பின்னால் வந்த சிவிகைகளின் மீது வந்தியத் தேவன் கவனம் சென்றது.

ஆகா! இளையபிராட்டி குந்தவை! கொடும்பாளூர் இளவரசி வானதி! சம்புவரையர் மகள் மணிமேகலை!

வந்தியத் தேவனுடைய நெஞ்சு படாத பாடுபட்டு விம்மித் துடித்தது.

வேறு எந்தச் சந்தர்ப்பமாயிருந்தாலும், இந்த மூன்று பெண்மணிகளில்



வேதாந்த போதனையில் விற்பன்னரும், ஸ்ரீ காஞ்சி ஆசாரியாளிடமிருந்து 'பாஷ்ய பாவக்ஞ' என்ற விருது பெற்றவருமான ஸ்ரீ வரகூர் கல்யாணசுந்தர சாஸ்திரிகளின் மணிவிழாவையொட்டிச் சமீபத்தில் சென்னையில் பாராட்டு விழா நடைபெற்றது. இச் சமயத்தில் வெளியிடப்பட்ட சிறப்பு மலரைத் தமிழக கவர்னர் ஸ்ரீ கே. கே. ஷா ஸ்ரீ சாஸ்திரிகளிடம் அளிக்கிறார். ●

எவரையும் அணுகி உதவி கோரலாம். அவர்களும் மனமுவந்து உதவி செய்வார்கள். ஆனால், இப்போது? ஆதித்த கரிகாலனை வஞ்சகத் துரோகம் செய்து கொன்றவனைப் பார்த்தால் இளைய பிராட்டியும் இளவரசி வானதியும் எத்தனை அருவருப்புக் கொள்வார்கள்?

போகட்டும், இந்தப் பேதைப் பெண் மணிமேகலையை இவர்கள் தங்களுடன் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களே அதற்காக மகிழ்ச்சியடைய வேண்டியதுதான். மணிமேகலை இவர்களிடம் கடம்பூரில் நடந்ததை யெல்லாம் கூறியிருப்பாளா? தன்னைத் தப்புவிப்பதற்காக 'நான்தான் கொன்றேன்' என்று சொன்னாளே, அம்மாதிரி இவர்களிடமும் சொல்லியிருப்பாளா? இல்லை, சொல்லியிருக்க மாட்டாள். அவ்விதம் சொல்லியிருந்தால் இவர்கள் அவளைத் தங்களுடன் இவ்வளவு ஆதரவாக அழைத்துப் போக மாட்டார்கள்.

சிவிகைகள் அவர்கள் நின்றுகொண்டிருந்த சந்தைக் கடந்து சென்றன. பின்னால் வந்த காவலர்களும் போனார்கள்.

"சரி; வாருங்கள்! இனி நாம் போகலாம்" என்று சொல்லி விட்டு முதன் மந்திரியின் ஆட்கள் முன்னால் வேகமாக நடந்தார்கள்.

வந்தியத் தேவன் ஒரு நொடியில் ''இதுதான் சமயம்'' என்ற முடிவுக்கு வந்தான். கருத்திருமனுடைய தோளைத் தொட்டுவிட்டுச் சந்து வழியாக ஓட்டம் பிடித்தான். கருத்திருமனும் அவனைத் தொடர்ந்து ஓடினான்.

காவலர்கள் இருவரும் பின்னால் ஓடி வரும் சத்தம் கேட்டது. சிறிது நேரம் வரையில் திரும்பிக்கூடப் பார்க்காமல் இருவரும் ஓடினார்கள். முதலில், கருத்திருமன் திரும்பிப் பார்த்தான்.

''ஒருவன் பின்தங்கி விட்டான்; ஒருவன்தான் வருகிறான்!'' என்றான்.

வந்தியத்தேவனும் திரும்பிப் பார்த்துக் குண்டன் பின்தங்கிவிட்டதை அறிந்தான். ஒருவனாயிருந்தாலும் அவனுடன் நின்று சண்டை பிடிக்கப் பார்ப்பது அறிவுடைமை ஆகாது. ஆகையால், கருத்திருமனுக்கும் சமிக்ஞை காட்டி விட்டு மேலே ஓடினான்.

முன்னொரு தடவை அவன் மதிள் சுவர் ஏறிக் குதித்த அதே இடத்தை அடைந்த பிறகுதான் நின்றான். முறிந்து வளைந்திருந்த கிளை அப்படியே இன்னும் இருந்தது. அதைப் பிடித்துத் தாவிச் சுவர் மீது ஏறிக் கொண்டான். கருத்திருமனையும் கையைப் பிடித்துத் தூக்கி ஏற்றிவிட்டான்.

இருவருமாக, முறிந்து மடிந்திருந்த அந்த மரக் கிளையைச் சிறிது ஆட்டித் துண்டித்தார்கள். பின்தொடர்ந்து வந்த ஆள் அருகில் வந்ததும் அவன் பேரில் தள்ளினார்கள்.

மரக்கிளை அவன் பேரில் விழுந்ததா என்பதைக் கூடக் கவனியாமல் சுவர் மேலிருந்து தோட்டத்தில் குதித்தார்கள். அடர்ந்த மரங்கள் — புதர்கள் இவற்றினிடையே புகுந்து சென்று, மறைந்து கொண்டு நின்று சுவரைக் குறி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

யாரும் தங்களைத் தொடர்ந்து பிடிப்பதற்குத் தோட்டத்துக்குள் குதிக்கவில்லை என்று தெரிந்து கொண்டு மேலே சென்றார்கள்.

''அப்பா! தப்பிப் பிழைத்தோம்!'' என்றான் வந்தியத் தேவன்.

''இதற்குள் என்ன ஆகி விட்டது? கோட்டைக்கு வெளியே போவது எப்படி?'' என்றான் கருத்திருமன்.

''அதற்கு வழி இருக்கிறது. கொஞ்சம் பொறுமையாக இரு!''

பழுவேட்டரையரின் மாளிகையை நெருங்கியதும் வந்தியத்தேவன் நின்றான். மாளிகையில் முன்போலக் கலகலப்பு இல்லைதான். ஆயினும் நடமாட்டம் இருந்தது. இருட்டும் நேரத்தில் பொக்கிஷ நிலவறையில் புகுவதுதான் உசிதமாயிருக்கும்.

இவ்விதம் தீர்மானித்து ஒரு மரக் கட்டையின்மீது உட்கார்ந்தான். கருத்திருமனையும் உட்காரச் செய்தான்.

''இனி இருட்டிய பிறகுதான் நம் பிரயாணத்தைத் தொடங்க வேண்டும். அதுவரையில் உன்னுடைய கதையைச் சொல்லு, கேட்கலாம்!'' என்றான்.

''அதுதான் சொல்லமுடியாது என்று முன்னமே சொன்னேனே!''

''அப்படியானால் உன்னை வெளியே அழைத்துப் போகவும் முடியாது.''

''நான் உண்மையைச் சொல்லாமல் ஏதாவது கற்பனை செய்து கூறினால் என்ன பண்ணுவாய்?'' என்றான்.

''கதை — கற்பனை எதுவாயிருந்தாலும் சொல்லு! கொஞ்ச நேரம் பொழுது போக வேண்டும் அல்லவா?''

கருத்திருமன் சொல்லத் தொடங்கினான். உண்மையிலேயே அது அபூர்வமான பல சம்பவங்கள் நிறைந்த கற்பனைக் கதை போலவே இருந்தது.


அத்தியாயம் ஐம்பத்தெட்டு

கருத்திருமன் கதை

கரியதிருமால் என்னும் கருத்திருமன் கோடிக் கரைக்குச் சிறிது வடக்கே கடற்கரை ஓரத்தில் உள்ள தோப்புத் துறை என்னும் ஊரினன். அங்கிருந்து ஈழத் தீவுக்குப் படகு செலுத்திப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தான். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவன் ஒருமுறை ஈழத்திலிருந்து தோப்புத் துறைக்கு வந்து கொண்டிருந்தபோது புயல் அடித்துக் கடல் கொந்தளித்தது. படகு கவிழாமல் கரையில் கொண்டு வருவதற்கு மிகவும் பிரயாசைப்பட்டான். கோடிக் கரைக் கலங்கரை விளக்கின் அருகில் வந்து அவன் கரையை நெருங்கியபோது ஒரு பெண் அக்கொந்தளித்த கடலில் மிதப்பதைக் கண்டான். அவள் பேரில் இரக்கம் கொண்டு படகில் ஏற்றிப் போட்டுக் கொண்டான். அவள் அப்பொழுது உணர்வற்ற நிலையில் இருந்தாள். உயிர்

இருக்கிறதா, இல்லையா என்றுகூடக் கண்டுபிடிக்க இயலவில்லை. அங்கேயே படகைக் கரையேற்றப் பார்த்தும் முடியவில்லை. காற்று அடித்த திசையில் படகைச் செலுத்திக் கொண்டு போய்க் கடைசியில் திருமறைக்காடு என்னும் ஊர் அருகில் கரையை அடைந்தான். உணர்வற்ற அந்தப் பெண்ணைக் கரையில் தூக்கிக் கொண்டு வந்து போட்டுக் கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்தபோது குதிரைகள் மேல் ஏறிச் சில பெரிய மனிதர்கள் அப்பக்கம் வந்தார்கள். அவர்கள் உதவி செய்து அப்பெண்ணுக்கு உயிர் வருவித்தனர். ஆனால் அவள் பேசவும் இல்லை; மற்றவர்கள் பேசுவது அவள் காதில் விழுந்ததாகவும் தெரியவில்லை. ''இவள் பிறவி ஊமைச் செவிடு'' என்று அவர்களில் ஒருவர் கூறினார். அவர்களின் தலைவராகத் தோன்றியவர் கருத்திருமனைத் தனியே அழைத்து ஒரு விந்தையான செய்தியைக் கூறினார். புயல் அடங்கியதும் அந்தப் பெண்ணை ஈழநாட்டுக்கு அழைத்துச் சென்று அந்த நாட்டிலோ அல்லது அருகில் உள்ள தீவு ஒன்றிலோ விட்டு விட்டு வந்துவிட வேண்டும் என்றும், அதற்காகப் பெரும் பணம் தருவதாகவும் அவர் சொன்னார். அதன்படியே கருத்திருமன் ஒப்புக்கொண்டு பணமும் பெற்றுக் கொண்டான். கடலில் கொந்தளிப்பு அடங்கியதும் அவளைப் படகில் ஏற்றி அழைத்துச் சென்றான். கடல் நடுவில் கட்டை ஒன்றைப் பிடித்துக் கொண்டு ஒருவன் மிதப்பதைக் கண்டான். மிகவும் களைத்துப்போயிருந்த அவனையும் படகில் ஏற்றிக்கொண்டான். முதலில் அந்தப் பெண் புதிய மனிதனைக் கண்டு மிரண்டாள். பிறகு, அவனைக் கவனியாமல் இருந்தாள். இருவரையும் அழைத்துக் கொண்டு போய் அவன் ஈழ நாட்டுக்கு அருகில் உள்ள ஒரு தீவில் இறக்கி விட்டான்.

அந்தத் தீவில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் இந்தப் பெண்ணைத் தமது மகள் என்று கூறினார். முன்னமே அவள் ஊமை என்றும், இப்போது தம்மைக் கூட அவள் அறிந்து கொள்ளவில்லையென்றும் கூறினார். பிறகு, அவளைக்



கடலிலிருந்து காப்பாற்றியதைக் கருத்திருமன் சொன்னான்.

நடுக் கடலில் படகில் ஏறிய மனிதர் கருத்திருமனிடம் ஓர் ஓலை கொடுத்து அதை இலங்கை அரசனிடம் கொண்டு போய்க் கொடுக்கும்படி அனுப்பினார். அதிலிருந்து அவர் ரொம்பப் பெரிய மனிதரா யிருக்க வேண்டுமென்று கருத்திருமன் தீர்மானித்துக் கொண்டான். இலங்கை மன்னனிடம் ஓலையைக் கொடுத்த பிறகு அவனுடைய பேச்சிலிருந்து தன்னால் காப்பாற்றப்பட்டவர் பாண்டிய நாட்டு அரசர் என்பதைத் தெரிந்து கொண்டான். பாண்டிய மன்னரை அழைத்து வருவதற்கு இலங்கை அரசர் பரிவாரங்களை அனுப்பினார். கருத்திருமன் மிகவும் களைத்திருந்தபடியால் அவர்களுடன் போகவில்லை. பாண்டிய அரசர் சில தினங்களுக்குப் பிறகு இலங்கை அரசரின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். இரு மன்னர்களும் சேர்ந்து இலங்கையின் தென் கோடியில் மலைகள் சூழ்ந்திருந்த ரோஹண நாட்டுக்குச் சென்றார்கள். அங்கே சில தினங்கள் தங்கி யிருந்தார்கள். கருத்திருமன் பேரில் பிரியம் கொண்ட பாண்டிய மன்னர் அவனையும் தம்முடன் அழைத்துப் போனார். ரோஹண நாட்டில் பல இடங்களையும் இலங்கை அரசர் பாண்டிய மன்னருக்குக் காட்டினார். கடைசியாக, யாரும் எளிதில் நெருங்க முடியாத ஒரு பள்ளத்தாக்கிற்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு மலைக் குகையில் அளவில்லாத பொற்காசுகள், நவரத்தினங்கள், விலைமதிப்பில்லாத ஆபரணங்கள் முதலியவை வைக்கப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் பார்வையிட்ட பிறகு, இலங்கை அரசர் ஒரு தங்கப் பெட்டியை எடுத்துத் திறந்து காட்டினார். அதற்குள்ளே ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்த மணி மகுடம் ஒன்றும் இரத்தின ஹாரம் ஒன்றும் இருந்தன. அரசர்களுடைய சம்பாஷணையிலிருந்து அந்தக் கிரீடம் பாண்டிய வம்சத்து அரசர்களின் புராதனமான கிரீடம் என்றும், அந்த இரத்தின ஹாரம் பாண்டிய குல முதல்வனுக்குத் தேவேந்திரன் வழங்கியதாகச் சொல்லப்பட்ட ஹாரம் என்றும் தெரிந்துகொண்டான். அவற்றை எடுத்துக் கொண்டு போகும்படி இலங்கை அரசர் பாண்டியனை வற்புறுத்தினார். பாண்டிய மன்னர் மறுத்து விட்டார். சோழர்களை அடியோடு முறியடித்துவிட்டு மதுரையில் தாம் முடிசூட்டிக் கொள்ளும் நாள் வரும்போது, இலங்கையின் அரசரே அவற்றை எடுத்துக் கொண்டு மதுரைக்கு வந்து உலகம் அறியத் தம்மிடம் அளிக்க வேண்டும் என்று கூறினார்.

பிறகு பாண்டிய அரசர் கருத்திருமனிடம் அவன் எடுத்துப் போகக் கூடிய அளவு பொற்காசுகளைக் கொடுத்து அந்த ஊமைப் பெண்ணைப் பத்திரமாகப் பராமரிக்க ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பப் பாண்டிய நாட்டில் வந்து தம்முடன் சேர்ந்து கொள்ளும்படி அனுப்பி வைத்தார்.

கருத்திருமன் பூதத் தீவுக்குச் சென்ற போது அங்கே அந்தப் பெண்ணைக் காணவில்லை. அவளுடைய தகப்பனையும் காணவில்லை. இருவரையும் தேடிக் கொண்டு கோடிக்கரைக்குப் போனான். அங்கே அந்த ஊமைப் பெண்ணைக் கண்டான். ஆனால் அவள் அவனைத் தெரிந்து கொள்ளவில்லை. அவளுடைய வீட்டாரிடமிருந்து சில விவரங்களைத் தெரிந்து கொண்டான். அவளுடைய தகப்பனார் உடல் நலிவுற்றபடியால் அவளை அழைத்துக் கொண்டு வந்து இங்கே விட்டு விட்டு உயிர் நீத்தார். கலங்கரை விளக்கின் காவலன் அவளுடைய சகோதரர் என்று தெரிந்தது. முதலில் அவளுக்குச் சகோதரன் — சகோதரி யாரையும் நினைவிருக்கவில்லை. மறுபடியும் ஒரு தடவை கால் தவறிக் கடலில் விழுந்து காப்பாற்றப்பட்ட பிறகு அவர்களையெல்லாம் அவளுக்கு நினைவு வந்தது. அவள் கர்ப்பவதியா யிருக்கிறாள் என்பதை மற்றவர்கள் தெரிந்துகொண்டார்கள். அதை அவளும் உணர்ந்து பெரும் பீதியில் ஆழ்ந்தாள். கோடிக்கரைக் குழகர் கோவிலுக்கு அடிக்கடி சென்று அங்கே கைங்கரியம் செய்து கொண்டிருந்தாள். கருத்திருமன் எவ்வளவுதான் முயன்றும் அவனை அவள் இப்போது கண்டுகொள்ளவில்லை.

கோடிக்கரையில் இருந்தபோது அந்த ஊமைப் பெண்ணின் தங்கையை அவன் சந்தித்தான். அவளும் ஊமை என்று அறிந்து அவள் பேரில் பரிதாபம்கொண்டான். அவளை மணந்து கொண்டு வாழவும் எண்ணினான். அதற்கு முன்னால் பாண்டிய மன்னரிடம் போய்த் தகவல் தெரிவித்துவிட்டு வர விரும்பினான்.

இச்சமயத்தில் சோழச் சக்கரவர்த்தி கண்டராதித்தரின் பட்டத்து அரசியும் சிவபக்தியில் சிறந்தவருமான செம்பியன் மாதேவி கோடிக்கரைக் குழகர் கோவிலுக்குச் சுவாமி தரிசனத்துக்கு வந்தார். அங்கே அந்த ஊமைப்பெண் மந்தாகினியைக் கண்டு அவளைத் தம்முடன் அழைத்துச் சென்றார். அவளுடன் அவள் தங்கை வாணியும் போய் விட்டாள்.

ரேடியோவின் சிறந்த கட்டங்களுக்கு



எஸ்ட்ரெலாவின் சிறந்த ரேடியோ பேட்டரிகள்

காகித, பிளாஸ்டிக், உலோகக் கவச உறைகளிட்ட பேட்டரி வகைகள் உள்ளன, நீங்கள் தேர்ந்தெடுக்க. கசியாத் தன்மை உடையவை அவை. நெடுங்கால உழைப்பிலும் இடையறாத சக்தியை வழங்குபவை. உங்கள் டிரான்ஸிஸ்டர் ரேடியோவின் மூலம் உங்கள் செவியின்பத்தைப் பெருக்கத் தகுசிறந்த பேட்டரிகள் — எஸ்ட்ரெலா.



இலவசம்!

திரைப்படங்கள், இசை, விளையாட்டு, பொழுதுபோக்கு ஆகியவற்றை அடங்கிய மாதாந்திர செய்திப் பத்திரிகை "பிலிம் ஸவுண்ட்" கிடைப்பதற்கு, சேருவீர் இதில்:

பார்ச்சுன் ரேடியோ லிஸனர்ஸ் கிளப்.

ஆதரவாளர்கள்: எஸ்ட்ரெலா பேட்டரீஸ் லிமிடெட்.

எழுதுக: P.B. No. 139, பம்பாய்.

எஸ்ட்ரெலா
பேட்டரிகள்

அதிக சக்தி
அதிக உபயோகம்

எஸ்ட்ரெலா பேட்டரீஸ்
லிமிடெட்,
பம்பாய்-19.

FOCUS W-30-K TM

கருத்திருமன் பாண்டிய நாடு சென்றான். அங்கே பாண்டிய மன்னர் போர்க்களம் சென்றிருப்பதாக அறிந்தான். போர்க்களத்தில் சென்று பாண்டிய மன்னரைச் சந்தித்தபோது, அவர் அவனை இலங்கைக்கு மீண்டும் போய் இலங்கை அரசனிடம் ஓலை கொடுத்துவிட்டு வரும்படி கூறினார். திரும்பிவரும்போது மறுபடியும் அந்த ஊமைப் பெண்ணை அழைத்து வருவதற்கு ஒரு முயற்சி செய்யும்படியும் தெரிவித்தார்.

கருத்திருமன் இலங்கையிலிருந்து திரும்பிப் பழையாறைக்குச் சென்றான். வாணியின் நினைவு அவன் மனத்தை விட்டு அகலவில்லை. முக்கியமாக அவளைச் சந்திக்கும் ஆசையினால் அவன் பழையாறைக்குப் போனான். ஆனால் அங்கு அவளைக் கண்டபோது அவன் திடுக்கிட்டுத் திகைத்துப் பிரமித்துப் பயங்கரமடையும்படி நேர்ந்தது. அருணோதய நேரத்தில் அவன் அரசலாற்றங்கரை வழியாகப் பழையாறையை நெருங்கிக் கொண்டிருந்தபோது, ஆற்றங்கரை ஓரத்தில் பெண் ஒருத்தி குனிந்து குழி தோண்டிக் கொண்டிருப்பதைக் கண்டான். அதுகூட அவனுக்கு அவ்வளவு வியப்பளிக்கவில்லை. அவளுக்குப் பக்கத்தில் துணி மூட்டை ஒன்று கிடந்தது. அதற்குள்ளேயிருந்து ஒரு மிக மெல்லிய குரல் — சின்னஞ் சிறு குழந்தையின் அழுகைக் குரல் கேட்டது!

எந்தச் சண்டாளப் பாதகி உயிரோடு குழந்தையைப் புதைப்பதற்கு ஏற்பாடு செய்கிறாள் என்ற ஆத்திர அருவருப்புடன் அவன் அருகில் நெருங்கியபோது, குழி தோண்டிய பெண் நிமிர்ந்தாள். அவள்தான் வாணி என்று கருத்திருமன் அறிந்து கொண்டான்.

"தம்பி! எனக்கு அப்போது எப்படி இருந்திருக்கும்? நீயே ஊகித்துக் கொள்!" என்றான் கரியதிருமால்.

"அதை ஊகித்துக் கொள்கிறேன். அப்புறம் கதையைச் சொல்!" என்றான் வந்தியத்தேவன்.

"அப்புறம் நடந்ததைச் சொல்ல இயலாது. அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் காதிலேதான் சொல்லலாம்! நான் மட்டும் அப்போது பழையாறைக்குப் போயிராவிட்டால் எனக்குப் பின்னால் நேர்ந்த கஷ்டங்கள் ஒன்றும் நேராமற் போயிருக்கும்!" என்றான் கருத்திருமன்.

"அப்படியானால் கிளம்பு! நேரே அரச குலத்தைச் சேர்ந்தவர்களிடம் போய்ச் சொல்லலாம்!" என்று கூறி நகைத்துக் கொண்டே வந்தியத்தேவன் அங்கிருந்து எழுந்தான்.

கருத்திருமனையும் அழைத்துக் கொண்டு பொக்கிஷ நிலவறையை அணுகினான். அங்கே அப்போது யாரும் இல்லை. நிலவறைக் கதவு பெரிய பூட்டினால் பூட்டப்பட்டிருந்தது. ஆனால் தெரியாதவர்கள் கண்டுபிடிக்க முடியாதபடி அமைக்கப்பட்டிருந்த அதன் உட்கதவை வந்தியத்தேவன் அழுத்தியதும் திறந்து கொண்டது. இருவரும் உள்ளே புகுந்து உட்புறம் தாளிட்டுக் கொண்டார்கள்.

வழியில் பொன்னும், மணியும், முத்தும், நவரத்தினங்களும் குவித்து வைத்திருந்த இடத்தில் வந்தியத்தேவன் பிரவேசித்தான். கருத்திருமனிடம் "உன்னுடைய ரோஹண நாட்டு மலைக் குகையில் இவ்வளவு செல்வங்கள் உண்டா?" என்று கேட்டான். "இதைவிட நூறு மடங்கு உண்டு!" என்று சொன்னான் கரியதிருமால்.

வந்தியத்தேவன் சில தங்கக் காசுகளை எடுத்து மடியில் வைத்துக் கட்டிக் கொண்டதும் மறுபடியும் கிளம்பினார்கள். நிலவறைப் பாதை வழியாக வந்தியத்தேவன் முன்னால் சென்றான். மதில் சுவரில் அமைந்திருந்த இரகசியக் கதவையும் திறந்தான். அங்கே இப்போது காவலன் யாரும் இருக்கவில்லை. வெளியிலே முதலில் தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தான். வடவாற்றில் வெள்ளம் இரு கரையும் தொட்டுக்கொண்டு சென்றது. வெகு தூரத்தில் தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அந்த இடத்தில் அருகில் யாரும் இல்லை என்று தெரிந்து கொண்ட பிறகு வந்தியத் தேவன் வெளியே வந்தான். கருத்திருமனும் வந்த பிறகு கதவைச் சாத்தினான். வடவாற்றை எப்படிக் கடப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது பக்கத்தில் சாய்ந்திருந்த மரத்தடியில் படகு ஒன்று மரத்தின் வேர்களில் மாட்டிக்கொண்டு நின்றது தெரிந்தது. (தொடரும்)

இதற்கும் விடுமுறை!

ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி புதுக் காங்கிரஸ் பங்களா தேஷுக்கு ஆதரவாக நடத்திய பொதுக்கூட்டத்தில் இந்திரா காந்தி பேசுவதைக் கேட்பதற்காகப் புது டெல்லியில் அரசு ஊழியர்களுக்கு அரை நாள் விடுமுறை அளிக்கப்பட்டது!



ஸ்டேட்ஸ்மென் கடிதம் 'நாயக்'

இவரிடமிருப்பது பிரஸ்டிஜ் Prestige இவரிடமிருப்பது ப்ரீத் PREETT



இவர் இருப்பது இந்தியாவில்



இவர் இருப்பது வெளிநாட்டில்

இருவரும் உபயோகிப்பது
ஒரே பிரஷர் குக்கர்தான்
இரண்டுமே டிடி. (பிரைவேட்) லிமிடெட் தயாரிப்புதான்
பெயர் மட்டுமே வித்தியாசம்

இந்தியாவில் பிரஸ்டிஜ் என்றும், ஏற்றுமதிக்கு ப்ரீத் என்றும் தயாரிக்கப்படும் இரண்டு குக்கர்களும் எவ்வகையிலும் ஒன்றுதான். எட்டு லட்சத்திற்கும் அதிகமான குடும்பத் தலைவிகள் இவற்றை நாள்தோறும், ஆண்டுக்கணக்கில் பயன்படுத்துகிறார்கள்.

உங்கள் பிரஷர் குக்கர் பிரஸ்டிஜானாலும் சரி, ப்ரீத்தானாலும் சரி அவை பயன்படுத்தப் பத்திரமானது. ஆயுள்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்னரும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர் குக்கர் இது ஒன்றே.

சீக்கிரமாயும் சுலபமாயும் சமைக்க உதவுபவை, ப்ரீத் 'ஸ்டீம்-இட்', ஸ்கில்லெட், சாஸ்பான் பாத்திரங்கள்.

HTA-TTP-3691



டிடி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்

அத்தியாயம் 27

சேகரின் தாக்குதலினால் அதிர்ச்சியடைந்தாள் மோகனா. அப்போதுதான் அவளுக்குத் தான் செய்த தவறு புரிந்திருக்க வேண்டும். சேகர் வைத்த கண்ணியில் தான் சிக்கிக் கொண்டு விட்டோமோ என்ற தவிப்பு உண்டாயிற்று அவளிடம். சேகரிடமிருந்து விடுபடுவதை அவசரமாக விரும்பினாள். ஆனால் சேகருக்கு இது தெரியாதா?

''இன்னும் நீ மனம் விட்டுப் பேச வேண்டியது நிறைய இருக்கிறது. ஆனால் நீ பயணப்படு





வதில் ரொம்பத் துடியாக இருக்கிறாய் என்று நினைக்கிறேன்'' என்ற சேகர் காரின் கதவை அழுத்திக் கொண்டிருந்த தன் கையைத் தளர்த்தினான். மோகனா அதற்காகவே காத்திருந்தவளைப் போல் சட்டென்று வெளிப்பட்டு ரகுநாத்தின் பங்களாவுக்குள் நுழைந்தாள். அந்த வீட்டினுள் போக, பக்கவாட்டிலும் ஒரு நுழைவாயில் இருப்பதைச் சேகர் அப்போதுதான் பார்த்தான். உள்ளே நுழைந்தவள் பரபரப்புடன் மாடிப் படிகளில் ஏறி மறைந்தாள். குதிகால் உயர்ந்த அவளது காலணிகள் எழுப்பிய ஒலியைக் கேட்டபடி தான் இருந்த இடத்திலேயே சில நிமிஷங்கள் அசைவற்று நின்று கொண்டிருந்த சேகர், அவ்வொலி தேய்ந்து அந்த வீடு மறுபடியும் மௌனத்தில் மூழ்க ஆரம்பித்ததும் மெள்ளக் கூடத்தில் விட்டு வந்தவர்களை நாடிச் சென்றான். கோபாலின் குத்தும் விழிகளின் கண்காணிப்பில் டாக்டர் ரகுநாத் கூனிக் குறுகிப் போய் உட்கார்ந்திருந்தார். மஞ்சுளாவின் விழிகள் சேகரின் வரவையே எதிர்நோக்கியிருந்தன. காதலன் உள்ளே வந்ததும் அவளது வாய், தானாகவே ''சேகர்...!'' என்று ஆதுரத்தோடு அழைத்தது.

''உன் மனநிலையை நான் அறிவேன் மஞ்சு. உன்னை இனிமேல் இங்கு அதிக நேரம் காக்க வைக்க மாட்டேன். நான் இப்போது என்ன சொல்லப் போகிறேன் என்பதை ஒருவாறு நீ ஊகித்துக் கொண்டிருப்பாய்'' என்றான் சேகர், விட்டுப்போன தொடர்பைத் தொட்டவனாக.

''சேகர், அதன் பிறகு நடந்ததைச் சொல்லு'' என்றாள் மஞ்சுளா.

''மஞ்சுளா, உனக்கு ஒரு போர் வீரனுக்கு இருக்க வேண்டிய மனோ திடம் இருக்கிறது. இங்கு நான் வந்ததிலிருந்து நிகழ்ந்த பல சம்பவங்களை, சம்பாஷணைகளை மறுபடியும்

நிலைவுபடுத்த வேண்டி யிருக்கிறது. ஏனென்றால் அவைஒவ்வொன்றிலும் பல உண்மைகள் மர்மங்கள் புதைந்து கிடக்கின்றன. சமையலறை எஜமானியான காவேரி சொன்னாள்: 'இத்தனை வருஷங்களில் இந்த இடத்தின் (சமையல் கட்டில்) ஆட்சி ஒரே ஒரு தடவை தான் என்னிடமிருந்து கைமாறியது. அது, புயலடித்ததே அந்த இரவுக்கு மறுநாள்தான். பண்ணையில் புயல் விளைவித்த சேதங்களைச் சரிப்படுத்துபவர்களுக்கு உதவியாக, என்னையும் அனுப்பிவிட்டு அன்றையச் சமையலறை வேலை முழுவதையும் தாம் ஒருவராகவே கவனித்தார்கள் எஜமானியம்மா (கோகிலா).'

''கோகிலாவின் இந்தச் செய்கை விசுவாசமுள்ள காவேரியம்மாளின் உள்ளத்தில் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கலாம். ஆனால் இதன் உள்நோக்கு காவேரியை அந்த இடத்திலிருந்து வெளியேற்றுவதற்குக் கையாளப்பட்டதொரு சூழ்ச்சி. புயலுக்கு மறுநாள் முழுவதும் கோகிலா சமையலறை





மார்புக்கு வடிவுதந்த அதே வாட்ரீன் கால்களுக்கும் கவர்ச்சியளிக்கின்றது.

மார்பழகு தரும் வாட்ரீனுக்கு இணையாக காலழகு தரும் வாட்-ரீன்! எங்கள் வாட்ரீன் 'டெரின்'/காட்டன் ஸூட்டிங் வகைகளிலிருந்து இன்றே வேண்டியதைத் தேர்ந்தெடுங்கள்.

வாழ்க்கையெனும் பாதையில் நிமிர்ந்த நடை போடுங்கள்.



WADRENE

பாம்பே டையிங்

யைத் தன் ஆட்சிக்குள் வைத்திருந்ததற்குக் காரணம் — சமையல்கட்டை அடுத்துள்ள அறைகளுக்குள் எவரும் போய்விடாமல் இருக்க, அதற்குக் காவலாக இருப்பதற்குத்தான்.'' இதைச் சொல்லிவிட்டு மௌனமானான் சேகர்.

மஞ்சுளா அவனை ஓய்வெடுத்துக்கொள்ள விடவில்லை. ''சமையலறையை அடுத்துள்ள அறைகளில் பெரிய பெரிய குளிர் பதனப் பெட்டிகள்தானே இருக்கின்றன. அதைக் காவல் காப்பானேன்?'' என்றாள். புரிந்தும் புரியாமலிருக்கும் ஒரு விஷயத்தை, விளக்கமாகத் தன் காதலனிடமிருந்தே அறிந்துகொண்டு விட வேண்டும் என்ற முடிவோடுதான் இதைக் கேட்டாள் மஞ்சுளா.

அவள் உள்ளத்தைப் புரிந்து கொண்டான் சேகர். தன் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டான். மௌனமாக எழுந்தவன் தன் நண்பன் கோபாலின் அருகில் போய் அவனிடமிருக்கும் பொட்டலத்தை வாங்கி அதை நடுவில் உள்ள வட்டமேஜை மீது வைத்து அதைச் சுற்றியிருந்த எண்ணெய்க் காகிதத்தைப் பிரித்தான். பிறகு டாக்டர் ரகுநாத்தை உற்றுப் பார்த்தான். டாக்டரோ மேஜை மீதிருந்த விறைத்துப் போன கோழியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''இதனோடு கட்டப்பட்டிருக்கும் குறிப்புக் காகிதத்தில் எழுதியுள்ள தேதியின்படி இந்தக் கோழியைக் கொன்று நான்கு மாதங்களாகின்றன. ஆனால் இதன் தன்மையோ இன்றுதான் இது உயிரிழந்ததைப் போலிருக்கிறது!''

சேகரின் துளைத்தெடுக்கும் பார்வையையும் வாள் கொண்டு இதயத்தைத் துண்டாக்குவது போன்ற வார்த்தைகளையும் தாங்க முடியாமல் டாக்டர் ரகுநாத் தம் இருக்கைக்குள் கூனிக் குறுகிக் குமைந்து போனார். யாரையுமே பார்க்கும் தெம்பிழந்த அவரது கண்கள் தரையை நோக்கின.

உண்மையை மூடியிருந்த தூசுகளை மெள்ள மெள்ள ஊதி விலக்கியும் கூட உள்ளே இருப்பதை ஊகிக்க முடியவில்லை கோபாலுக்கு. அத்தனை சூட்சம புத்தி அவனுக்கில்லை. ''சேகர், இந்தக் கோழியைக் காட்டி எந்த உண்மையை எங்களுக்கு நீ புரிய வைக்கிறாய்? எனக்கு விளங்கவில்லையே?'' என்றான் அவன்.

சேகர் இளநகையோடு கூறினான். ''கோபால், நமக்குப் பண்ணையின் பல பகுதிகளையும் மஞ்சுளா காட்டிக் கொண்டு வரும்போது சமையலறையில் இருக்கும் பெரிய குளிர்பதனப் பெட்டியை — பிரத்தியேகமாகப் பிரிட்டிஷார் உருவாக்கித் தந்த பிரிஜ்ஜைப் பற்றி நமக்கு என்ன கூறினாள், நினைவிருக்கிறதா? 'இந்தக் குளிர்சாதனப் பெட்டி ஒரே சமயத்தில் நானூறு பவுண்டு உணவுப் பொருளைக் கெடாமல் பாதுகாக்கும் சக்தி வாய்ந்தது' என்று கூறினாளல்லவா? டாக்டர் சகவரன் மஞ்சுளாவின் வற்புறுத்தலின் பேரில் கந்தசாமியின் சடலத்தைச் சோதனை செய்துவிட்டு வந்து என்ன கூறினார்? 'அப்போதைக்கு இப்போது அவரிடம் அப்படியொன்றும் பிரமாதமான வித்தியாசத்தைக் காண முடியவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால் அது மிக மிகச் சொற்பமாகத்தான் இருக்கும்...' என்று கூறினாரில்லையா? அவர் கண்காணிப்பில் கந்தசாமி இருந்தபோது அவரது கழுத்தின் இடப்பக்கத்தில் ஒரு கட்டியைக் கீறி மருந்திட்டிருந்தார். அதாவது அந்த ஆபரேஷனை அவர் செய்தது புயல் வீசிய அன்று பகலில். அதுதான் டாக்டர் சகவரன் கந்தசாமிக்குச் செய்த கடைசி சிகிச்சை. அவரைப் பார்த்ததும் அதுதான் கடைசி. அதன் பிறகு மூன்று வாரங்களுக்குப் பிறகு அவரது சடலத்தைத்தான் அவர் பார்த்திருக்கிறார். அப்போது அவர் சொன்னார், 'நான் கீறி மருந்திட்ட புண் ஆறவே இல்லை, அப்படியே இருந்தது' என்று. அப்போதே எனக்குப் பளிச்சிட்டது. டாக்டர் எதையோ சொல்ல நினைத்து எதற்காகவோ தயங்கி அதைத் தவிர்த்து விட்டார் என்று. உண்மையில் நடந்தது இதுதான். டாக்டர் சகவரன் செய்த அந்தச் சிறு ஆபரேஷனுக்குப் பிறகு சில மணி நேரங்களே கந்தசாமி உயிரோடிருந்திருக்கிறார். உயிரற்ற மனிதனின் உடலில் உள்ள வெட்டுக் காயம் அந்த உடல் பிரிஜ்ஜில் இருக்கும்போது ஆறாமல் அப்படியே இருப்பதில் வியப்பொன்றுமில்லை. அவர் இறக்கும்போது எந்த நிலையில் அவர் உடல் இருந்ததோ அப்படியே அதை வைத்திருக்க மிகச் சக்தி வாய்ந்த குளிர்பதனப் பெட்டி பயன்பட்டது. இருபத்திரண்டு நாட்களுக்குப் பிறகு தங்களுக்கு ஏற்ற சாதகமான சூழலை உருவாக்கிய பின் அந்த உடலை மறுபடியும் வெளியே கொண்டு வந்து அப்போதுதான் அவர் இறந்ததாக அறிவித்தார்கள் சதிகாரர்கள்.''

மஞ்சுளாவிடமிருந்து முதன் முறையாக நெஞ்சைப் பிளக்கும் விம்மலும் அழுகையும் வெளிப்பட்டன. ''ஐயோ... அப்பா... உங்களுக்கா இந்தக் கதி?... உங்கள் உடலை இந்தப் பாடு படுத்திய அந்தப் பாவிகள் எத்தனை கல் நெஞ்சர்களாக இருக்கவேண்டும்?'' புலம்பினாள் மஞ்சுளா. கோபால் திக்பிரமை பிடித்தவனாக உட்கார்ந்திருந்தான். சேகர் மேஜைமீது அசிங்கமாகக் கிடந்த விறைத்த கோழியை அதே காகிதத்தினால் சுற்றி அதை அருகே இருந்த குப்பைக் கூடைக்குள் வீசினான்.

''கந்தசாமியின் உயிரற்ற உடலை அன்றிரவு சமையலறையின் குளிர்பதனப் பெட்டியில் வைத்தார்கள். கோகிலா மறுநாள் முழுதும் அதற்குக் காவல் இருந்தாள், யாரையும் அங்கு அனுமதிக்காமல். பிரதான பங்களாவின் சமையலறைக் குளிர் பதனப் பெட்டிக்குள் இருபத்திநான்கு மணி நேரம் அந்த உடல் இருந்தது. அதன் பிறகு மறுநாள் இரவு அவ்வுடலைத் திராட்சைக் கொடி வீட்டிலிருக்கும் பிரிஜ்ஜுக்கு மாற்றினார்கள். அங்கு அந்த பிரிஜ் சாதனத்தின் உறைநிலைத் தகுதி எவ்வளவோ அதற்கு அதை இயங்க வைத்து அதனுள் கந்தசாமியின் உடலைக் கால வரையறையின்றி வைத்துக் காக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அதாவது தருமலிங்கம் இறக்கும்வரை! புதிய டாக்டர், புதிய நர்ஸ்களுடைய கண்காணிப்புத் தமக்குத் தேவையில்லை என்று பெரியவர் தர்மலிங்கம் — கண்டிப்பாக மறுத்துவிட்ட


தால் இயற்கையாக அவர் இறக்கும்வரை சதிகாரர்கள் காத்திருப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்றாகி விட்டது. தர்மலிங்கம் இறந்த பின் பண்ணையில் சில பரபரப்புகள் ஏற்பட்டன. மஞ்சுளாவின் வரவு, நிர்மலாவின் மறைவு, பாலுவின் மரணம். திராட்சைக் கொடி வீட்டில் பிறர் கவனம் பதியும்படியான சூழல் உருவாகவே இனியும் காத்திருக்கக் கூடாது என்று முடிவெடுத்தார்கள் சதிகாரர்கள். தாமதம், கந்தசாமியின் உண்மை நிலையை உலகுக்குக் காட்டிக் கொடுக்கும்படியாகி விடும் என்று பயந்து தருமலிங்கத்தின் மரண அறிவிப்புக்கு இருபத்தி நாலு மணி நேரத்துக்குள் அவசரம் அவசரமாகக் கந்தசாமியின் மரணச் செய்தியையும் வெளியிட்டார்கள். அதைச் செய்யுமுன் கந்தசாமியின் உடல் குளிர்பதனப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்டுத் திராட்சைக்கொடி வீட்டில் உள்ள ஒரு படுக்கையில் இருபத்தி நாலு மணி நேரம் கிடத்தப்பட்டிருந்தது; உறை நிலையிலிருந்து அவ்வுடல் சாதாரண இளக்க நிலைக்கு வருவதற்காக. அப்போது அவ்வுடலிலிருந்து வெளிப்பட்ட நீர்த் துளிகள் படுக்கையில் படிந்தன. அதைத்தான் நாம் அங்கு போனபோது பார்த்தோம், நினைவிருக்கிறதா கோபால்? அங்கிருந்து அந்த உடல் பிரதான வீட்டில் — கந்தசாமியின் படுக்கை அறைக்குக் கொண்டு வரப்பட்டுப் போலியான அந்த அறிவிப்பு — மஞ்சுளாவின் தகப்பனார் அன்றிரவுதான் இறந்தார் என்ற அந்தச் செய்தி வெளியிடப்பட்டது.''

இத்தனை நேரமும் தாங்க முடியாத அவஸ்தையுடனும் ஆத்திரத்துடனும் உட்கார்ந்திருந்த டாக்டர் ரகுநாத் வெறி கொண்டவரைப் போலத் துள்ளி எழுந்து ''இத்தனை நேரம் நீங்கள் கூறிய குற்றச்சாட்டுகள் எதுவும் என்னைப் பாதிக்காது. இதில் எந்த ஒரு காரியத்துடனும் எனக்குத் தொடர்பு கிடையாது'' என்று கத்தினார்.

சேகரின் விளக்கத்தில் கோபால் தன்னை மறந்திருந்ததினால் டாக்டரைக் கண்காணிக்கத் தவறிவிட்டான். இப்போது அவர் தம் இருக்கையிலிருந்து எழுந்திருந்து கத்தியதும் கோபால் ''உட்காரும்'' என்று இடிபோன்ற குரலில் அதட்டி அவர் முகத்தில் தன் உள்ளங்கையைப் பதித்து அழுத்தித் தள்ளினான். அடுத்த விநாடி ரகுநாத் 'பொத்' என்று மூட்டையாகச் சோபாவில் விழுந்தார்.

தன் விளக்கத்துக்கு ஏற்பட்ட தடையினால் சில விநாடிகள் மௌனமான சேகர் மீண்டும் தொடர்ந்தான்.

''உண்மையை மறைப்பதற்கு இன்னும் ஒரு படி முன்னேறி ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் அது தோல்வி கண்டு விட்டது. மஞ்சுளாவையும் என்னையும் மூல்லை வாசலிலிருந்து வெளியேற்றத் திட்டமிட்டார்கள். டாக்டர் ரகுநாத், நீங்கள் நினைத்தீர்கள், நாங்கள் இருந்த மனோநிலையில் ஸ்டேஷனுக்குப் போனதும் வரும் முதல் வண்டியில் ஏறி —அது எங்கே போவதானாலும் சரி — போய்விடுவோம் என்று. ? அந்தச் சமயத்தில் கந்தசாமியின் போலி மரணச் செய்தியை வெளியிடலாம் என்றும் எண்ணியிருந்தீர்கள். அந்தச் செய்தி எங்களை வந்தடைந்து நாங்கள் மறுபடியும் பண்ணைக்கு வர வெகுநாளாகும்; அதற்குள் கந்தசாமியின் உடலைப் பக்குவமாக அடக்கம் செய்து விடலாம் என்பது உங்கள் திட்டம். உங்கள் துரதிருஷ்டம், மஞ்சுளா நாங்கள் ஏறிப் போகவேண்டிய வண்டியை வேண்டுமென்றே அநாதையாகச் செல்ல விட்டாள். தன்னோடு வந்தவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் ஒரு வழக்கோடு பிணைப்பதற்கும், அவளது சுயநலமில்லாத உறுதிபடைத்த உள்ளம் காரணமாக இருந்தது. வஞ்சனை நிறைந்த இரக்கமற்ற இந்த மோசடி அவளால்தான் வெளிப்பட்டது. அவள் இங்கு திரும்பாமலிருந்தால் எதுவுமே வெளியாகி யிருக்காது. நாங்கள் பண்ணைக்குத் திரும்பினோம். சட்டென்று அவள் கவனம் கவரப்பட்டது. அப்படி உன்னிப்பாகப் பார்ப்பதற்கான சந்தர்ப்பமோ அப்படியொரு எண்ணமோ அவளுக்கு அதுவரை ஏற்படவில்லை. இப்போதுள்ள தன் தகப்பனாரின் உயிரற்ற சடலத்துக்கும் அதே படுக்கையில் சில நாட்களுக்கு முன்பு உயிரோடு படுத்திருந்த மனித உடலுக்குமிடையே காணப்பட்ட ஏதோ ஒரு வேற்றுமையை அன்று அவளால் உணர முடிந்தது. அப்படியொரு மாற்றம் இருக்க முடியாது என்றும் முதலில் நம்பினாள்...''



''நான் இங்கு வந்து 25 வருஷங்களாச்சே! வெள்ளித் தட்டிலே கஞ்சி ஊற்றி வெள்ளிவிழாக் கொண்டாடுங்களேன்!''

தன் காதலனின் விஸ்தாரமான விளக்கங்கள் மஞ்சுளாவுக்கு வேதனையாக இருந்தன. உண்மைகள் அவள் உள்ளத்தை ரணமாக்கியிருந்த இந்த வேளையில் எதுவுமே அவளுக்கு ஆயாசமாகத்தான் இருக்கும். விரைவில் ஒரு முடிவுக்கு வருவதையே விரும்பிய அவள், ''அது சரி சேகர், டாக்டர் ரகுநாத் இந்தச் சதித் திட்டங்களில் எப்படி எந்த வகையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்?... அதைச் சொல்லுங்கள்'' என்றாள்.

''உண்மையில் பார்க்கப் போனால் டாக்டர் ரகுநாத்துக்கு இந்தச் சூழ்ச்சியில் மிக மிகக் குறைவான பங்குதான். பொய் சொல்லி, உண்மையில்லாத ஒரு போலியான முயற்சிக்கு ஊக்கம் கொடுத்தார். அதுவே இவர் செய்த காரியம். ஆனாலும் இவர் நடத்தை குற்றமுடையது — குறை கூறுவதற்கானது. உன் தகப்பனாரின் உடலை பிரிஜ்ஜில் வைத்துக் காப்பாற்றினாலும் கூட அதில் விபரீதமான





அனுராக் அமைப்பிலும் ஒலி மீட்டலிலும் ஒரு அற்புதப் படைப்பு. கவர்ச்சியான அமைப்புடைய இந்த மாடல் நிலையான சீரியக்கத்திற்கென துப்புரவான ப்ரின் டெட் சர்க்யூட் மாட்யூல்களைக் கொண்டுள்ளது. மேலும் தெள்ளத் தெளிவான ஒலி நயத்திற்கென பாஸ் மற்றும் ட்ரெபிள் கன்ட்ரோல்கள் உள்ளன. வேண்டிய ஸ்டேஷனை சுலபமாக எடுப்பதற்கென ஃபைன்-டியூனிங் அமைப்பு உள்ளது. உள்ளூர் நிலையங்களை எடுப்பதற்கென உள்ளமைந்த ஏரியல் உள்ளது. முற்றிலும் ட்ராபிகலைஸ் செய்யப் பட்டது.

ரெம்கோ ரேடியோக்கள்

ஒலி நயத்தில் புதுமையைப் புகுத்துபவை.

ரேடியோ அண்ட் எலெக்ட்ரிகல்ஸ்
மேனுஃபேக்சரிங் கோ. லிட்.,
மைசூர் ரோடு, பெங்களூர்.

Sista's RK-8 Tam


க்ரிஸ்டல் புன்னகையின்
இரகசியம் என்ன?
சொத்தையற்ற
பளிச்சிடும் பற்கள்...
துர்நாற்றமில்லாத
மூச்சுக்காற்று!
க்ரிஸ்டல்
டூத் பேஸ்ட்
ஹெக்ஸா க்ளோரோ:பீன் • எஸ் எல் எஸ்
• டிஸிபி அடங்கியது.
KRISTAL
TOOTH PASTE
கொழிக்கும் நுரைவளம், உன்னதமான நறுமணம்.
2 அளவுகளில் கிடைக்கிறது. அலெம்பிக்—ஹோம்ப்ரோ தயாரிப்பு.

ரசாயன மாற்றம் ஏற்படாமல் இருக்கத்தக்க வழிவகைகளை அவர் உடலில் செய்த புண்ணியம் இந்த டாக்டருடையதுதான்.

"அப்படியானால்... இவர்... யாரையும் கொல்லவில்லே என்கிறாயா?"

"இல்லே. இவர் யாரையும் கொல்லவில்லே. உன் சித்தியைப் போலவே இவருக்கும் நடந்த கொலைகளைப் பற்றி — அந்தச் சடலங்கள் வெளிப்படும்வரை — உண்மை தெரியாது. உன் சித்தியைப் போலவே இவரும் தாங்கள் முதலில் திட்டமிட்ட காரியத்துக்கும் இந்தக் கொலைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்று நினைக்கிறார். தன் சகோதரியைப் போலவே, தாங்கள் வகுத்த 'தாய்'த் திட்டம் இத்தனை பயங்கரக் கொலைகளுக்குக் காரணமாகும் என்பது தெரிந்திருக்குமானால் அப்படியொரு திட்டத்துக்கே இவர் உடன்பட்டிருக்கவும் மாட்டார். இதில் இன்னொரு விசித்திரமான உண்மை என்ன தெரியுமா? பானுவைக் கொன்றது காளியப்பன்தான் என்று அவனைக் குற்றவாளியாக்கும் தடயங்களை அவன்மீது திணித்தது போலீஸாரைத் தவறான பாதையில் கொண்டு செல்வதற்காக மட்டும் செய்யப்பட்ட சதியல்ல. இவர்களை ஏமாற்றவும் சமாதானப்படுத்தவுமே கூடக் கொலைகாரன் கையாண்ட வழி அது. ஆனால் அந்தத் திட்டமோ பல கொலைகளுக்கு வழிகோலிவிட்டது. முடிவு — சட்டப்படி கொலைகாரனைப் போலவே அதற்கு உடந்தையாக இருந்த டாக்டரும் குற்றவாளிதான்..." என்று கூறிய சேகர், டாக்டரைப் பார்த்து, "இந்தச் சதியாலோசனைத் திட்டத்தில் பங்கு கொண்டு அதை நிறைவேற்றித் தருவதற்காக முல்லைவாசல் பண்ணையின் சொத்தில் உங்கள் பங்கு எவ்வளவு? பெருந்தொகையாகத்தானிருக்க வேண்டும்... அப்படித்தானே டாக்டர் ரகுநாத்?" என்று கேட்டான்.

அதே சமயம் கோபால், "சேகர்... அந்தச் சத்தம்...? அதைக் கேட்டாயா?" என்றான். சேகரின் தலை சற்றே சாய்ந்து அந்த ஒலியைக் காதினால் ஒற்றிக் கொண்டது.

"நர்ஸ் மோகனாவின் காரை யாரோ கிளப்புகிறார்கள்" என்றான் கோபால்.

"ஆமாம். கார் கிளம்பும் சத்தம்தான்" என்று நண்பனின் ஊகத்துக்கு ஒப்புதல் அளித்த சேகர், "இந்த வீட்டில் நாம் காவல் காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் இந்தப் பிரதான நுழைவாயிலைத் தவிர பக்கவாட்டில் இன்னொரு வாசல் இருக்கிறது கோபால். நம் கவனத்தைக் கவராமல் அவள் அந்த வழியாக வெளியேறி விருக்கிறாள்... இருக்கட்டும். மஞ்சுளா, நீ இங்கேயே இரு. கோபால், கிளம்பு" என்று எழுந்திருந்தான்.

டாக்டர் ரகுநாத் சலனமற்று, எவ்விதப் பரபரப்புமின்றிப் பேசாமல் சேகர் அவசரமாக வெளியேறுவதைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். கோபால் சேகருக்கும் முன்னதாக வெளியே தாவியபோது தன் பின்னால் மஞ்சுளாவும் விரைவதைக் கண்டான். மூவரும் வெளியே வந்தபோது மழை வலுவாகப் பெய்து கொண்டிருந்தது. பங்களாவின் பக்கவாட்டுக் கேட்டுக்கு நேராக



மன்ஹர் சௌஹான் எழுதிய

தியாகம் தேவையில்லை!

செப்டம்பர் 26உ

நிறுத்தப்பட்டிருந்த மோகனாவின் கார்மீது மழை நீர் மோதிச் சிதறிக் கொண்டிருப்பது வீட்டு ஜன்னல் வழியாக வரும் வெளிச்சத்தில் நன்கு தெரிந்தது. வண்டி மெதுவாக நகர ஆரம்பித்தது. காரை இயக்குபவர் ஹெட் லைட்களை ஏற்றவில்லை. ஒரு கோணத்துக்குக் கார் சற்றே நகர்ந்ததும் டிரைவர் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பது மோகனா என்பதையும் அவள் ஸ்டீயரிங் வீல் மீது ஒட்டினாற் போல் அமர்ந்திருப்பதையும் காண முடிந்தது. சட்டென்று வேகம் கண்ட கார் தெருவில் திரும்பிப் பெரும் ஒலியுடன் புயலெனக் கிளம்பிற்று.

அது தெருவுக்கு இறங்கியதுமே மஞ்சுளா தன் காரில் தாவி ஏறினாள். சேகரும் கோபாலுங்கூட அவள் வேகத்துக்கு ஈடு கொடுத்து அதில் போய் அடைந்து கொண்டார்கள். மஞ்சுளாவின் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் ஆத்திரம், வேதனை, வெறுப்பு, துக்கம் அத்தனையும் அவள் கைகள் மூலமாகவும் கால்கள் மூலமாகவும் வெளிப்பட்டு அந்தக் காரை இயக்க ஆரம்பித்தது என்றால் அது எத்தகைய வேகத்துடனிருக்கும் என்பதைச் சொல்ல முடியாது. எழுதவும் சாத்தியமில்லே. அந்தக் காரில் நீங்கள் அமர்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் புரியும்.

சற்றைக்கெல்லாம் இன்னொரு கார் தங்களைத் தொடர்ந்து துரத்தி வருவதை உணர்ந்தார்கள் சேகரும் மஞ்சுளாவும். பார்வையைக் குருடாக்கும் அத்தனை வெளிச்சம் அதன் ஹெட் லைட்களுக்கு. ஒரு நிலையில் பின்தொடர்ந்து வந்த கார் மஞ்சுளாவின் காரை முந்த முயன்று அதன் பக்கவாட்டில் சிறிது நேரம் ஊர்வது போல ஓடி ஒரு திருப்பத்தில் சட்டென்று குறுக்கே புகுந்து அவளைப் பலவந்தமாகப் பிரேக் போட்டு நிறுத்தும்படி செய்தது. மஞ்சுவுக்கு ஆத்திரமான ஆத்திரம். ஆனால் மறித்த ஜீப் காரிலிருந்து இறங்கியவர்களோ இன்ஸ்பெக்டர் ஏகாம்பரமும் சுப்பராயும் துரைசாமியும் என்பதை அறிந்தபோது அவளுக்கு வெறுப்பான வெறுப்பு!

'இந்த வேளையில் இவர்கள் ஏன் வந்தார்கள்?' என்று சலித்துக் கொண்டே சபித்துத் தீர்த்தாள். அப்போது ஒரு மின்னல் பளிச்சென்று வெட்டி ஓய்ந்தது. அந்த ஒளியில் முன்னால் போகும் கார் மிக வேகமாக ஓடி மறைவதும் [illegible] தெரிந்ததால் [illegible]. (தொடரும்)

சந்திப்பு

ராமு : விமலா என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்? சீக்கிரம் வா, Calcutta Mail கிளம்ப இன்னும் சிறிது நேரம்தான் இருக்கிறது!

விமலா : அண்ணா, அதோ பார், அந்த I-Class Compartment அருகில் இரண்டு மாமிகள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

ராமு : அவர்களை என்ன பார்வை, விமலா?

விமலா : அவர்களைப் பார்க்கவில்லை அண்ணா, அவர்கள் கட்டிக் கொண்டிருக்கும் பட்டுப் புடவையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்..

ராமு : ஆமாம் புடவைகள் மிகவும் அழகாகவும் எடுப்பாகவும் இருக்கிறதே! அவர்களுக்கு இந்த கவர்ச்சியான பட்டுப் புடவை எங்கு கிடைத்தது என்று விசாரித்து விட்டு வா.

விமலா : நமஸ்காரம் மாமி! நான் இன்று கல்கத்தா போகிறேன். சென்ற இரண்டு நாட்களாக சென்னையைச் சுற்றிப் பார்த்தேன். இந்தமாதிரி அழகானதும் எடுப்பானதுமான பட்டுப் புடவைகள் எங்கும் கிடைக்கவில்லை. நீங்கள் எங்கே வாங்கினீர்கள் என்று சொல்ல முடியுமா?

மாமி : இதுவா! இது சாஸ்திரீஸ் Special கட்டம். (Shastri's Special Checks) Mylapore சாஸ்திரியார் கடையில் தயாரிக்கிறார்கள். இதுபோல் பல வண்ணங்களில் நிறைய இருக்கிறது.

விமலா : நான் இன்றே கல்கத்தா போவதால், தயவுசெய்து எனக்கு இரண்டு Shastri Special கட்டம் பட்டுப் புடவைகள் வாங்கி என் விலாசத்திற்கு அனுப்புகிறீர்களா?

மாமி : ஏன், உனக்குத் தெரியாதா? அவர்கள் கடையின் கிளை கல்கத்தாவிலும் இருக்கிறது. நீயே அங்கு சென்று உனக்குப் பிடித்த கலரில் Select செய்து கொள்ளலாம்.

விமலா : அப்படியா? ரொம்ப Thanks...... இந்தப் புடவைக்கு என்னவென்று கேட்க வேண்டும்.

மாமி : "Shastri's Special Checks" சாஸ்திரீஸ் ஸ்பெஷல் கட்டம் என்று கேட்க வேண்டும்.

சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்

உயர்தர பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் & வியாபாரிகள்

வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்-4

ஸ்தாபிதம் ; 1902 :: போன் : 71719

கல்கத்தா : 14-A, Park Side Road
Calcutta - 26. Phone : 46 - 3976

ஜெம்ஷெட்பூர் : Madrasi Sammelani
'L' Road, Bistupur.

க்ருஷன்

எந்த வயதிலும் உங்களை 'இளமையோடு' இருக்கச் செய்கிறது



க்ருஷன் ஆறு முக்கிய மானதாது உப்புக் களின் சேர்க்கை. இது :

- மூத்திரப்பைகளைக் கழுவுகிறது
- ஈரலை நன்றாக இயங்கச் செய்கிறது
- இரத்தத்தை சுத்த மாக்க உதவுகிறது
- மலச்சிக்கல் அகல உதவுகிறது
- ஜீரண சக்தியைப் பெருக்குகிறது
- பசியெடுக்க வைக்கிறது
- மூட்டு வலிகளை அகற்றுகிறது

க்ருஷன்

சாப்பிட்டு இளமையுடன் இருங்கள்.

KS.G.18. TM

சில மனிதர்கள் சில நினைவுகள்

பெரியார் ஈ. வெ. ரா. இருபத்தி ஐந்து வயது இளைஞராக இருந்த காலம். ஏதோ வேகத்தில் வீட்டை விட்டுக் கிளம்பிச் சாமியாராக மாறிக் காசியில் போய்த் தங்கினார். அவர் எங்கே போனார் என்று அவர் தகப்பனார் தேடிக் கொண்டே இருந்தார்.

மொட்டை யடித்துக் கொண்டு உருமாறிய ராமசாமிக்குக் காசி, சீக்கிரமே அலுத்து விட்டது. ஊரை நோக்கித் திரும்பினார். வழியில் ஆந்திராவிலுள்ள எல்லூரில் நண்பர் ஒருவர் வீட்டில் தங்கினார். ராமசாமியின் வேண்டுகோளின்படி, அவர் வீட்டுக்கு அந்த நண்பர் தகவல் தரவில்லை.

ஒரு நாள் அந்த நண்பரும், ராமசாமியும் கடைத் தெருப் பக்கம் போயிருந்தார்கள். ராமசாமி தம் பழகிப்போன வியாபார உணர்ச்சியால் கொஞ்சம் எள்ளைக் கையில் எடுத்துப் பார்த்து விலை கேட்டு விட்டு நடந்து விட்டார். ராமசாமியின் தகப்பனார்தான் ஈரோட்டில் பெரிய மண்டி நடத்துபவராயிற்றே !

அந்தக் கடைக்காரர், எள் விலை கேட்டவர் யார் என்று பின்னால் வந்து கொண்டிருந்த நண்பரின் வேலையாளிடமிருந்து தெரிந்து கொண்டார். அவ்வளவுதான்! ராமசாமி எல்லூருக்கு வந்தும் நம் கடையில் கொள்முதல் செய்யவில்லை என்று வருத்தம் தெரிவித்து அவர் தகப்பனாருக்குத் தபால் எழுதி விட்டார்.

எள் விலை கேட்கப் போக, தம் இருப்பிடத்தைத் தகப்பனாருக்குத் தெரியப்படுத்தி விட்டார் ராமசாமி!



மகாராஜபுரம்

செம்பை ஒரு சந்தர்ப்பத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆலங்குடியில் கோகுலாஷ்டமி உத்ஸவக் கச்சேரிக்குப் போயிருந்தார்.

முதல் நாளே செம்பையின் கச்சேரி முடிந்து விட்டது. அன்று மகாராஜபுரம் விசுவநாத அய்யர் கச்சேரி. மறு நாள் காளியாக்குடி வைத்திய நாதய்யர் என்ற வித்வானின் கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்தது. அன்று பிற்பகல் எல்லோரும் விச்ராந்தியாக உட்கார்ந்திருந்த போது பேச்சு அரட்டையாக மாற இருந்ததைக் கவனித்தார் செம்பை. "ஏன் இந்த வெட்டிப் பேச்சு? யாராவது பாடலாமே?" என்றார்.



ஈ. வெ. ரா.

"நேற்று நீங்கள் பாடி விட்டீர்கள். இன்று நான் பாடுகிறேன். இருவருமே இன்றிரவு ஊருக்குக் கிளம்புகிறோம். நாளை நடக்கவிருக்கும் காளியாக்குடியின் கச்சேரியைத்தான் நம்மால் கேட்க முடியாது. அவரையே இப்போ பாடச் சொல்லலாம்! ஆனால் பக்க வாத்தியம்...?" என்று நயங்கினார் மகாராஜபுரம்.

"பக்க வாத்தியத்துக்கா பஞ்சம்?" என்றார் செம்பை.

அப்போதே காளியாக்குடியின் கச்சேரிக்கு ஏற்பாடாகி விட்டது. ஊர்க்காரர்களும் கூடி விட்டார்கள். அருமையாக வயலினில் இசைத்தவர் செம்பை. ஆனந்தமாக மிருதங்கம் வாசித்தவர் மகாராஜபுரம். நேரம் போனதே தெரியவில்லை.

□

ஒரு சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷ் கடற்படை வீரர்களில் சிலர் ஓர் இந்தியப் பெண்மணியை மானபங்கப் படுத்தியதோடல்லாமல் உயிரையும் போக்கிச் சென்னைக் கடற்கரை மணலில் எறிந்து விட்டுப் போய் விட்டார்கள்.

விஷயம் விசாரணைக்கு வந்தது. அந்தப் பிரிட்டிஷ் படை வீரர்கள் குற்றவாளிகள் யார் என்று சொல்லாமல் மழுப்பினர்.

அப்போது வைஸிராய் பதவி வகித்தவர் கர்ஸான் பிரபு. நீதி உணர்ச்சி நிறைந்தவர். குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் அவர் அந்தப் பிரிட்டிஷ் படை உறுப்பினர் அனைவருக்குமே கூட்டுத் தண்டனை விதித்தார். பலர் பதவி இறக்கம் பெற்றனர். இது வேறு பல ஆங்கிலேயர்களுக்குப் பிடிக்கவில்லை. இந்த அதிருப்தியை அவர்கள் தில்லி தர்பாரில் வைஸிராய்க்கு முன், இந்தக் குறிப்பிட்ட படைப் பகுதி அணிவகுத்துச் சென்ற போது, பலத்த கரகோஷம் எழுப்பி அவர்களைப் பாராட்டுவதன் மூலம் தெரிவித்தனர். இவ்விதம் கர்ஸான் பிரபுவை அவமானப்படுத்தி விட்டதாக அவர்கள் எண்ணம்!

— மேரு



செம்பை

சஞ்சலம்

ஆர். சூடாமணி



நிமிர்ந்து பார்த்தேன். சாரு எதிரே நின்றிருந்தாள்.

என் கண்கள் விரிந்தன. நெஞ்சத் துடிப்பு திடீரென்று வேகமுற்றது. கைகள் வேர்த்துச் சில்லிட்டபோதே என் முகம் வெளிறிப் போய்க் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

''சா...சாரு! நீயா! நீயா ....!''

அவள் பேசவில்லை. என் மலைப்பும் அவள் மௌனமுமாக விநாடிகள் கனத்தன. கேலி விட்டது போன்ற அவளது மெல்லிய இதழ்களின் ஓரத்தில் மட்டும் அதே இளநகை; நான் அறிந்த, என்னைக் கொள்ளை கொண்டு பிறகு என் கை வராமல் சென்றுவிட்ட, அந்தப் புன்சிரிப்பு.

''சாரு!'' சாரு!''

எதிரே புன்சிரிப்பு மாறவில்லை.

''நீதான் என்னை ஏமாத்திட்டியே! எனக்கு எந்த அதிர்ஷ்டமுமே இல்லைன்னு தீர்ந்து போச்சே. பின்னே ஏன் வந்தே? மறுபடியும் நீ எப்படி இங்கே வர முடிஞ்சது?''

அவள் உரக்கச் சிரித்தாள் என்று நினைக்கிறேன். நான் அப்போது இருந்த நிலையில் எதுவுமே தெளிவாய் அறிவில் பதியவில்லை. இதயத்தின் படபடப்பு, அவளைக் கண்டதுமே உள்ளத்தில் எழுந்த புயல், அமானுஷ்யமான ஒருவித மயக்கத்தில் சிறிது நேரம் வீழ்ந்து போன போதை. பிறகு வெறும் உணர்ச்சிப் பிழம்பாக அவளை வெறித்தேன்.

அவள் அழகைத் தனித்தனியாய்ச் சம்பிரதாயமாக வர்ணிக்க எனக்குத் தெரியாது. அவள் அழகிதானா என்றுகூட நான் ஆராய்ந்ததில்லை. என் அன்பில் அவள் அழகு உருப்பெற்றது. அவளும் நானும் என்ற இரண்டு இளம் நெஞ்சங்களின் பிணைப்பில் நாங்கள் கட்டுண்டிருந்தபோது மற்ற யாவுமே அதனுள் அடங்கிப் போய் விட்டது. அவள் புன்னகையினுள் நான் என்னை இழந்து மீண்டும் ஒரு காதலனாய், மீண்டும் ஒரு சந்தோஷமானவனாய், பிரமித்துப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அவள் உதடுகள் சாயம் பூசப்பட்டவை என்பது எளிதில் தெரியாது. சரும நிறத்திலேயே லிப்ஸ்டிக். அவளுக்கு எதிலுமே பகட்டுப் பிடிக்காது. கண்ணை அறையும் வர்ணத்திலோ அமைப்பிலோ புடவை உடுக்க மாட்டாள்.

''சாரு!.... சாருதானா? நிஜமாவா என் எதிரில் வந்து நிற்கிறே? எப்படி வந்தே சாரு? நான் சொப்பனம் காண்கிறேனா?''

இதயம் புல்லரித்து உடம்பில் மயிர்க்கால்கள் சிலிர்த்துக் கொண்டதை அடுத்து நெஞ்சில் பாறையாய் இறங்கிய உணர்ச்சியின் கனத்தில் என் கண்களில் ஈரம் நிறைந்தது.

அவள் இப்போதும் பேசவில்லை. சாரும வர்ணப் பூச்சணிந்த மெல் லிதழ்கள் மௌனமாய் என்னிடம் பழைய கதைகள் பேசின.

இது என்ன சோதனை! நான் தலையைக் கைகளில் பற்றிக் கொண்டேன். அவளிடமிருந்து திரும்பி அந்தப் பூங்காவில் வேறு திசையை நோக்கி ஓடினேன்.

* * *

சாரு எனக்குக் கிடைக்கவில்லை. கை நழுவிப் போன சாரு.

''நல்லாத்தான் ஆட்டம் போடறேடா! நீயா உன் இஷ்டத்துக்கு எவளையானும் கட்டிக்கிடறதா?'' என்று அம்மா கோபித்தாள்.

''இப்ப அவன் என்ன பெரிய குற்றம் செய்துட்டான்? ஒரு பெண்ணை விரும்பினால் தப்பா? ரெண்டு பேரும் இஷ்டப்பட்டுக் கல்யாணம் செஞ்சுகிட்டா நாம் பார்த்துச் சந்தோஷமில்லே படணும்?'' என்று அப்பா என் கட்சி பேசினார்.

''கல்யாணம்கிறது ஆயிரங் காலத்துப் பயிர் இல்லையா? அவள் ஜாதியா குலமா குடும்பமா எதுவும் தெரியாது. அப்படி ஒரு அநாதைப் பெண்ணைத்தான் கட்டிக்கணும்னு இவனுக்கு என்ன தலையெழுத்து?'' என்றாள் அம்மா.

நான் சிரித்துக் கொண்டேன். அப்பாவின் பக்கபலம் இருக்கும்போது எனக்குக் கவலையே இல்லை. எப்படியும் அம்மாவை ஒப்ப வைத்து விடுவார். அப்படி அவரால் முடியாவிட்டாலும்தான் என்ன? என் விருப்பத்தை நான் எப்படியும் ஈடேற்றிக் கொள்வேன்.

சாரு! அந்த நினைவின் அர்த்தமே இன்பம்.

எத்தனை முறைகள் அவளைச் சந்தித்தாலும் திருப்தியின்றி நான் ஏதோ சாக்குச் சொல்லிப் பல காலைகள் அவளுடைய ஒரு கொசுறு தரிசனத்துக்காக அவள் வீட்டுக்குச் செல்வது உண்டுதான். அவளுடைய வளர்ப்புத் தாயின் முன்னிலையில் நாங்கள் — என்னதான் அந்த அம்மாளுக்கு எங்கள் விஷயம் தெரியும் என்றாலும் — மரியாதை தவறாமலும் மறைமுகம் மட்டுமாகவும் பேசிக் கொள்ளும் அவஸ்தையில் நான் திண்டாடுவதைச் சாரு குறும்போடு ரசித்து என்னுடைய வயிற்றெரிச்சலைக் கிளப்புவாள்.

சாருவின் தாயார் மிகவும் நல்லியல்பு கொண்ட அம்மை. ''வா, தம்பி!'' என்று அவர் என்னை வரவேற்கும் தோரணையிலேயே கனிவு ததும்பி நிற்கும். அநாதை விடுதியிலிருந்து ஒரு பெண் குழந்தையை அதன் பூர்வோத்திரம் பற்றிக் கவலையே படாமல் எடுத்து வளர்த்து மங்கைப் பருவம் வரையில் அன்புடன் ஆளாக்கி வைத்திருந்த கருணை உள்ளமல்லவா அது!

என் சாரு. இல்லை. அவள் என்னுடையவளாய் ஆகவில்லை. அவள் எனக்குக் கிடைக்கவில்லை.

*   *   *


பித்தன் போல அலைந்து திரிந்த நாட்கள். பார்வையின்றி வெட்ட வெளியே கண்டுருகும் கண்கள். அன்பில் சிதறுண்டு போன நெஞ்சின் அவலத்தை வடித்துக் காட்ட வார்த்தையின்றி நான் வெறும் உடலாய், பாதிக் கதையில் ஒழிந்து போன மரமாய், அர்த்தமின்றிக் கிடந்தேன்.

'' ஆனாலும் இப்படி இடிஞ்சு போய்ட்டா என்னடா செய்யறது? ஒரு பெண்ணுக்காக வாழ்க்கையையே வெறுத்த மாதிரி இப்படியா ஒருத்தன் பைத்தியமாட்டம் மாறிப் போவான் ?'' என்று எத்தனையோ நண்பர்கள் என்னைத் தேற்ற முயன்றார்கள்.

*   *   *

“**நா**ம் ஒண்ணா சேர்வோம்னு நிச்சயந் தானா உங்களுக்கு?'' என்று ஒரு நாள் சாரு கேட்டாள்.

ஏன் அப்படி அவளுக்குத் தோன்ற வேண்டும் ? அவள் என்னை விரும்புவது என்னவோ உண்மை. என் நேயத்தையும் அவள் சந்தேகிக்கவில்லை. என் தாய் தடை செய்கிறளோ



என்ற பயமா? நான் உறுதியற்றவள் என்று எண்ணி விட்டாளா?

''நிச்சயந்தான்'' என்றேன்.

''எப்படியாம் ?''

'' எத்தனையோ யுகத்தில், எத்தனையோ பிறவியில் ஒன்றாக சேர்ந்தவங்கதானே நாம் ?'' என்று சிரித்தேன்.

''பாரதியார் படிச்சிக்கிட்டிருந்தீங்களா?'' என்று அவளும் சிரித்தாள்.

அது வேடிக்கைப் பேச்சாக இருந்தாலும், இப்போதுகூட எனக்கு நான் அவளை முதன் முதலாக எங்கே, எப்படிச் சந்தித்தேன் என்று சொல்லத் தெரியவில்லை. அவளை நான் அறிந்திராத ஒரு காலம் இருந்ததாகவே தோன்றவில்லை.

''புஸ்தகங்களில் வராப்பலே பேசறீங்களே !'' என்று மீண்டும் அவள் புன்னகையின் தெளிவோடு என்னைப் பரிகசித்தாள்.

''புஸ்தகங்களில் வராப்பலே உணர்றப்ப வேறு எப்படிப் பேச முடியும்? சில சமயம் ரொம்ப ரொம்ப சாதாரணமான, பழகிப் போன, புளிக்கப் போன வார்த்தைகள்தான் உண்மையாகவும் இருக்கு. என்ன செய்ய லாம் !''

''அப்படி யுகம் யுகமாய்ப் பரிச்சயமான என்னைப் பார்க்காம இருக்கிற கொஞ்சப் பொழுதுதான் உங்களுக்கு ஒரு யுகமாய்த் தோணுதுன்னு அன்னிக்கு ஒரு நாள் சொன்னீங்க? வேடிக்கைதான் !''

''அதெல்லாம் இருக்கட்டும், சாரு. நாம் ஒன்றா சேருவோமான்னு கேட்டியே, அது ஏன்? நாம் கல்யாணம் செய்துக்கிறதில் இப்ப புதுசா என்ன தடை ஏற்பட்டுடுச்சு?''

அவள் கண்கள் தொலைவில் வெறித்தன. ''நேற்று உங்க அம்மா என் அம்மாவைப் பார்க்க வந்திருந்தாங்க. என்னை உங்களுக்குக் கட்டி வைக்கத் தனக்கு விருப்பமில்லே என் கிறதை ஜாடையா, ஆனா ரொம்பத் தெளிவா, உணர்த்திட்டுப் போனாங்க. அதிலே யிருந்து என் அம்மாவின் மனசு கூடச் சஞ்சலப் படத் தொடங்கியிருக்குது.''

நான் ஆவேசமாய் அவள் கைகளைப் பற்றிக் கொண்டேன். ''உன் மனசில் சஞ்சலம் ஏதும் இல்லையே ?''

அவள் பேசவில்லை.

'' சாரு !''

சருமம் வண்ணப் பூச்சு ஒரு மெல்லிய அசைவில் மின்னியது.

''இந்தப் புன்சிரிப்புக்கு என்ன அர்த்தம் சாரு ?''

'' இந்தக் கேள்வியை நீங்க கேட்க முடியும்னா இதுக்கு நான் பதில் சொன்னாலும் உங்களுக்குப் புரியாது.''

நான் மறுபடியும் கேட்கவில்லை.

அவள் தாயிடம்தான் ஒரு மாறுதல் தெரிய ஆரம்பித்தது. சாருவைப் பார்க்க நான் அதன்பின் அந்த வீட்டுக்குப் போனபோதெல் லாம் அந்தம்மாளின் வரவேற்பு முன்பு போல் இனிமையாக இல்லை. அதைத் தொடர்ந்து சாருவும் ஜுரம் வந்து படுத்துக் கொண்ட போது, ''அவளுக்கு டைபாய்டோன்னு சந்தேகப்படறார். நீ கொஞ்சநாள் அவளைப் பார்க்காமலிருந்தாம் உனக்கேகூட நல்லது தான் தம்பி. இது ஒட்டுவாரொட்டி பாரு''

என்று என்னை இலேசாக விலக்கி வைக்க அதை ஒரு சாக்காகவும் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது அந்த அம்மாளினால்.

சாமர்த்தியம்தான். ஆனால் எங்களை யார் பிரிக்க முடியும்? அந்த அம்மாவின் விருப்பம் இன்றியே நான் தினம் சாருவைப் பார்க்கப் போய்க் கொண்டுதான் இருந்தேன்.

நாங்கள் நிச்சயமாக இணைவோம் என்று உறுதி எனக்கு இருந்தது.

அவளுக்கும் இருந்திருக்கும்தானே அந்தத் தெளிவிட்டதாக இளஞ் சிரிப்பு உணர்த்தியது!

* * *

நாங்கள் இணையவில்லை.

இப்படியும் ஒரு காலம் வரும் என்று நான் நினைத்திருக்கவில்லை.

இந்த நரகம் உண்மையா ? நான் என்னும் நரகம்.

தாழ்வாரத்தில் காகம் ஒன்று கரைந்தது. ''யார் வரப் போறாங்க, நம்ம வீட்டுக்கு ?'' என்று அம்மாவின் குரல் தொடர்ந்து வந்தது.

காகத்தையே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். நரைக்கத் தொடங்கிவிட்ட மொவனைப் போல் அதன் கழுத்துப்புறத்தில் கறுப்பினிடையே சாம்பல் பூத்த வெண்மை.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா....' திடீரென்று அந்தப் பாடல் என் நினைவுக்கு வரவேண்டும்? காகத்தைப் பார்த்ததினாலா? அல்லது பாரதியார் கவிதை என்பதாலா?

'பாரதியார் படிச்சுக்கிட்டிருந்தீங்களா ?'

வெறித்த நிலை மாறி உடல் சிலிர்த்து நினைவுற்றேன். காகம் எப்போதோ பறந்து சென்றிருந்தது? அது இருந்த இடத்தைக் காட்ட அது எச்சமிட்டிருந்த அடையாளம் ஒன்றுதான்.

மனம் சரியாயில்லை. மோவாயைத் தடவிய படி உட்கார்ந்திருந்தேன். காலையில்தான் முகம் மழித்திருந்தாலும் இப்போது மீண்டும் மயிர் முனைகள் கையில் உறுத்தின. இன் னொரு முறை க்ஷவரம் செய்து கொண்டால் என்ன? ஏதாவது உடல் வேலை இருக்கும் வரை மனம் யோசிக்க வேண்டாம். பிடிக்க வில்லை. வெளியில் உலாவி விட்டு வரலாமா?

எழுந்து வாசலுக்கு வந்தேன்.

'' 'வாக்கிங்' காடா ?''

''ஆமாம்மா.''

''ஏண்டா, ஒரு நாளைப் போல... இப் படியா வாடிப் போவான், ஒரு பிள்ளை ? வீட்டில் உட்கார்ந்து கொஞ்சம் இளைப் பாறுடா, ராஜா !''

''சீக்கிரம் வந்துடறேம்மா.''


வீதியில் நடந்தபோது இருட்டத் தொடங்கி விட்டது. அசரீரி வாக்குப் போல் காற்று உருவில்லாமல் என் மேல் வந்து படிந்தது. எதிரிலிருந்து ஒரு கார் எனக்கு வெகு சமீபமாக விர்ரிட்டுப் பாய்ந்து சென் றது. நிறம் நீலமா பச்சையா என்றுகூட அந்த வேகத்தில் புரியவில்லை.

எதிரே நண்பர்கள்தானே ?

''என்னடா, இப்படிப் பேயறைஞ்சாப் பலே ஆயிட்டே ? ஆனாலும் ஒரு பெண்ணுக் காக இப்படி ஏங்கி ஏங்கி உருகக் கூடாது''

அல்போ-ஸாங்

எல்லா வயதினருக்கும் ஏற்ற இலட்சிய டானிக்.



இளைஞர், முதியோர் யாவருக்கும், எல்லாக் காலத்திலும் ஏற்ற டானிக்காகிய அல்போ-ஸாங்கை அருந்தி, உங்கள் உடல்நலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்

ஜே. & ஜே. டிஷேன்

ஹைதராபாத், இந்தியா

திருமணச் செல்வம்

நரசுஸ் காபி



Criterion NC 2601A



பெரிய குடும்பங்களுக்கு இந்தப் பெரிய சைஸ் விக்கோ வஜ்ரதந்தி மிகவும் பொருத்தமானது. உடையாத இதன் பிளாஸ்டிக் பெட்டி காலியானதும் குடும்பச் சாமான்கள் வைக்க மிகவும் உபயோகமுள்ளதாகும். சிக்கன சைஸ் மீடியம் மற்றும் சிறிய சைஸ்கள் இவை அனைத்தும் பிளாஸ்டிக் பெட்டிகளில் கிடைக்கும்.

பிரபல ஆயுர்வேத தயாரிப்பான விக்கோ வஜ்ரதந்தி பல்பொடி பல வருஷ ஆராய்ச்சியின் பயனாக அபூர்வ மூலிகைகளால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதிக நாள் வரக்கூடியது. உறுதியான ஈறுகள், சுத்தமான பிரகாசமான பற்கள் இவற்றுடன் பல் வியாதிகளையும் சொத்தையையும் தடுத்து பாதுகாக்கிறது.

விக்கோ
வஜ்ரதந்தி

பல் சுகாதாரத்திற்கு ஒப்பற்றது.

விக்கோ லாபொரெட்டரீஸ் தாதர் பம்பாய்-14

இலங்கை, மலேயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை

TML

ஸ்டாக்கிஸ்டுகள்: R. L. கௌடர் & கோ., 59, பந்தர் தெரு, சென்னை-1

என்று ஒருவன் என் புறத்தில் நட்டிருஞன். '' கதியாயிருடா ! உலகத்தில் எத்தனையோ பெண்கள்.''

நான் மேலே மேலே மேலே நடந்தேன். இரவின் இருட்டில் எதிப் பறந்து செல்றேன். கூட்டமாய் நெருங்கிய நட்சத்திரங்களைக் கைகளால் விலக்கித் தள்ளி வழி அமைத்துக் கொண்டே விரைந்து செல்றேன்.

நான் வீடு திரும்பியபோது அம்மா கவலையாக வாசலிலேயே காத்து நின்றிருந்தாள்.

''வந்தியா, ஒரு வழியா? நேரமாயிடவே என்னுதநெம்மாம் எண்ணிக் கவலைப்பட்டுக் கிட்டிருந்தேன். கைகால் கழுவிக்கிட்டுச் சாப்பிட வா. தட்டு வைக்கிறேன்'' என்றபடி அம்மா உள்ளே போனுள்.

என் தலையில் நோவு தெறித்தது. குளிர்ந்த இரவுக் காற்று வரவேற்பில்லாத விருந்தாளி போல் வாசலுக்கு வெளியிலேயே நின்று விட்டது.

என் பார்வை தாழ்வாரத்தில் பதிந்தது. காக எச்சத்தின் கவடு உலர்ந்திருந்தது. நரைத்துப் போன கிறட்டுக் காகம். உள்ளே வந்து தலையில் தொத்திக் கொண்டு எப்படிக் கூரம் கொடுக்குது ! கா கா கா... 'யார் வரப் போறாங்க, நம்ம வீட்டுக்கு?'

சாருதான் ! சாருவேதான் ! அதோ தாழ்வாரத்தில் ஒய்யாரமாக நின்று கொண்டிருக்கிறுளே? நான் கவனிக்கவில்லையே இத்தனை நேரமாக ! எப்போது வந்தாள்? எப்படி வந்தாள் ?

என் உடலும் உள்ளமும் புல்லரித்தன. சாருவா ! மறுபடியுமா ! என் எதிரிலா ! அதே அழகு, அதே கனிவு, இளம் சந்தன நிறத்தில் கரையோ டிசைனே அற்ற எளிய சேலை, சருமவர்ண உதட்டுப் பூச்சினிடை மலர்ந்த அந்த இனிய புன்முறுவல்.

அவள் அசையாமல், வாய் திறந்து பேசாமல் என்னைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தாள். நானும் கண் ததும்ப, உயிர் சிலிர்க்க, நெஞ்சு பொங்கி விம்ம, அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த இன்பத்தின் சொல்லொனு ஆறுதலில் இதயத்தைத் தோய்த்தபடி, இம்முறை அந்தச் சந்திப்பிலிருந்து ஓடாமல், அற்ற யாவையும் மறந்து அவளைப் பார்த்தவாறு நின்று கொண்டேயிருந்தேன்.

* * *

மறு நாள்.

நான். எதிரே நாற்காலியில் அந்தப் பெரியவர்.

'' சொல்லுங்க, என்ன விஷயம்?'' என்ருர் அவர் மிடுக்காக, நிறைய அனுபவங்கள் உள்ளவர் என்று காட்டும் குரலில்.

'' எனக்கு உங்க உதவி வேணும் '' என்றேன்.

''சரி. விவரம் என்ன?''

''நான் ஒரு பெண்ணைக் காதலிச்சேன். இப்பவும் காதலிக்கிறேன். நாங்க கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டோம். எத்தனை எதிர்ப்பு இருந்தாலும் பொருட்படுத்தக் கூடாதுன்னு உறுதியாயிருந்தோம்.''

'' சரி '' என்ற போது அவர் குரலில் சிறிது சலிப்பு ஒலித்தது.

''நாங்க தினமும் சந்திக்கிறது வழக்கம். இப்பவும், கடந்த பத்து நாட்களில் அவளை மூணு தடவை பார்த்துட்டேன்.''

''இதுக்கும் என் தொழிலுக்கும் என்ன சம்பந்தம்னு தெரியலையே ஸார்.''

''சம்பந்தம் இதுதான். அவள் டைபாய்டு ஜுரத்தில் இறந்து போய் ஒரு மாசமாகுது டாக்டர்!'' என்று கூறிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டேன்.

அட்டைப் படத்துக்கு ஒரு கவிதை

'காதலிருவர் கருத்தொருமித்து' மன உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்வதை இவ்விதழ் அட்டைப்படத்தில் மூவர்ண ஓவியமாக வழங்கி யிருக்கிருர் ஓவியர் மாருதி. இந்தக் காதலர்களின் உணர்ச்சிப் போராட்டங்களைக் கவிதையாக வடித்து அனுப்ப வேண்டுகிறோம். சிறந்த கவிதைக்குப் பரிசு ரூபாய் முப்பது.

கவிதை அனுப்பவேண்டிய கடைசி தேதி :

25—9—71

अहं त्वामेवमुपदिशामि :—

सत्यं वद ।

धर्मं चर ।

स्वाध्यायान्मा प्रमदः ।

आचार्याय प्रियं धनमाहृत्य

प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः ।



In 10 years 55 million Indians learnt that mother tongue is more than words they picked up from their mothers.

Because of paper!

First halting utterances learnt at mother's knees. First hints of knowledge. But later in life all what our mothers' tongue had taught us seems only a starting point. New facts have to be learnt to live. That is possible because of paper. A fact which 55 million new literates in India learnt between 1961 and 1971. And West Coast Paper is fulfilling the need of more, and better, writing and printing paper. Paper that promises social and economic progress. West Coast Paper, the professionals for printing, writing and packaging paper.

West Coast Paper

Shreeniwas House, Waudby Road, Bombay 1.



நேரு மைதானம். தமிழகக் கால்பந்தாட்டக் கோப்பைக்காக இறுதி ஆட்டம் ஜலந்தர் எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கும் பாண்டிச்சேரி குழுவினருக்கும் தொடங்கவிருக்கிறது. மலேசியாவுக்கு இந்திய கோஷ்டியின் மானேஜராகச் சென்ற தமிழகக் கால்பந்தாட்டக் கழகத் தலைவர் விட்டல் வருகிறார்.

"தங்கள் மலேசியப் பிரயாணம் எப்படி?"

"மெர்டேகா போட்டியில் இந்திய கால்பந்தாட்டக்காரர்கள் பலர் அடிபட்டுவிட்டார்கள். ஒவ்வொரு மாட்சுக்கும் அடிபட்டவர் எண்ணிக்கை அதிகம். பர்மா கோஷ்டியோடு ஆடும்பொழுது நம் இந்தியக் கோஷ்டியின் தேர்ந்த ஆட்டக்காரர்கள் படுக்கையில் கிடந்தார்கள். நமக்குப் படுதோல்வி ஆயிற்று! சிங்கப்பூரில் பெஸ்டாககன் விளையாட்டு விழாவில் நம் இந்திய ஆட்டக்காரர்களுக்கு ஆறு நாள் நல்ல ஓய்வு. இன்செக்ஷனும் புஷ்டி உணவும் கொடுத்து அவர்கள் உடல் தேறி நன்றாக ஆடினார்கள். இறுதி ஆட்டத்தில் நம் இந்திய கோஷ்டியும் தெற்கு வியட்நாமும் ஆடி ஆட்டம் 'டிரா'வாகிக் கோப்பையை இருவருமே 'ஷேர்' பண்ணிக் கொண்டோமோ, இந்தியாவின் மானம் கப்பலேறாமல் பிழைத்ததோ!" என்று விவரித்தார் இந்திய கோஷ்டியின் மானேஜர் விட்டல்.

நேரு மைதானத்தில் இறுதி ஆட்டம் தொடங்கி விடவே வேகமாக இருக்கைகளுக்கு விரைந்தோம்!

"ஆட்டம் ஆரம்பிச்சுடுத்து. பாண்டிச்சேரிதான் முதல்லே கோல் போடும்!"

"இல்லே. எட்டணா பந்தயம்! ஜலந்தர் எல்லைப் பாதுகாப்புப் படைக்காரங்கதான் போடப் போறாங்க. ஆஜானுபாகுவான ஆட்களைப் பார்த்தாலே தெரியலையா? சிங்குகள்; அத்தனைபேரும் ஆட்டத்தில்சிங்கங்கள்!"

"கோல்! கோல்! எட்டணா எடு! எல்லைப் படை முதல்லே கோல் போட்டுட்டுது!"

"அது கோல் இல்லே. கையாலே அவங்க கோலுக்குள் தட்டிவிட்டுட்டாங்க!"

"நிஜமாகவே இதோ, பாண்டிச்சேரி ஆட்டக்காரங்க முதல் கோல் போட்டுட்டாங்க! ஹாய்யா!... எப்படி ஜலந்தர் ஆட்டக்காரங்களுக்குத் தண்ணி காட்டறாங்கன்னு பார்த்தீங்களா?"

"ஆமாம்! சம்பத் பந்தை ஜோரா தள்ள, ராஜேசுவரன் கோலிலே அடிச்சுட்டாரு.... இந்தா, எட்டணா!"

"ஐயையோ! இதென்ன! கர்ஜித் பந்தைக் கொண்டு நாஸர்சிங் கிட்டே கொடுத்து, 'கோல்' போட வைச்சுட்டாரே!"

"என்ன ஐயா! உம்ம பாண்டிச்சேரி என்ன ஆச்சு?"

"மெட்ராஸிலே ஆடுது!" என்று இடக்கரடக்கிலே புகுகிறார் நடுவிலே ஒருவர்.

"ஆட்டம் 'டிராவா'ல்ல போச்சு. இருட்டியும் போச்சு! என்ன செய்வாங்க!"

"ஞாயிற்றுக்கிழமை ஆடுவாங்க!"

"என்ன? நடுவர் வரதாச்சாரி மறுபடியும் விசில் ஊதி இருட்டிலே ஆட வைக்கிறாரே!"

"மூணே நிமிஷம் ஆட்டம்! மறுபடியும் ஆட்டத்தை முடிச்சு விசில் ஊதிட்டாரே!"

"டிராவானால் இரண்டு பேரும் சிங்கப்பூரிலே நடந்த மாதிரி ஷீல்டை 'ஷேர்' பண்ணிப்பாங்க!"

"அதுதான் இல்லே! பாண்டிச்சேரியோட ஜலந்தர் படை மறுபடியும் ஆட ஒத்துக்காததாலே 'ஷீல்டை'ப் பாண்டிச்சேரிக்குக் கொடுத்துட்டாங்களாம்!"

"இது என்ன நியாயம்? 'பெனல்டி கிக்' கொடுத்தாவது ஆட்டத்தை நிர்ணயித்திருக்கலாமுங்களே!"

"இருட்டிலே எப்படி ஆட முடியும்? எல்லைப் பாதுகாப்புப் படையினர் மற்றொரு முக்கிய பந்தயத்துக்காக 'ஸீட்' ரிஸர்வ் பண்ணி இன்னிக்கே போறாங்களாம்!"

"காரியதரிசி ஸார்! ஷீல்டை இரண்டு பேரும் சேர்ந்து வைச்சுக்க மறுபடியும் 'முடிவு' எடுத்தால் என்ன?" என்று பத்திரிகைப் பிரதிநிதி ஒருவர் கேட்கிறார்.

"ஒரு 'டிரா'விலே மாட்சின் போக்கை நிர்ணயித்துவிடலாமா? பாண்டிச்சேரிக்கு அது பிரதிகூலமல்லவா?" என்கிறார் காரியதரிசி நெல்லன் ஜஸக்.

"ஸார்! இறுதி ஆட்டத்தை இன்றைக்குச் சீக்கிரமே வைத்திருந்தால் இந்தமாதிரி கஷ்டமான பிரச்னை தமிழகக் கால்பந்தாட்டக் கழகத்துக்குத் தோன்றியிருக்காதல்லவா?" என்கிறார் 'நடுவர்' கன்னியப்பன்.

இந்த இழுபறி ஆட்டத்தில் வெற்றி யாருக்கு? தோல்வி யாருக்கு?

இந்த இழுபறி ஆட்டத்தில் பாண்டிச்சேரி ஆட்டக்காரர்களுக்கு வெறும் ஷீல்டுதான் கிடைத்தது. ஜலந்தர் எல்லைப் பாதுகாப்புப் படையினர் பொல்லாதவர்கள்! கால்பந்தாட்ட ரஸிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்து சென்று விட்டார்கள்!

— குண்டுமணி

தேசிய கேரம் போட்டியில் தமிழக வெற்றி

குண்டூரில் ஏழாவது தேசிய கேரம் போட்டியில் தமிழகம் முதலாவதாக வந்து ஐந்து வெள்ளிப் பதக்கங்களையும், சுழல் கோப்பையும் பெற்றது. இரட்டையர் போட்டியில் ஸாகுல், டில்லியும், மிக்ஸட் போட்டியில் லாஸர் - ஹேமாவதி கோஷ்டியும், வெட்டரன்ஸ் ஒற்றையர் போட்டியில் திரு எஸ். வி. ராமச்சந்திர ராவும் தமிழகத்துக்குப் பெருமை தேடித் தந்தனர். பெண்கள் ஒற்றையர் போட்டியில் டில்லி விஜயலக்ஷ்மிக்கு வெற்றி. தமிழகத்துக்குப் பெரும் புகழ் தேடித் தந்த கேரம் ஆட்டக்காரர்களுக்கு நம் நல்வாழ்த்துக்கள்.

பிறக்காத 'மாஸ்டர் பீஸ்'

எஸ். கிருஷ்ணமூர்த்தி

சிறு வயது முதலே கோபாலனுக்கு இலக்கியம் என்றால் ஒரு பித்து. எப்போது பார்த்தாலும் புத்தகமும் கையுமாக இருப்பார். தாமும் ஓர் எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது அவருக்கு. ஆகவே தன் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் மற்றவர்களைப் போல் மாதச் சம்பளத்துக்கு வேலை தேடப் போகவில்லை. மாபெரும் இலக்கியப் படைப்புகள் அவரிடமிருந்து பிறக்கவிருந்தபோது ஓர் ஆபீஸ் மேஜையின் முன்னால் உட்கார்ந்து கொண்டு பைல் கட்டுகளுக்குத் தீனி கொடுத்து நேரத்தை வீணாக்குவாரா அவர்?

எழுத்தாளனாவதற்குத் தம்மைத் தயார் செய்துகொள்ளத் தொடங்கினார் கோபாலன். ஆங்கிலத்திலும் தமிழிலும் நிறையப் புத்தகங்கள் படித்தார். குறைந்தது ஒரு 'மாஸ்டர் பீஸா'வது எழுதிவிட வேண்டும் என்பது அவருடைய இலட்சியமாயிற்று. போதிய தயாரிப்பு இல்லாமல் ஒரு 'மாஸ்டர் பீஸ்'—இலக்கியத்தின் சரித்திரத்தில் ஒரு மைல் கல்—இறவாப் புகழ்பெற்ற இலக்கியப் படைப்பு—உருவாகிவிடுமா?

இதற்கிடையில் அவருக்குக் கல்யாணமாகி இரண்டு குழந்தைகளும் பிறந்துவிட்டன. அவரிடம் கொஞ்சம் பூர்வீக சொத்து இருந்ததால் அதைக் கொண்டு குடும்ப நிர்வாகம் நடந்தது. கோபாலனும் தன் சுதந்திரத்தை இழக்காமல் இலக்கியத்தில் ஈடுபட முடிந்தது.

ஆனால் இந்த நிலைமை வெகு காலம் நீடிக்கவில்லை. கோபாலனுடைய துரதிருஷ்டம் அவருடைய சொற்ப சொத்து விலைவாசிகளின் ஏற்றத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் சீக்கிரம் கரைந்து போய் விட்டது. கடன்காரர்கள் அவருடைய சொந்த வீட்டைக் கபளீகரம் செய்து கொள்ளவே, அவர் திருவல்லிக்கேணியில் ஒரு வீட்டில் ஒண்டுக் குடி இருக்க நேர்ந்தது.

இப்போது அவருக்கு எப்படியாவது கொஞ்சம் வருமானத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. வெறும் இலக்கியப் பயிற்சி சோறு போடுமா? அப்படியும் அவர் குமாஸ்தா வேலைக்குப் போக விரும்பவில்லை. தம் எழுத்துத் திறமையையே முதலாகக் கொண்டு ஜனரஞ்சகமான சிறுகதைகளை எழுதத் தொடங்கினார். அக்கதைகளுக்கும் அவர் எழுத விரும்பிய மாஸ்டர் பீஸுக்கும் எவ்விதப் பொருத்தமும் இல்லைதான். ஆனால் மாஸ்டர்பீஸ் உருவாகும்வரையில் அடுப்புப் புகைய வேண்டுமே!

ஆனால் கதைகளின் மூலம் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை. கிடைத்த வருமானம் குடும்பச் செலவுக்குத்தான் போதுமானதா யிருந்தது. ஆகவே அவருடைய மாஸ்டர் பீஸ் தொடங்குவதையும் ஒத்திப் போட வேண்டியதாயிற்று.

இவ்வாறு சில வருடங்கள் சென்றன. அனுபவம் அவருடைய எழுத்தில் மெருகேறியிருந்தது. ரசிகர்களிடையே ஓரளவு மதிப்பும் ஏற்பட்டது.

இந்தச் சமயத்தில்தான் திடீரென்று ஓர் எதிர்பாராத மாற்றம் ஏற்பட்டது. அவருடைய சிறு கதைகளைப் பத்திரிகைகள் திருப்பி அனுப்பத் தொடங்கின. அவருடைய சிறுகதைகளைக் கேட்டு வாங்கி ஆர்வத்துடன் பிரசுரித்த 'ஆம்பல்' பத்திரிகைகூட இப்போது அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தத் திடீர்த் திருப்பம் அவருக்கு ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையும் விளைவித்தது.

அவர் நேரே 'ஆம்பல்' பத்திரிகை ஆபீசுக்குப் போய் ஆசிரியரையே கேட்டுவிட்டார். ''என் கதைகளைத் திருப்பி அனுப்பி விட்டீர்களே, ஏன்? அவை நன்றாக இல்லையா?''

''நன்றாக இல்லாமலென்ன? ஆனால் ..'' தலையைச் சொறிந்தார் ஆசிரியர்.

''என்ன 'ஆனால்?''

''ஆனால்...அவைகளைப் பிரசுரிக்கத்தான் பத்திரிகையில் இடமில்லை.''

''இடமில்லையா?'' கோபாலனுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆசிரியர் விளக்கினார்: ''இப்போதெல்லாம் பத்திரிகைத் துறையில் புரட்சி ஏற்பட்டு விட்டது, கோபாலன் சார்! இப்போதெல்லாம் கதைகளுக்கு மவுசு இல்லை. இப்போது வாசகர்கள் வேண்டுவது தகவல்கள்!''

''அப்படியென்றால்?''.

''தகவல்கள் என்றால் துணுக்குகள், சினிமா நடிக, நடிகையர், பெரிய மனிதர்கள், அரசியல்வாதிகள் இவர்களைப் பற்றிய வம்புத் துண்டுகள் இவைகளுக்குத்தான் நல்ல மார்க்கெட் இப்போது! வாசகர்கள் கேட்பதைப் போட்டால்தானே பத்திரிகை விற்பனையாகும்! ஆகையால் பெயருக்கு ஓரிரு கதைகளைப் பிரசுரித்துவிட்டுப் பாக்கிப் பக்கங்களைத் தகவல்களாலும் அவைகளில் சம்பந்தப்பட்டவர்களின் படங்களாலும் போட்டு நிரப்பி விடுகிறோம். இப்போது எங்கள் பத்திரிகைக்கு 'டிமாண்ட்' சொல்லி முடியாது. இந்த ஒரு மாதத்திலேயே விற்பனை வெகுவாக உயர்ந்திருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!.. ஆகவேதான் உங்கள் கதைகள் நன்றாக இருந்தாலும் பிரசுரிக்க முடியவில்லை.''

கோபாலன் அங்கேயே இடிந்து போய் உட்கார்ந்து விட்டார்.

அவரைப் பார்க்கப் பாவமாக இருந்தது ஆசிரியருக்கு. ''நான் ஒன்று சொல்கிறேன், கேட்பீர்களா?'' என்று மெதுவாக ஆரம்பித்தார்.

''சொல்லுங்கள்.''

''நீங்களும் தகவல் சேகரித்துக் கொடுங்களேன்! இதில் நல்ல பணம் இருக்கிறது, கோபாலன் சார்! மண்டையை உடைத்துக் கொண்டு சிறுகதைக்குப் பிளாட் யோசிக்க

வேண்டியதில்லை. நடிக நடிகையர், ஊர்ப் பெரிய மனிதர்களின் சிநேகம் கிடைத்து விட்டால் போதும். நீங்கள் புகைப்படம் எடுக்கவும் கற்றுக் கொண்டு விட்டால் இன்னும் நல்லது. தகவல் கிடைக்காத போது நடிகைகளின் 'ரசமான' பகுதிகளைப் படம் பிடித்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவிடலாம். என்ன சொல்கிறீர்கள்?''

கோபாலனுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. ''என்ன ஐயா! நீர் என்னை யாரென்று நினைத்துவிட்டீர்? நான் எழுத்தாளன். தகவல் சேகரிப்பவன் அல்ல! இன்றில்லா விட்டால் இன்னொருநாள் ஒரு பெரிய இலக்கியத்தைப் படைக்கப் போகிறவன்! தன்மானத்தை விட்டுத் தகவல்களைச் சேகரித்துக் காசு சம்பாதிப்பதை விடப் பட்டினி கிடந்து செத்துப் போகத் தயார்!'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்து விட்டார்.

ஆனால் அவருடைய உறுதி வெகு நாட்கள் நீடிக்கவில்லை. வெறும் தன்மானம் சோறு போடுமா? எனினும் நடிகைகளைப் பற்றித் தகவல் சேகரிப்பதில் பல சங்கடங்கள் இருந்தன. அவர்களுடைய வீடுகளுக்கு நடையாய் நடக்க வேண்டும். வீட்டுத் தர்வான்களுக்கு அடிக்கடி 'இனாம்' கொடுக்க வேண்டும். அவர்கள் சொல்லும் எடுபிடி வேலைகளைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு எழுத்தாளராகும் விபரீத ஆசை ஏற்பட்டுவிட்டால் அவர்களுக்காகக் கதைகள் எழுதித் தரவேண்டும். நாற்பத்தைந்து வயது நிரம்பிய நடிகையின் பதினெட்டு வயதுப் பெண்ணைச் சுட்டிக் காட்டி, ''உங்கள் தங்கை ஏன் சினிமாவில் நடிப்பதில்லை?'' என்று கேட்டு நடிகையை இங்கிதமாகப் புகழவேண்டும். இவற்றுக்கெல்லாம் கோபாலன் தயாராக இல்லை. ஆனாலும் வாழ்ந்தாக வேண்டுமே? ஆகவே கதாசிரியர் பட்டத்திலிருந்து தகவலாசிரியர் இடத்துக்கு இறங்குவதைத் தவிர வேறு வழி இல்லை. எழுத்தாளர் என்று பெயர் பெற்ற கோபாலனுக்குத் தம்மைத் தகவல் சேகரிப்பாளர் என்று சொல்லிக் கொள்ள வெட்கமாக இருந்தது. தம் சக எழுத்தாளர்கள் தம்மை இழிவாகக் கருதாமல் இருப்பதற்காக அவர் தகவல்களைச் சேகரித்துப் புனைபெயர்களில் அனுப்பினார்.

ஒரு நாள் அவர் பாண்டி பஜாரில் நடந்து போய்க் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் இருவர் பேசிக் கொண்டு போனார்கள். ஒருவன் மற்றவனிடம் ரஸ்தாவில் நின்றிருந்த ஒரு காரைச் சுட்டிக் காட்டிச் சொன்னான்: ''டேய், இது யாரோட கார் தெரியுமா? 'நீச்சலுடை அழகி நீரஜா'வின் காராக்கும்!''



சட்டென்று ஓர் எண்ணம் தோன்றியது கோபாலனுக்கு. எதிரில் இருந்தது பிரத்தியேகமாகப் பெண்களுக்குத் துணிமணிகள் தைத்துக் கொடுக்கும் ஒரு பிரபல தையற்கடை. ஒருவேளை நீரஜா இங்கே வந்திருப்பாளோ?... அவளைப் பற்றிய தகவல் ஏதாவது கிடைக்குமா என்று சற்றுக் காத்திருந்து பார்க்கலாமே!

கடையின் ஒரு பக்கத்தில் அவர் நின்று கொண்டார்.

சற்று நேரம் கழித்துக் கடையிலிருந்து வெளியே வந்தது நீரஜா அல்ல, யாரோ ஓர் ஆண். நீரஜாவின் கார் டிரைவராக இருக்கலாம். ஒரு பெரிய காகிதப் பொட்டலத்துடன் காரை நோக்கிச் சென்ற அவன், 'சுத்த பேஜாராப் போச்சு!' என்று அலுத்துக் கொண்டான்.

கோபாலன் அநுதாபம் நிரம்பிய குரலில் அவனை வினவினார்: ''என்னப்பா? என்ன விஷயம்?''

தன் கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்ள அவனுக்கும் ஓர் ஆள் தேவைப்பட்டது போலும்! ''அதை ஏன் கேக்கறீங்க 'போங்க! பெரிய மனுசங்ககிட்டே — அதுவும் பொம்பளைங்ககிட்டே வேலை பார்க்கறது ரொம்பச் சங்கடங்க! பாருங்களேன், என் எசமானியம்மா — அதாங்க ஸினிமாவிலே நடிக்கிறாங்களே நீரஜா—பத்து பனவுக நைக்கக் குடுத்தாங்க. தச்ச துணியை இது குட்டை, அது லூசுன்னு சொல்லிச் சொல்லித் திருப்பி யனுப்பிக்கிட்டு இருக்காங்க! இது நாலாந் தடவை! என்ன சங்கடம் பாருங்க!'' என்று ஒரு குரல் அழுதான் அவன்.

''வாஸ்தவந்தாம்பா! ஆனா உனக்கு எப்படிப்பட்ட அதிருஷ்டம் அடிச்சிருக்கு! நீரஜாவை ஒரு நிமிஷம் பார்க்கணும்னு எவ்வளவு ஜனங்க மணிக் கணக்கா கால் கடுக்கக் காத்திருக்காங்க! நீ அவங்க வீட்டிலேயே அவங்களோடேயே பழகுறே! உன் அதிர்ஷ்டம் எல்லாருக்கும் கிடைக்குமா?... உன்னைப் பார்த்தா எனக்கு எவ்வளவு பொறாமையா இருக்கு தெரியுமா?''

டிரைவருக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

''அவங்க அவ்வளவு ஜோரா இருக்கிறதுக்குக் காரணம் என்ன தெரியுங்களா?..... யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க!.. எஜமானியம்மா தினம் காலையிலே எழுந்திரிச்சதும் நீச்சலுடையைப் போட்டுக்கிட்டு அவங்க அறையை முப்பது தடவை சுத்திச் சுத்தித் தவழ்ந்துக்கிட்டே வருவாங்க! அதனாலேதான் அவங்க உடம்பு இவ்வளவு அளகா, கம்மா வாளத்தண்டு கணக்கா இருக்கு!''


''ஜோக் வாட்ச் மேன்! மணி என்ன?''

''நிஜமாவா?'' என்று கோபாலன் வாயைப் பிளந்தார்.

என்ன ருசியான தகவல்!

பாண்டி பஜாரிலிருந்து 'ஆம்பல்' ஆபீஸ் சுமார் நான்கு மைல் தூரம். அருமையான 'ஸ்கூப்' கிடைத்த மகிழ்ச்சியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்து நேரத்தை வீணாக்க மனமில்லாமல் நடையைக் கட்டினார். ஆம்பல் ஆபீசிலே அமர்ந்து நீச்சலுடை அழகி நீரஜாவின் உடலழகின் ரகசியத்தை எழுதி ஆசிரியரிடம் கொடுத்தார்.

தகவலைப் படித்து விட்டு உற்சாகத்தால் துள்ளிக் குதித்தார் ஆசிரியர். ''மார்வெலஸ்! உங்களைத் 'தகவல் திலகம்' பட்டம் தேடி வருவது நிச்சயம்!'' என்றார்.

அன்று முப்பது ரூபாய் சன்மானத்துடன் வீடு திரும்பினார் கோபாலன்.

''கோபாலன்! காலங்காத்தாலே எங்கே கிளம்பினீங்க?''

குரல் கேட்டுத் திரும்பினார் கோபாலன். அவரருகே ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதன் பின் சீட்டில் உட்கார்ந்திருந்தார் அவருடைய எழுத்தாள நண்பர் சந்துரு. சந்துருவும் அவரைப் போலவே இலக்கியக் கனவுகள் காண்பவர்தான்.

சந்துருவுடன் இன்னொருவரும் உட்கார்ந்திருந்தார். அவரைக் கோபாலனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் சந்துரு. ''இவர்தான் பிரபல மில் முதலாளி தேவசகாயம். என் நெருங்கிய நண்பர். சிறந்த இலக்கிய ரசிகர். என்னுடைய கவிதைத் தொகுதியைப் பிரசுரிக்க முன்வந்திருக்கிறார்... சரி, நீங்கள் எங்கே போக வேண்டும்? மயிலாப்பூருக்கா? ரொம்ப நல்லதாகப் போயிற்று. சாரும் மயிலாப்பூருக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறார். அங்கேதான் அவர் வீடு. நீங்களும் எங்களுடனேயே வரலாம்.. மிஸ்டர் தேவசகாயம்! இவர்தான் தலைசிறந்த எழுத்தாளர் கோபாலன். அருமையாகச் சிறுகதைகள் எழுதுவார்...'' என்று ஏதோதோ உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே போனார்.


தேவசகாயம் ஒன்றும் பேச வில்லை. சந்துருவின் பேச்சுக்கிடையே அவ்வப்போது ஒரு 'உம்' மட்டும் போட்டுக் கொண்டு வந்தார். அவரைப் பார்த்தால் இலக்கிய ரசிகராகத் தெரியவில்லை, கோபாலனுக்கு.

சந்துரு ராயப்பேட்டையில் தம் வீட்டு வாசலில் இறங்கி விட்டார். பிறகு தான் பேச வாயைத் திறந்தார் தேவசகாயம்: ''பாவம், சந்துரு!''

கோபாலனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''என்ன சொல்கிறீர்கள்?''

''சந்துரு பாவம் என்றுதான் சொல்கிறேன். ரொம்ப நல்ல மனுஷர்தான். என் பழங்கால நண்பர்கூட. ஆனால் பிழைக்கத் தெரியாதவர். இலக்கியம், கவிதை என்றெல்லாம் சொல்லிக்கிட்டு அலையறார். இலக்கியத்தாலே என்ன பிரயோசனம்! சோறு போடுமா அது? இந்தக் காலத்திலே மனுஷனுக்கு இலக்கியத்தை ரசிக்க நேரமெங்கே? மனசுதான் எங்கே! ஒவ்வொருத்தனும் சோத்துப்பாட்டைக் கவனிக்கவே நேரம் போதலியே!... இப்பல்லாம் ஜனங்களுக்கு வேண்டியது அவங்களோட தொல்லைகளை மறக்கச் செய்யும்படியான விஷயங்கள், பொழுது போக்குகள். சந்துரு கவிதை எழுதி வீணடிக்கிற நேரத்திலே ஜனரஞ்சகமா ஏதாவது விஷயம் எழுதினால் நாலு காசு சம்பாதிக்கலாம். அதுசரி, நீங்களும் எழுத்தாளர்தானே! 'ஆம்பல்' பத்திரிகைக்கு எழுதறீங்களா?''

'ஆம்ப'லின் தகவல் எழுத்தாளர்களில், தாமும் ஒருவர் என்று சொல்லிக் கொள்ள வெட்கமாக இருந்தது கோபாலனுக்கு. ''வந்து...வந்து...'' என்று இழுத்தார் அவர்.



முப்பத்தைந்தே நாட்களுக்குப் பின் அற்புதமான இப் பயன்களைப் பெற புல்ஒர்க்கர் பயிற்சியே வழி

திரு. ஜே. ஹெச். ஒரு விற்பனை ஊழியர். நம்மில் பலரைப் போல, நாட்களை அலுவலகத்தில் கழித்து இரவு களைத்து வீடுதிரும்புவார் ஆதலால் நீண்ட கடும் பயிற்சிகளில் ஈடுபட இயலாமல், ரேடியோ கேட்பதில் போய் முடிப்பார். எப்போதேனும் உலவப்போவார். எனினும் பள்ளியை விட்ட பிறகு, முறையான ஆட்டப் பயிற்சிகளில் முனைந்தவரல்ல.

அப்படியிருந்தவர் ஐந்தே வார இடைவெளியில் எப்படி மாறினார் என்பதைக் காட்டுகின்றன இந்த இரு புகைப்படங்கள்: மார்பளவை 12½ செ மீ., கர முண்டாவை 5 செமீ., கழுத்தை 2½ செ மீ., தொடைகளை 8 செமீ., பின்னங்கால்களை 2½ செமீ., பெருக்கிக்கொண்டு விட்டார். அசதிக்கு பதிலாக ஆற்றலே உருவாக இளமை பூரிக்க விளங்குகிறார் இன்று. இம் மகத்தான மாறுதலின் மர்மம்? புல்ஒர்க்கர்: வீட்டிலேயே அன்றாடம் சில நிமிடங்களில் எவருமே பயன் காணத்தக்க அற்புதமான புதிய பயிற்சிக் கருவி.

உடம்புக்கு உரமேற்றுக : உச்ச வலிவும் நலனும் தேன்பும் பெற்றுத் திகழ அன்றாடம் ஐந்தே நிமிடங்கள். உறுதியான பயன்களை 2 வாரங்களில் காண்பீர்—இல்லையேல், நீங்கள் பணம் தராதீர்.

அமெரிக்க (30 தங்கப் பதக்கங்கள்). ஜெர்மன் (10 தங்கப் பதக்கங்கள்) ஒலிம்பிக் குழுவினர்தாம் புல்ஒர்க்கரை முதலில் பயன்படுத்தினர். ஐரோப்பிய, அமெரிக்க, ஜப்பானிய, இந்திய நாடுகளிலே பல நூறுயிரம் உற்சாகிகள் பயன்படுத்துவது புல்ஒர்க்கர். வாலாயமான முறைகளை விட 4 மடங்கு விரைவாகவே பயன்தரும் கருவி: ஏனெனில், இயங்காத ஐஸோமெட்ரிக்ஸின் நலங்கள் அனைத்துடனும் ஐஸோடோனிக்ஸின் முக்கியமான உபரி நன்மைகள் இணையப் பெற்றது : ஊக்கமயமான பயிற்சியாக.

அன்றாடம் ஐந்தே நிமிடப் புல்ஒர்க்கர் பயிற்சி, உங்கள் வலிமையை 4% பெருக்கும். வயது இருபதோ, நாற்பதோ, அறுபதோ அது உங்கள் தோள்களை விரிவாக்கி; கரம், மார்பு, கால் தசைகளை உருவாக்கி, இடுப்பைக் குறைத்து, வீரிய வடிவாகத் தென்புதுள்ளும் தோற்றத்தையும் உணர்வையும் அளிக்கும்.

உத்தரவாதமளிக்கிறோம்: பயிற்சி துவங்கிய இரண்டே வாரங்களில், உங்கள் நிலைக் கண்ணாடியும், அளவிடும் நாடாவும் கண்கூடாக விளங்கும் அந்த மாறுதலை 5 வாரங்களில் மகத்தான முன்னேற்றம் கண்ட திரு. ஜே. ஹெச்., உதாரணத்திற்கொருவர். இதே போலப் பல்லாயிரம் பேர் உண்டு. அப் பேறு உமக்கும் கிட்டத்தக்கதே.

இன்று தொடங்குவதேநன்று. புகைப்படங்கள், சான்றேடுகள், புல்ஒர்க்கர் பயிற்சிமுறை முழு விபரங்கள் யாவும் உங்களைத் தேடிவர, கீழுள்ள கூப்பனைத் தபாலிலிடுங்கள் — இன்றே பெறுவீர் இலவசப் புத்தகத்தை.

இவற்றில் எதுவேண்டும் உமக்கு. இன்றே நிலைக் கண்ணாடியைப் பார்த்து உள்ளபடி மதிப்பிடுங்கள். கீழுள்ளவற்றிலே எது வேண்டுமெனக் குறியிடுங்கள் :

1. ஆண்மைதிகழும் வீரிய வடிவம்
2. கட்டான, பரந்த தோள்கள்.
3. உருத் திரண்ட கர முண்டா.
4. வாட்டசாட்டமான மார்பு.
5. தட்டைபபாங்கான வயிறு.
6. திண்ணிய, வலுவுள்ள தொடை, பின்னங்கால் தசைகள்.

© Copyright 1969 Mail Order Sales Pvt. Ltd. 15 Mathew Road, Bombay 4

இலவம்

புல்ஒர்க்கர் திட்டத்தைப் பற்றிய, பயிற்சிப் புகைப் படங்களுள்ள புத்தகம், சான்றேடுகள், முழு விபரங்கள் யாவையும் இலவசமாக மறுதபாலில் அனுப்புக.

OST

பெயர்..

முகவரி..

....வயது.

BULLWORKER SERVICE 15 Mathew Road, Bombay 4 KL 6

தயவு செய்து உமது முகவரியை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பவும்.



தரத்தில் சிறந்தவை!
உழைப்பில் உயர்ந்தவை!!
கெட்டியான சாயம்!!!

REGD. TRADE MARK
80' x 80'


எங்கள்
சங்கு
மார்க்
லுங்கிகள்

தி மதராஸ் பளயகாட் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
'சங்கு நிலையம்' 31, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1
கிளை: 57, ரவீந்திரசாரணி, கல்கத்தா-1

நீடித்த உழைப்பிற்கு நம்பகமான

கூடுதலான சக்தியைத் தரும் AMCO ஆம்கோ

பாட்டரியே வேண்டுமென்று வற்புறுத்துங்கள்



ஆம்கோ பாட்டரீஸ் லிட்., பெங்களூர்-2

AM-MAC-(B)-88 A TAM

அவர் முடிக்கும்வரை காத்திராமல் தேவ சகாயம் பேச்சைத் தொடர்ந்தார்: ''என்னைப் பெரிய இலக்கிய ரசிகர் என்றெல்லாம் சொன்னாரே சந்துரு. அதெல்லாம் நெச மில்லே, மிஸ்டர் கோபாலன்! எனக்கும் இலக்கியத்துக்கும் ரொம்பத் தூரம். சந்துரு வுக்கு என்னாலான உதவி செய்யணும்னுதான் அவரோட கவிதைகளைப் பிரசுரிக்க ஒப்புக் கொண்டேனே தவிர, அவருடைய கவி தையை ரசிச்சதுக்காக இல்லே.. உண்மையைச் சொல்றேனே! நான் படிக்கிற ஒரே பத்திரிகை 'ஆம்பல்' தான். அதிலே சுவையான விஷ யங்களெல்லாம் வருது. பாருங்க, போன வாரத்து 'ஆம்பல்'லே ஒரு ஜோரான தகவல் கொடுத்திருக்காங்க, நடிகை நீரஜாவைப் பத்தி! அவளோட உடல் அழகுக்குக் கார ணம் என்னங்கற மர்மத்தைப் பிட்டுப் பிட்டுச் சொல்லியிருக்காங்க!''

தாம் எழுதியதை — அது வெறும் தகவ லாகத்தான் இருக்கட்டுமே! — இன்னொரு வர் பாராட்டும்போது யாருக்குத்தான் பெருமையா யிருக்காது? கோபாலன் மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? எதிர்பாராது கிடைத்த பாராட்டில் திக்கு முக்காடிப் போன அவர் தம்மை மறந்து, ''அதை எழுதியது நான் தான்!'' என்று கூறிவிட்டார்.

இதைக் கேட்டுத் தேவ சகாயம் துள்ளிக் குதித்தார். ''நீங்கள் அபாரமான எழுத் தாளர்தான், சந்தேகமே இல்லே! உங்களைப் பார்த்த தில் எனக்கு ரொம்பச் சந் தோஷம்! அந்தத் துணுக் கைப் படிச்சதிலேருந்து எனக்கு ஓர் ஐடியா தோணி யிருக்கு''

'' 'ஆம்பல்' மாதிரி இன்னொரு பத்திரிகை ஆரம்பிச்சா என்னன்னு? 'ஆம்பல்'லேயாவது கொஞ்சம் கதையெல்லாம் இருக்கு. இந்தப் பத்திரிகையிலே முழுக்க முழுக்கத் தகவல் களும் படங்களும்தான் போடணும். பொம்ப ளெங்களோட உடம்பிலே எதை எதை யெல்லாம் சட்டத்திலே அகப்பட்டுக்காமே படம் புடிச்சுப் போடலாமோ அவ்வளவையும் போட்டுடலாம். இப்போதைக்கு உள்நாட் டுச் சரக்கோடே இங்லீஷ் சரக்குகளையும் எடுத்துத் தகவலாகப் போடலாம். கொஞ்ச காலத்துக்குப் பிறகு பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் இந்தப் பாஷைப் பத்திரிகை களிலேயிருந்தும் மொழிபெயர்ப்பாளர்களை வைச்சுத் தகவல் சேர்க்கலாம். ரொம்பச் செலவாகுமே என்று பார்க்கிறீங்களா? இந்த மாதிரிச் சரக்குக்கு நல்ல மார்க்கெட் இருக்கு. பணம் எவ்வளவுதான் செலவாகட்டுமே, அவ்வளவையும் இரண்டே வருஷங்களிலே லாபமா எடுத்துடலாம். என்ன சொல்றீங்க?'' என்றார். தேவசகாயத்தின் உற்சாகம் கோபா லனையும் பற்றிக் கொண்டது. ''நல்ல ஐடியா தான்!'' என்று அவர் ஆமோதித்தார்.



''அன்பே! நேரில் நாம் பேசுவது போதாது என்று காதல் கடிதமும் எழுதித் தருகிறீர்களா?''

''ஊஹும்! நாளை நான் இங்கு வர முடியாது. அதற்கு லீவு லெட்டர்!''

''அப்படியானா நீங்களே அந்தப் பத்திரி கைக்கு ஆசிரியராக இருங்களேன்!''

கோபாலன் திகைத்தார். ''நானா!''

''ஆமாம், நீங்கதான்! நீரஜாவைப் பத்தி அபூர்வமான ஒரு தகவல் சம்பாதிச்சீங்களே, உங்களை விட இந்தப் பதவிக்குப் பொருத்த மான ஆள் வேறு யாருங்க இருக்க முடியும்? சம் பளத்தைப் பத்தி யோசிக்க வேண்டாம். நான் வியாபாரி. சரக்கு நல்லா யிருந்தால் அதை வாங்கறபோது கஞ்சத்தனம் பண்ண மாட்டேன். ஆரம்பத்திலே உங்களுக்குச் சம்பளம் ஆயிரம் ரூபாய் போட்டுத் தரேன். விற்பனை ஏற ஏறச் சம்பளமும் ஏறும். சரி தானே?''

மகிழ்ச்சி மிகுதியினால் கோபாலனுக்குப் பேச நா எழவில்லை.

தேவசகாயம் கேட்டார், ''நம்ம பத்திரி கைக்கு என்ன பெயர் வைக்கலாம்?''

'' 'தளர்க் குருவி' என்று பெயர் வைக்க லாமே!''

''பேஷ்! பேஷ்! பொருத் தமான பெயர் தான்! தக வல் சேகரித்துக் கொடுக்கிற பத்திரிகைக்கு 'தளர்க் குருவி'!... 'தளர், உலக மக் களெல்லாம் தெரிந்துகொள்ள 'தளர்க் குருவி'யைப் படி யுங்கள்!'னு விளம்பரம் போடலாம்! நீங்க கற்பனை யிலே மன்னன் தாங்க! இல் லாட்டி இவ்வளவு பொருத் தமான பேரை ஒரு செகண் டிலே சொல்லிப் போட்டி ருக்க முடியுமா?... இப்பவே நான் சொல்றேன் — நம்ம பத்திரிகை வெளி வந்த அப்புறம் உங்களுக்குத் 'தக வல் திலகம்'னு பட்டம் கிடைக்கப் போகுது!......சரி, உங்க ளுக்கு இப்ப அவசர ஜோலி ஒன்றும் இல்லியே? அப்படீன்னா இப்பவே நம்ம வீட் டுக்கு வாருங்களேன்! பத்திரிகைக்கான ஏற் பாடுகளைத் தொடங்கிடலாம்! அடுத்த வாரம் 'டிக்ளரேஷன்' கொடுத்துடறேன். வருஷப் பிறப்பன்னிக்குப் பத்திரிகையோட முதல் இதழைக் கொண்டு வந்துடலாம்!...''

சுமார் ஒரு மணி நேரம் கழித்துத் தேவ சகாயத்தின் வீட்டிலிருந்து வெளி வந்தவர் வெறும் கோபாலன் அல்ல, 'தளர்க் குருவி' ஆசிரியர் கோபாலன்! முதல் சம்பளத்துக் கான செக் அவருடைய பையில் இருந்தது. அவரது மனக் கண் முன்னால் 'தளர்க் குருவி' யின் லட்சக் கணக்கான பிரதிகள் விற்பனை யாகிக் கொண்டிருந்தன. தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் 'தளர்க் குருவி' என்பதே பேச்சு! மந்திரி ஒருவர் அவருக்குத் 'தகவல் திலகம்' என்ற பட்டத்தை வழங்கிப் பொன் னாடையும் போர்த்துகிறார்...

இந்த அமர்க்களத்தில் அவருடைய 'மாஸ் டர் பீஸ்' பிறக்கு முன்பே செத்துவிட்டது!

சாதாரண சரும
நோய்களுக்கு நிவாரணம்


CIBA

வியோஃபார்ம்

க்ரீம்

CIBA/VIO-69 TM

நவராத்திரி விசேஷ விற்பனை



பட்டுப்புடவைகள்
நவீன ரகங்களில்
நூல் புடவைகள்
கைத்தறி
பின்னி & மில்
ஜவுளிகளுக்கு

போன்
442417

சேகர் எம்போரியம்

(ஓவர்பிரிட்ஜ் சமீபம்) கோடம்பாக்கம், சென்னை-24.



முன்ஜாக்கிரதை

"உன்னை வேலைக்கு வைக்கிறதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் நீ எதிலும் முன் எச்சரிக்கையுடன் இருப்பாய் என்பதை எனக்கு நிரூபிக்க வேண்டும்."

"அப்படியா? ஒரு மாதச் சம்பளத்தை நீங்கள் அட்வான்ஸாகத் தந்தால் நான் வேலை பார்க்கச் சௌகரியமாக இருக்கும்!"

- லியா



ஜான் டி ராக்ஃபெல்லர் (சீனியர்) தமது 33வது வயதிலேயே அமெரிக்காவின் கோடீசுவரர்களில் ஒருவரானவர். பெரும் பணக்காரரான அவர் ஒரு காலத்தில் மிகுந்த பணத்தாசை பிடித்தவராகவும் கஞ்சத்தனம் மிகுந்தவராகவும் இருந்தார்.

ஒருமுறை 40,000 டாலர் பெறுமானமுள்ள உணவுத் தானியங்களை அவர் கப்பல்மூலமாக அனுப்பினார். ஆனால் சரக்கை இன்ஷூர் செய்துகொள்ளவில்லை. இன்ஷூரன்ஸ் பிரீமியம் 150 டாலர் கட்ட அவருக்கு மனமில்லை! கப்பல் நகர்ந்த இரவு பெரும் புயலொன்று வீசியது. ராக்ஃபெல்லர் மிகுந்த கவலைக்குள்ளானார். அவருடைய வியாபாரக் கூட்டாளியான ஜார்ஜ் கார்டனர், காலையில் அலுவலகத்துக்கு வந்ததும் நிலைமையை அறிந்து சரக்கை இன்ஷூரன்ஸ் செய்து வந்தார். ஆனால் ராக்ஃபெல்லரின் கவலை தீர்ந்தபாடில்லை. ஏனெனில் தானியச் சரக்கு புயலால் பாதிக்கப்படாமல் பத்திரமாகப் போய்ச் சேர்ந்துவிட்டது! 150 டாலர் வீணாகியதே என்று வருந்திக் கவலைப்பட்டார். இதுவே அவரைப் படுக்கையில் தள்ளியது.

பணத்தாசையும், பணத்தைப் பற்றிய அதிகக் கவலையும் ஐம்பத்து மூன்றாவது வயதிலேயே ராக்ஃபெல்லரைக் கிழவராக்கிவிட்டன. அவரை அப்போது கண்டவர்கள், 'இனி இவர் அதிக நாட்கள் உயிர் வாழ மாட்டார்' என்றே எண்ணினார்கள்.

பிற்காலத்தில் பெரும் கொடை வள்ளலாக மாறிய ராக்ஃபெல்லர்தான் இவர். தமது செல்வத்தை வாரி வாரி வழங்கி, தமது மன நோயையும் உடல் நோயையும் அவர் குணப்படுத்திக் கொண்டார்.

ராக்ஃபெல்லர் நிறுவனம் பிரசித்தி பெற்றது. விஞ்ஞானஆராய்ச்சி, கல்வித் துறை, நோய்கட்டுப்பாடு, உணவு உற்பத்தி இப்படி எத்தனையோ துறைகளுக்கு ராக்ஃபெல்லர் நிறுவனம் பண உதவி செய்து தொண்டு புரிந்து வருகிறது. இன்றோ நாளையோ என்றிருந்த ராக்ஃபெல்லர் கவலையை விட்டொழித்த பிறகு தமது தொண்ணூற்றெட்டாம் வயது வரை வாழ்ந்தார்!

ஆதாரம்: டேல் கார்னெகியின் புத்தகம். தகவல்: ஏ. சங்கரன்

அதை விடுவானேன்?

கிரேக்க நாட்டைச் சேர்ந்த அறிஞர் ஒருவருக்கு, அவர் தவறு ஏதும் செய்யாதிருந்தும், மரண தண்டனை விதிக்கப்பட்டு விட்டது. தண்டனையிலிருந்து எப்படித் தப்புவது என்று யோசித்தார். பிறகு மன்னனை நேரில் போய்ப் பார்த்து, "எனக்கு ஆறு மாத அவகாசம் கொடுங்கள். அதற்குள் நான்



உங்கள் பட்டத்துக் குதிரைக்குப் பறக்கக் கற்றுக் கொடுத்து விடுகிறேன்" என்று கேட்டுக் கொண்டார். மன்னனும் இதற்குச் சம்மதித்தான்.

அவர் இப்படியொரு நிபந்தனையை ஏற்றுக்கொண்டு வீடு வந்ததைக் கேட்டு அவரது மனைவி மனமுடைந்து போனாள். "குதிரையாவது பறப்பதாவது! அதுவும் ஆறு மாதங்களுக்குள்! இப்படியொரு முட்டாள்தனமான நிபந்தனைக்குச் சம்மதித்திருக்கிறீர்களே!" என்று கேட்டாள்.

"அட பைத்தியமே! நான் யோசிக்காமல் எதையும் ஒப்புக் கொள்வேனா? யோசித்துத்தான் ஆறு மாத தவணை கேட்டிருக்கிறேன். அந்த ஆறு மாதங்களுக்குள் நான் இறந்து போகலாம். அல்லது அரசனுக்கே மரணம் சம்பவிக்கலாம்; அதுவுமில்லாவிட்டால் அந்தப் பட்டத்துக் குதிரை மண்டையைப் போடலாம்; இப்படி எதுவுமே நேரவில்லையென்றால் யார் கண்டது - குதிரை பறக்கவே ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாமே?... எதற்கும் கிடைக்கிற அந்த ஆறு மாதத் தவணையை விடுவானேன் என்பதனால்தான் ஒப்புக் கொண்டேனாக்கும்!" - ராஜா

சொகுசான சிறைவாசம்!



- சம்பத்குமாரி ஆதாரம்: 'கரண்ட்'

அமெரிக்காவில் பெண் கைதிகளுக்காகத் தனியே ஒரு சிறைச்சாலை கட்டப்பட்டுள்ளது. இதைக் கட்ட ஆன செலவு ஏழரைக் கோடி ரூபாய்! இந்தச் சிறைச்சாலையில் 679 வசதியான மெத்தைகள் கொண்ட படுக்கைகள், உலாவர ஐம்பது ஏக்கர் பரப்புள்ள பூந்தோட்டம், டென்னிஸ் மைதானங்கள், ஓர் அழகு நிலையம், இவையெல்லாம் உண்டு. இங்குள்ள ஜன்னல்களுக்குக் கம்பிகள் கிடையாது.

இவ்வளவு வசதிகள் அளித்த பின் யார்தான் தப்பிச் செல்வார்கள் என்ற எண்ணமோ என்னவோ?

ஆந்திரப் பிரதேச அரசாங்கம் சிறைக் கைதிகளுக்கு, அவர்கள் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கும் போது நல்லபடியாக நடந்து கொள்ளும் பட்சத்தில், ஒரு மாதம் 'லீவ்' கொடுப்பதென்று முடிவு செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது. தமிழ் நாட்டிலும் இம்முறையைப் பின்பற்றுவார்களானால் என்ன நடக்கும் என்று இதோ ஒரு கற்பனை!

சிறைச்சாலை என்ன செய்யாது?

முகுந்தன்





ஐ. ஜி. (சிறைகள்)
சென்னை, 2–9–71

தலைமை அதிகாரி,
கோவை மத்திய சிறைச்சாலை

ஐயா,

தங்களது மேற்பார்வையில் இருந்து வரும் கைதிகளில் எத்தனை பேருக்கு விடுப்பு (லீவு) வழங்கப்பட்டது, எப்போது அவர்கள் திரும்பவும் சிறைக்கு வந்து சேர்ந்தார்கள் என்பது குறித்து எமக்கு உடனே தெரிவிக்குமாறு வேண்டுகிறோம். இப்படிக்கு,

ஐ. ஜி. (சிறைகள்)



கோவை மத்திய சிறைச்சாலை
கோவை, 6–9–71

ஐ. ஜி. (சிறைகள்)
சென்னை

ஐயா,

தங்கள் கடிதம்.

எங்களது சிறையில் பின்வரும் கைதிகள் விடுப்பு (லீவு) பெறத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள்.

1. 'பிளேட்' பக்கிரி
2. 'அறுப்பு' கண்ணாயிரம்
3. 'தொர்சாமி' எனப்படும் துரை
4. 'பிச்சுவா' பீர்முகம்மது

மேற்படி நபர்கள் யாருக்கும் இது வரை லீவு அளிக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இப்படிக்கு,

தலைமை அதிகாரி



ஐ. ஜி. (சிறைகள்)
சென்னை, 17–9–71

தலைமை அதிகாரி,
கோவை மத்திய சிறைச்சாலை

ஐயா,

தங்கள் 6–9–71 கடிதம் கிடைக்கப் பெற்றோம்.

லீவு பெறத் தகுதி பெற்றிருந்தும், தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த நபர்களுக்கு லீவு தரப்படாதது முறையல்ல என்று கருதுகிறோம். கைதிகளின் நியாயமான உரிமைகளை மறுப்பதற்கில்லையாதலால், உடனடியாக அந்த நான்கு நபர்களுக்கும் விடுப்பு கொடுத்தனுப்புமாறு கோருகிறோம்.

இப்படிக்கு,
ஐ-ஜி. (சிறைகள்)

ஐ. ஜி. (சிறைகள்).
சென்னை, 21–9–71

தலைமை அதிகாரி,
கோவை மத்தியசிறைச்சாலை

ஐயா,

எங்களது 17 – 9 – 71 தேதியிட்ட கடிதத்தைத்



தங்களது கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

அந்த நான்கு கைதிகளுக்கும் விடுப்பு கொடுக்கப்பட்டதா இல்லையா என்பது குறித்து இது நாள் வரை எங்களுக்குத் தகவல் எதும் இல்லை. எனவே, உடனடியாகத் தகவல் அனுப்பவும். இப்படிக்கு,

ஐ.ஜி. (சிறைகள்)

கோவை மத்திய சிறைச்சாலை
கோவை, 23 – 9 – 71

ஐ. ஜி. (சிறைகள்)
சென்னை

ஐயா,

பொருள்: கைதிகளுக்கு விடுப்பு வழங்குதல்
பார்க்க: தங்களது 17–9–71 கடிதம்.

எங்களது முந்தைய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்த நான்கு கைதிகளும் விடுப்பில் போக விரும்பவில்லையாதலால் அவர்களுக்கு விடுப்பு வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இப்படிக்கு,

தலைமை அதிகாரி

ஐ. ஜி. (சிறைகள்)
சென்னை, 28–9–71

தலைமை அதிகாரி,
கோவை மத்திய சிறைச்சாலை

ஐயா,

தங்களது 23–9–71 கடிதம்.

கைதிகள் விடுப்பில் போக விரும்பவில்லை என்று கூறியிருக்கிறீர்கள். அதற்கான காரணங்களை உடனே ஆராய்ந்து எங்களுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கக் கோருகிறோம்.

தங்களது அறிக்கையை இந்த வார இறுதிக்குள் எதிர்பார்க்கிறோம். இப்படிக்கு,

ஐ.ஜி. (சிறைகள்)

கோவை மத்திய சிறைச்சாலை,
கோவை, 2 – 10 – 71


ஐ. ஜி. (சிறைகள்)
சென்னை

ஐயா,

தங்களது 28–9–71 கடிதத்தில் கோரியிருந்தபடி, கைதிகள் விடுப்பில் போக விரும்பாததற்கான காரணங்களை ஆராய்ந்தோம். எங்களது கண்டுபிடிப்புகள் வருமாறு:

1. 'பிளேட்' பக்கிரி உள்ளே வரும்போது யாரிடமோ ஐந்நூறு ரூபாய் 'புரோ நோட்' மீது கடன் வாங்கி விட்டு வந்திருக்கிறாராம். வெளியே போனால் அந்தக் கடன்காரர் பிடித்துக் கொள்வார் என்று அவர் அஞ்சுவதால் அன்னார் விடுப்பில் போக விரும்பவில்லை.
2. 'அறுப்பு' கண்ணாயிரம் ஒன்பது மாத காலமாகத் தாம் குடியிருக்கும் வீட்டுக்குக் குடிக்கூலி கொடுக்கவில்லையாம். இவர் இங்கே இருப்பதனால் 'ஐயோ பாவம்' என்று அந்த வீட்டுக்காரர் பச்சாத்தாபப்பட்டு இவரது குடும்பத்தினரை வீட்டை விட்டு விரட்டாமல் இருக்கிறாராம். இப்போது போய் நின்றால் ஒன்பது மாத வாடகை பாக்கியையும் கீழே வைத்தாக வேண்டுமே என்பதற்காக, கண்ணாயிரம் விடுப்பு எடுத்துக் கொள்வதில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை.
3. 'தொர்சாமி' கூறும் காரணம் இது: சென்ற தீபாவளிக்கே மனைவிக்குப் பட்டுப் புடவையும், குழந்தைகளுக்கு டெரிலின் சட்டைகளும் வாங்கிக் கொடுப்பதாக இவர் வாக்களித்திருந்தாராம். ஆனால் தீபாவளிக்கு முன்பாகவே அவர் 'உள்ளே' வந்து சேர்ந்து விட்டார். இப்போது தீபாவளிப் பண்டிகை நெருங்கி வருவதால், எங்கே மனைவியும் குழந்தைகளும் பழைய வாக்குறுதியை நினைவுபடுத்தித் தம்மைத் தொந்தரவு செய்வார்களோ என்ற அச்சம் காரணமாக, அவரும் விடுப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.
4. 'பிச்சுவா' பீர் முகம்மது தம்முடைய நண்பர் ஒருவரிடமிருந்து இரவல் வாங்கிய டிரான்ஸிஸ்டரை அந்த நண்பருக்குத் தெரியாமல் மார்வாடி கடையில் அடகு வைத்து விட்டு வந்திருக்கிறாராம். இப்போது வெளியே போனால் நண்பர் பிடித்துக் கொள்வார் என்பதுடன், மேற்படி டிரான்ஸிஸ்டரை மீட்கவும் பீர்முகம்மதிடம் பணம் இல்லையாதலால் விடுப்பு வேண்டாம் என்கிறார்.

இந்த நபர்கள் கூறும் காரணங்கள் நியாயமானவையாகவே தோன்றுவதால், அவர்களது விருப்பத்துக்ிணங்க, அவர்களுக்கு விடுப்பு வழங்காமல் இருந்து விட்டோம் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கிறோம்.



இந்த விரிவான பதில் தங்களுக்குத் திருப்தி அளிக்குமென்று நம்புகிறோம்.

இப்படிக்கு,
தலைமை அதிகாரி

ஐ. ஜி. (சிறைகள்)
சென்னை, 6–10–71

தலைமை அதிகாரி,
கோவை மத்திய சிறைச்சாலை

ஐயா,

தங்களது விரிவான அறிக்கை கிடைக்கப் பெற்றோம்.

நீதி வழங்குவதில் நாம் எப்படிப் பாரபட்ச மற்று நடந்து கொள்கிறோமோ, அதே போல சிறைக் கைதிகளுக்கு நியாயம் வழங்குவதிலும், அவர்களுக்கு உரிமைகள் வழங்குவதிலும் நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

விடுப்பு என்பது கைதிகளுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஒன்று. அதை அவர்கள் பயன்படுத்தியே ஆக வேண்டும். எனவே, சொந்தக் காரணங்கள் எதுவாக இருப்பினும், அவற்றை நாம் ஒதுக்கிவிட்டுச் செயல்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அப்படிச் செய்யத் தவறினால், நாம் கடமை தவறியவர்களாவோம்.

ஆகவே, இந்தக் கடிதம் கண்டவுடன், விடுப்பு பெறத் தகுதி பெற்றிருக்கும் அந்த நான்கு கைதிகளுக்கும் விடுப்புக் கொடுத்து வெளியே அனுப்புமாறு கோருகிறோம்.

இப்படிக்கு,
ஐ.ஜி. (சிறைகள்)

கோவை மத்திய சிறைச்சாலை
கோவை, 9–10–71

ஐ. ஜி. (சிறைகள்)
சென்னை

ஐயா,

தங்களது 6-10-71 கடிதத்தில் கண்டிருந்தபடி, திருவாளர்கள், 'பிளேட்' பக்கிரி, 'அறுப்பு' கண்ணாயிரம், 'தொர்சாமி', 'பிச்சுவா' பீர்முகம்மது ஆகிய நால்வருக்கும் 8–10–71 முதல் கட்டாயமாக ஒரு மாத விடுப்பு கொடுத்து வெளியே அனுப்பியிருக்கிறோம் என்பதை அறியவும்.

இப்படிக்கு,
தலைமை அதிகாரி

மூன்று வாரங்களுக்குப் பிறகு கூடிய சட்ட மன்றத்தில் :

எதிர்க்கட்சி உறுப்பினர்: கோவை மாநகரில் கடந்த பதினைந்து நாட்களாகக் குற்றங்கள் பெருமளவில் அதிகரித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்தக் குற்றங்களின் தன்மையையும், அவை சம்பந்தப்பட்ட முழு விவரங்களையும் அவையினருக்கு எடுத்துச் சொல்வாரா ?...

சிறைத்துறை அமைச்சர்: மதிப்புக்குரிய உறுப்பினர் குறிப்பிட்டது உண்மைதான். ஆனால் அவர் கூறியது போலக் குற்றங்கள் 'பெருமளவில் அதிகரிக்க'வில்லை என்பதனைச் சுட்டிக்காட்ட வேண்டுவது எனது பொறுப்பு வாய்ந்த கடமையாகிறது. கடந்த மூன்று வாரங்களில் குறிப்பிடும்படியாக நான்கு குற்றங்களே கோவை நகரில் நிகழ்ந்துள்ளன.

எ. க. உறுப்பினர்: அவை என்னவென்று நான் அறியலாமா ?

சி. து. அமைச்சர்: அவசரப்படாதீர்கள், இதோ நானே சொல்கிறேன்.

முதலாவது, வாங்கிய கடனைத் திருப்பிக் கேட்டதில் வாக்குவாதம் முற்றி, அடிதடியாகி, ஒரு நபர் பலத்த காயத்துக்கு உள்ளானார். அவர் தற்சமயம் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இரண்டாவது, வீட்டுச் சொந்தக்காரருக்கும் குடியிருப்பவருக்குமிடையே நிகழ்ந்த தகராறு ஆகும். குடியிருந்தவர், வீட்டுக்காரரைப் பிளேடால் கீறி அறுத்துக் காயப்படுத்தியிருக்கிறார். காயம் பட்டவரும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூன்றாவது, பிரபல ஜவுளி வியாபாரிகளான 'பகாசுரா சில்க் ஸ்டோர்ஸ்' கடைக்குள் ஒருவர் புகுந்து பட்டுப் புடவைகளையும் டெரிலின் சட்டைகளையும் திருடிச் சென்றிருக்கிறார்.

நான்காவது, ஒரு மார்வாடிக் கடையில் திருட்டு நடந்திருக்கிறது. அங்கே அடகு வைக்கப்பட்டிருந்த டிரான்சிஸ்டரை ஒருவர் பட்டப் பகலில் வந்து அடித்துக் கொண்டு போயிருக்கிறார்.

இந்த நான்கு குற்றங்களைத் தவிர, குறிப்பிடும்படியாக வேறு ஏதும் நடந்துவிடவில்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எ. க. உறுப்பினர்: இந்த நான்கு குற்றங்களிலும் சம்பந்தப்பட்டவர்கள், சிறையிலிருந்து விடுப்பு பெற்று வந்தவர்கள் என்று கூறப்படுகிறதே, அது உண்மைதானா?

சி. து. அமைச்சர் : உண்மைதான். அவர்கள் விடுப்பில் வந்திருப்பவர்கள்தான். வீண் பொழுதுபோக்க வேண்டாமே என்பதற்காக இப்படியெல்லாம் செய்தார்களோ என்னவோ ! **(சபையில் சிரிப்பு)**

எ. க. உறுப்பினர்: இது அநியாயம் ! கைதிகள் விடுப்பு பெறும் இந்த விதி முறை நல்லதல்ல ! இதை மாற்றியே ஆகவேண்டும்!

முதல்வர் (குறுக்கிட்டு): உறுப்பினர் ஆத்திரப்படக் கூடாது. இது பிற்பட்டோர் நலம் விழையும் அரசு. சுருக்கமாகச் சொன்னால், சாதாரணமானவர்களால் – சாமானியர்களுக்காக – நடத்தப்படும் சமதர்ம அரசு. சிறைக் கைதிகளானாலும் அவர்களும் மனிதர்களே. அவர்களுக்குரிய உரிமைகளை நாம் மதித்துத் தான் ஆக வேண்டும். இதைப் புரிந்து கொள்ளாமல் எதிர்ப்பவர்கள், மண்மூடிப் போன சம்பிரதாயங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவர்கள், மேட்டுக்குடி மக்கள்! அவர்கள் என்னதான் எதிர்த்திட்டாலும், இந்த அரசு குறிப்பிட்ட சட்டத்திலும் விதிமுறைகளிலும் எந்தவித மாற்றத்தையும் செய்யத் துணிந்திடாது என்பதனை இந்த அவையிலே இந்த நேரத்திலே பெருமையுடன் தெரிவித்துக் கொள்வதிலே பேருவகை அடைகிறேன்.

(சபையில் கைதட்டல், மகிழ்ச்சி ஒலி)


எதிர்க்கட்சி உறுப்பினர் மயங்கிக் கீழே சாய்கிறார்!

ஸ்பென்ஸரின்
ஸி.ஏ.க்யூ
(C.A.Q)
இருமல் மற்றும்
ஜலதோஷத்துக்கு.
திரவ வடிவிலும்
மாத்திரையாகவும்
கிடைக்கும்.

ஸ்பென்ஸர் &
கம். லிட்.,
சென்னை & கிளைகள்.

மூல நோயை
முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
— ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

ஆண்களின்
தேவைகளை
நிறைவேற்றுகிறது
ஒகாஸா




வாழ்விலே வெற்றி காண்பதற்கு வேண்டிய வலிமையை ஆண்களுக்கு அளிக்கிறது ஒகாஸா. வயதுக்கு மிஞ்சிய முதுமையைத் தடுத்து, ஆரோக்கியத்தைக் கூட்டி இளமைத் துடிப்பையும் வலிமையையும் மீட்டுத் தருகிறது ஒகாஸா. உலகெங்கிலும் இலட்சக் கணக்கான வயது வந்தவர்கள் இன்று ஒகாஸா சாப்பிடுகிறார்கள். இழந்த வலிமையை மீட்டுத் தரும் நவீன-டானிக் மாத்திரைகள் அவை.

ஒகாஸா-ஹார்மோ-பார்மா லிமிடெடின்
லண்டன்-பெர்லின் தயாரிப்பு.

எல்லா பிரபல மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது. அல்லது நேராகவும் பெறலாம்.

OKASA CO. PVT. LTD.
P. O. BOX 396, BOMBAY-1.


CU 20



இன்று பால் கிடைக்கவில்லையா?

பால்காரர் வராவிட்டால், பால் பொங்கி வழிந்து விட்டால், பால் தீய்ந்து போனால், பால் திரிந்து போனால், பாலைக் குழந்தை கொட்டிவிட்டால், பால் வண்டி வராவிட்டால், கவலைப்படாதீர்கள்.

அமுல் மில்க் பவுடர் உதவும்
அது முழுமையான பாலுக்கு ஈடானது



அமுல் மில்க் பவுடர் எளிதில் கரையக்கூடியது

10 டேபிள்ஸ்பூன் முழு அளவு அமுல் மில்க் பவுடரை சிறிது வெந்நீரில் கூழ்போல் கரைத்துக் கொள்ளுங்கள். பின்னர் அதில் வெந்நீர் சேர்த்து, ஒரு லிட்டர் பால் ஆக்குங்கள். ஒரே ஒரு கோப்பை (¼ லிட்டர்) பால் தயாரிக்க, 2½ டேபிள் ஸ்பூன் முழு அளவு அமுல் மில்க் பவுடரைக் கரைத்தால் போதும்.

கெட்டியான ஆடைத் தயிர் தயாரிக்கலாம்

அமுல் மில்க் பவுடரால் தயாரித்த பாலை எடுத்துக் கொள்ளுங்கள். அதைக் கொதிக்கக் கொண்டு வாருங்கள். இளம் சூடாகும் வரை குளிர விடுங்கள். ½ அல்லது 1 டீஸ்பூன் அளவு நல்ல தயிரை அதில் விட்டுக் கலக்குங்கள். படிய விடுங்கள்.

இனிப்புப் பண்டங்களும் புட்டிங்குகளும் தயாரிக்கலாம்

இன்சுவையுள்ள பால் பானங்கள், அல்வா, மற்றும் இதர இனிப்புப் பண்டங்களை அமுல் மில்க் பவுடரைக் கொண்டு தயாரிக்கலாம்

அமுல் மில்க் பவுடர்

ஆரோக்கியமான நல்ல பாலை அமோகமாகத் தருகிறது.

இவர் பாராட்டுக் குரியவர்




சிறு வயதிலேயே — வயது இருபத்தொன்று — பற்பல நற்குணங்களைத் தன்னுள் அடக்கி வைத்திருப்பவர் திரு இரவிகுமார்.

இதோ, இவரது அறிவுக்கும், அடக்கத்துக்கும் சான்றுகள்: தன் முதல் வகுப்பிலிருந்து, பள்ளி இறுதி வகுப்பு வரை பள்ளியில் முதன்மையாகத் தேறி, ஏழாவது வகுப்பு மாகாணத் தேர்வில், மாகாணத்துக்கே முதன்மையாகத் தேறித் தம் பள்ளிக்குப் பெருமை சேர்த்தவர் இவர். மேலும், சொற்போர் போட்டி, கட்டுரைப் போட்டி முதலியவற்றில் தம் பள்ளிக்குக் கேடயங்கள் பெற்றுத் தந்த பெருமை இவரைச் சாரும். இவர் பரிசுகளாக வாங்கியுள்ள புத்தகங்களைக் கொண்டு ஒரு நூல் நிலையமே திறக்கலாம். ஆனால் இவர் பல புத்தகங்களைத் தம் சக ஏழை நண்பர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார்.

இவரது இரக்க மனப்பான்மைக்கு இதோ ஒரு சம்பவம். ஒரு முறை இவர் கல்லூரிக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது வழியில் ஒரு பையன் ஸ்கூட்டரில் அடிபட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஸ்கூட்டர்க்காரரோ ஓடி விட்டார். சுற்றியிருந்தவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனரே ஒழிய யாரும் முதல் உதவி செய்யவில்லை. சைக்கிளிலிருந்து கீழே இறங்கிய இவர், விடுவிடுவென்று தம் சட்டையைக் கழற்றி விட்டுத் தம் பனியனை எடுத்து அடிபட்டிருந்த இடத்தை நன்றாகக் கட்டி, அந்தப் பக்கம் சென்று கொண்டிருந்த ஓர் ஆட்டோரிக்ஷாவை நிறுத்தி அருகிலிருந்த மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை முடிந்த பிறகு அவனை வீடு வரையில் பத்திரமாகக் கொண்டு சேர்த்து விட்டுத் திரும்பினார். இதற்கு இவருக்குக் கிடைத்த பரிசு — விபத்து நடந்த இடத்தில் இவர் விட்டுச் சென்ற சைக்கிளைக் காணோம்!

இப்பொழுது பொறி இயல் (எலக்ட்ரானிக்ஸ்) நான்காம் ஆண்டு படித்து வரும் இவர், இன்றும் தம் ஆரம்பப் பள்ளி ஆசிரியரையோ, உயர்நிலைப் பள்ளி ஆசிரியரையோ கண்டால் தலைவணங்கத் தவறுவதில்லை. அகில இந்திய அறிவு உபகாரச் சம்பளம் (National Merit scholarship) பெற்று வரும் இவர் அதில் ஒரு பங்கை ஏழை மாணவர்கள் இருவருக்கு வழங்கி வருகிறார். அரசியலையும் திரைப் படங்களையும் அறவே வெறுக்கும் இவரது பொழுது போக்குகள் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி போதிப்பது, உலகத் தலைவர்களின் படங்களை வரைந்து, அதில் அவர்களைச் சந்திக்க வாய்ப்பு நேரும்போது கையொப்பம் பெறுவது முதலியன.



இவரது மேஜையின் மீது காந்திஜியின் படத்துக்கு அருகில் கொலுவிருப்பது இராஜாஜியின் படம்.

— ஒரு நண்பர்

கொலை......கொலை!

சீனாவில் மாசே துங்குடன் கைகுலுக்கப் போகிறார் நிக்ஸன். ஆனால் சீனாவில் நடப்பது எவ்வளவு பயங்கர ஆட்சி!

ஜனாதிபதி நிக்சனின் சீன உறவுக் கொள்கையைக் கேள்விப்பட்டவுடன், டாக்டர் ரிச்சர்ட் வாக்கர் என்ற அறிஞர் அடியிருக்கும் பயங்கரப் புள்ளி விவரத்தை வெளியிட்டிருக்கிறார்:

சீன உள்நாட்டுப் போர், சீன-ஜப்பான் யுத்தம், கொரியப் போர் ஆகியவற்றில் கொல்லப்பட்ட சீனர் தொகை முப்பது லட்சத்துக்கு அதிகம்.

1949-52ல் புகுத்தப்பட்ட நிலச் சீர்திருத்தப் புரட்சியில் கொல்லப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் "பல லட்சம் பேர்."

1958-61ல் பிரகடனமான தீவிரப் புரட்சியில் (Great leap Forward) கொல்லுண்டோர் 20 லட்சம்.

1966 - 69ல் கலாச்சாரப் புரட்சிகளில் படுகொலையானோர் 5 லட்சம்.

திபெத் முதலிய பிரதேசங்களில் முடிக்கப்பட்டு பலியானோர் 10 லட்சம்.


கட்டாய வேலை வாங்கும் முகாம்களில் கஷ்டம் தாங்காமல் மடிந்தோர் தொகை 250 லட்சம்.

அரசியல் காரணங்களுக்காகவும், பிற்போக்குவாதிகள் என்பதற்காகவும் 1949 முதல் 1958 வரை அழிக்கப்பட்டோர் 300 லட்சம்.

ரிச்சர்ட் வாக்கர் தென் கரோலினாப் பல்கலைக் கழகப் பேராசிரியர். இவர் சீன வரலாற்று ஆராய்ச்சியாளரும் ஆவார்.


1949-52 நிலப்பகிர் இயக்கங்களின் விளைவாக பத்து லட்சம் பேருக்குமேல் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று மாசே துங்கே ஒருமுறை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

— க. கு. நா.



புதிது

POSHAK VANASPATI



கவர்ச்சியான
1 கி. கி. பாலிதீன்
ஜாடியிலும்
கிடைக்கிறது.

போஷக் வனஸ்பதி

சுத்தமான தாவர
எண்ணெயிலிருந்து
தயாரிக்கப்படுகிறது
இது A & D
விடமின் சத்து
நிறைந்தது.

தயாரிப்பாளர்கள்:

T. G. லக்ஷ்மய்ய ஸெட்டி & சன்ஸ்
அதோனி (ஆந்திரம்)

பிரதிநிதித்துவம் இல்லாத இடங்களிலிருந்து
விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

Chari



இந்துக்களின் புண்ணியத் தலமாகிய இராமேசுவரத்தில் ஆடி அமாவாசையன்று வடஆர்க்காடு, இராயவேலூர் பக்தர்களும் வியாபாரிகளும் ரூ. 5000க்கு மேற்பட்ட செலவில் வேண்டிய பொருட்களை யெல்லாம் அங்கிருந்தே கொண்டு வந்து பதினாறு வகை கறுடன் கூடிய "அலங்காரச் சாப்பாடு" எந்த வேறுபாடும் இல்லாமல் யாவருக்கும் அளித்தனர்.

இராமேசுவரம் தீவு சிறியது; இயற்கை வளம் நிரம்பப் பெறாதது. பெரிய உணவு விடுதிகளுக்கு அங்கு வாய்ப்பில்லை. விழாக் காலங்களில் தரிசனத்துக்கு இந்தியாவெங்



கிலும் இருந்து வரும் கூட்டத்துக்கு அங்கு சைவ உணவு கிடைக்க வழியில்லை.

வேலூர் நகை வியாபாரிகள் இருவாளர்கள் ஏ. எஸ். கே. காசிவிசுவநாதனும், ஜே. துரைசாமி செட்டியாரும் சற்றும் பெருமை கொள்ளாமல் இதுதான் முதல் தடவை யென்றும், தகுந்த இட வசதி கிடைத்தால் தீவுக்கு வரும் அனைவருக்கும் உணவளிக்க முடியும் என்றும் அமைதியாகப் பக்தியுணர் வோடு கூறினர். இரவில் இன்னிசை விருந்தும் நடைபெற்றது.

வேலூர் வியாபாரிகளைப் போன்று மற்ற செல்வந்தர்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்தோ அல்லது தனியாகவோ இராமேசுவரத்தில் உணவளித்தால் புண்ணியம் மட்டும் இன்றி மேலும் அநேகர் இராமேசுவரத்தைக் காணும் வாய்ப்பைப் பெறுவர்.

பரமக்குடி,
20–8–71 ப. சண்முகநாதன்.

அம்பாசமுத்திரத்தில் 22–8–71ல் நடைபெற்ற வலது கம்யூனிஸ்ட் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகத் திருநெல்வேலியிலிருந்து ஒரு லாரியில் சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வரும் வழியில் குற்றாலம் சென்று திரும்பும்போது லாரி கவிழ்ந்து இரண்டுபேர் அந்த இடத்திலேயே இறந்துவிட்டனர். ஆறுபேர் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அறுபது பேர்

★ இக் குறியிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

படுகாயமடைந்தனர். அதிர்ச்சியளிக்கக்கூடிய இந்த விபத்துக்குக் காரணம், டிரைவர் குடிபோதையில் இருந்தாராம். (முதல்வர் கவனத்துக்கு: மது வரும் பின்னே; விபத்து வரும் முன்னே) இதில் விசேஷம் என்னவென்றால்



டிரைவர் ஆபத்தின்றித் தப்பிவிட்டார். இறந்தவரில் ஒருவர் ஒரு வருடத்துக்கு முன்பு தான் மணமானவர் என்ற செய்தி நம்மை மேலும் அதிர்ச்சிக்கு ஆளாக்குகிறது.

மேல தேன்களம்
27–8–71 எஸ். எம். சிவதாஸ்

★ ஆங்கிலப் பேரறிஞர் ஆர். எல். ஸ்டீவன்ஸன் படைத்துள்ள அழியாப் புகழ் பெற்ற ஒரு பாத்திரம் டாக்டர் ஜெகில் அண்ட் மிஸ்டர் ஹைட். பகல் முழுவதும் பாரோரிடையே நல்லவனாக நடந்து கொண்டு விட்டு இரவில் முற்றிலும் மாறுபட்டவனாக அடாத செயல்கள் செய்யும் ஒரு மனிதனைப் பற்றிய நாவல் அது. நம் தமிழக முதல்வர் மாண்புமிகு கருணாநிதி சில காலமாகச் செய்துவரும் காரியங்கள் நமக்கு இந்தக் கதாபாத்திரத்தைத்தான் நினைவுபடுத்துகின்றன.

சான்றாக, மதுவிலக்கை 'நிறுத்திவைக்க' முடிவு செய்துள்ள அவர் ஒருபுறம் கள்ளுக் கடைகளைத் திறந்து விட்டு விட்டு இன்னொரு புறம் மதுவினால் உண்டாகும் தீமைகளைப் பிரசாரம் செய்யப் போவதாகக் கூறுகிறார்.

அதே மாதிரி இன்னொன்று உதாரணத்துக்கு: முதல்வர் டாக்டர் பட்டம் பெற்றதை யொட்டி சென்னையில் தி. மு. க. மாணவர் கிளை நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் பேசியபோது அவர் மாணவ மன்றங்கள் கூடி, மாநில சுயாட்சி, தாய் மொழியில் கல்வி, காவிரி நீர்த் தாவா, அரசியல் சாசனத் திருத்தம்,



இன்னும் இவை போன்ற தலைப்புக்களை விவாதித்து மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றார். பின்னர் சிறிது நாட்கள் கழித்து மன்னார்குடியில் மாணவரிடையே பேசும் போது மாணவர்கள் அரசியலினின்றும் விலகியிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

சொல் ஒன்று, செயல் ஒன்று என்று கேள்விப்பட்டுள்ள நாம் இப்போது சொல்லே பலதரப்பட்டிருப்பதைக் கண்டு மனவேதனையடையாது இருக்க முடியாது.

உத்தமபாளையம்,
28–8–71 எஸ். வெங்கடசுப்பிரமணியன்.

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

யோசியுங்கள்




முதலில் இந்தக்
குழந்தையை நன்றாக
வளர்க்க வேண்டாமா?

சத்துமிக்க பால், ஊட்டம் தரும் உணவு, நல்ல உடை, விளையாட பொம்மைகள், புத்தகங்கள்... இவையனைத்தும் உங்கள் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும். அதுதானே உங்கள் ஆசை! கஷ்டமோ, நஷ்டமோ இவையனைத்தையும் உங்கள் குழந்தைக்கு அளிக்கத்தான் போகிறீர்கள். ஆனால், இன்னொரு குழந்தை உடனே பிறந்தால் இது முடியுமா? அடுத்த குழந்தை உடனே பிறப்பதைத் தவிர்க்கத்தானே விரும்புவீர்கள்!

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ரப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3

இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை



நிரோத்


உபயோகியுங்கள்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத்.

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது.

ADP 71/111

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



லின்டாஸ்-L. 62-140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு